SIVAN ARUL ILLAM

2022




# சிவனருள்

## சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனருள்

## சிறப்பு மலர்



வெளியீடு

**மலர் வெளியீட்டுக் குழு**

**சிவனருள் இல்லம்**

திருக்கேதீச்சரம்

**05.07.2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


இதழின் பெயர் : **சிவனருள் சிறப்பு மலர்**

வகை : சஞ்சிகை

மலர்க்குழு :

ஆலோசகர் : Dr.J. நமசிவாயம் (நிறுவனர்)

இதழாசிரியர் : திரு.S. செல்வரஞ்சன் (பணிப்பாளர்)

ஒழுங்குபடுத்தல் : செல்வி.T. தேவகி

கணினி வடிவமைப்பாளர் : திரு.S. ஸ்ரீமுகுந்தன்

ஒப்பீட்டுப் பார்த்தல் : செல்வி.S. சுதர்ஜினி

தகவல் சேகரிப்பாளர் : திருமதி.S. பிரபாகினி

படத்தொகுப்பு : செல்வன். கு.தனுசன்

: செல்வன். ச.ஈழத்தீபன்

பதிப்பாண்டு : 2022

பிரதிகள் : 250

அளவு : A4

பக்கங்கள் : 121

வெளியீடு : சிவனருள் இல்லம்

திருக்கேதீச்சரம், மன்னார்

023 205 0804

Sivanarulillamtkw@yahoo.com

அச்சுப்பதிப்பு : வாணி கணனிப் பதிப்பகம்

இல.85, கந்தசாமி கோவில் வீதி,

வவுனியா.

024 2223658



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 01. | பணிக்கூற்று, தூரநோக்கு | 5 |
| 02. | சிவனருள் இல்ல கீதம் | 6 |
| 03. | தமிழ்த் தாய் வாழ்த்து | 8 |
| 04. | எங்கள் நிறுவனர்கள். | |
| 05. | எங்கள் பணிப்பாளர் | |
| 06. | Board of Directors | 9 |
| 07. | ஆசிச் செய்தி (பிரதம குருக்கள், திருக்கேதிச்சரம்) | 11 |
| 08. | ஆசிச் செய்தி (ஆணையாளர், வடமாகாணம்) | 12 |
| 09. | வாழ்த்துச் செய்தி (பிரதேச செயலாளர், மன்னார்) | 13 |
| 10. | வாழ்த்துச் செய்தி (அதிபர், மன்/கௌரியம்பாள் தமிழ் மகா.வி) | 14 |
| 11. | வாழ்த்துச் செய்தி (சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தர், மன்னார்) | 15 |
| 12. | பணிப்பாளரின் பார்வையில் சிவனருள் இல்லம் | 16 |
| 13. | Trustees Report | 19 |
| 14. | நினைவுகளின் ஒரு பசுமைப் பயணம் | 23 |
| 15. | மலரும் நினைவுகள் கவிதை | 25 |
| 16. | கமலக்கொடி அம்பாள் நூலகம் சிவனருள் இல்லம் | 27 |
| 17. | மும்மணிகள் - கவிதை | 29 |
| 18. | சிவாலயக் கட்டடக்கலை வளர்ச்சியில் திருக்கேதீஸ்வர ஆலயம் | 30 |
| 19. | ஏற்றிவிட்ட ஏணி | 34 |
| 20. | குயிலனின் பேனா முனையிலிருந்து சிந்திய முத்துக்கள் | 38 |
| 21. | சிந்தனைத் துளிகள் | 39 |
| 22. | வாழ்த்துகின்றேன் | 40 |
| 23. | விடுகதைகளும் அதன் விடைகள் | 41 |
| 24. | சிவனருளால் உதித்த சிவனருள் இல்லம் | 43 |
| 25. | விவேகானந்தரின் பொன்மொழிகள் | 44 |
| 26. | திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிகளில் சிவனருள் இல்லத்தின் பங்களிப்பு | 46 |
| 27. | நான் கண்ட சிகிரியா | 52 |
| 28. | பூ பூக்கும் உதடுகள் | 54 |
| 29. | இணைய வழிக்கல்வியின் சாதகங்கள் மற்றும் பாதகங்கள் | 55 |
| 30. | தந்தை | 57 |
| 31. | தாய் | 58 |
| 32. | சிவனருளின் கல்விப் பணி | 59 |
| 33. | பொது அறிவு | 63 |
| 34. | நிழலின் நிஜம் | 64 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. நினைவுகளின் நிழல்களாக 67
36. சிவனருள் இல்லத்தோடு இனிய நினைவுகள் 68
37. அவனருளாலே 70
38. ஆறுமுக நாவலர் 71
39. சித்திரம் 72
40. மொட்டுக்கள் மலர 73
41. வெற்றிப் படி 75
42. மாணவர்களுக்கு அழகியற் பாடல்களின் அவசியம் 76
43. வேர் விட்ட வரிசைகள் 80
44. விழிகளின் பார்வை 81
45. சித்திரம் 82
46. எனது கல்விப் பயணம் (மலையகத்திலிருந்து பாலாவி வரை) 83
47. சித்திரம் 87
48. தேடலுடன் திடல் 88
49. எம் நட்புக்கு... 92
50. சிவனருள் உற்பத்திகள் தனியார் நிறுவனத்தின் வரலாறு 93
51. சிவனருள் கிழக்கிலங்கையின் சமூக மேம்பாடு நற்பணிகள் 97
52. சிவனருள் அமைப்பின் மலையகக் கிளை வேலைத்திட்டம் 102
53. சிவனருளும் கோரக்கோயிலும் 105
54. சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால் அவன் அருள் பெற்று.... 106
55. Strategie vision of Sivanarul Hope 107
56. பாராட்டு பரிசில் பெறுவோர் விபரம் 110
57. "திருக்கேதீச்சரம் எனும் தேன்பொந்து" கலைஞர்கள் விபரம்
58. "திருக்கேதீச்சரம் எனும் தேன்பொந்து" நாட்டிய நாடகத்தில் பங்குபற்றும் மாணவர்கள் 117
59. சிவனருள் இல்ல வீட்டுத்திட்ட பயனாளிகள் 119
60. நிகழ்வுகளின் நிழல்கள்
61. பதிவுச் சான்றிதழ்கள் 120
62. திருக்கேதீச்சர வரலாறு ஓவியமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SIVAN ARUL**
**ILLAM**

## விருது வாக்கு (Motto)

*"அன்பே சிவம்"*

## பணிக்கூற்று (Mision)

*"ஆதரவு தேடி வரும் பிள்ளைகளை அரவணைத்து, அவர்களைக் அன்பு காட்டி, கல்வியிலும், ஒழுக்கத்திலும் மேம்பட்டவர்களாகவும், சைவசமய விழுமியங்களைக் கடைப்பிடித்து தமது திறன்களை வளர்த்து வாழ வழிகாட்டல்*

## தூரநோக்கு (Vision)

*"மாறுகின்ற உலகின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய நற்பிரஜைகளைக் கொண்ட சமூகத்தை உருவாக்குதல்."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனருள் இல்ல கீதம்

வாழ்த்துங்கள் வாழ்த்துங்கள் வாழ்த்துங்களேன் எமை
வாயார மனதார வாழ்த்துங்களேன்
வளமான எதிர்காலம் வரவேண்டும் எனச்சொல்லி
வாழ்வாங்கு வாழ வாழ்த்துங்களேன்.

**பல்லவி**

அவனருளாலே அவனியில் ஓங்கும்
சிவனருள் இல்லச் செல்வங்கள் நாங்கள்

**அனுபல்லவி**

கேட்டதை அருளும் கேதீஸ்வர னார்
பதிகொண்டுறையும் பாலாவிக் கரையில்

(அவனருளாலே.....)

**சரணம்**

ஒருகொடி மலராய் ஒருதாய் உறவாய்
ஒருகுடை நிழலில் ஒன்றென வாழும்
பேர்புகழ் ஓங்கும் சிவனருள் இல்லம்
ஓர்குறை யின்றி மகிழுது உள்ளம்

கற்றவர் போற்றும் கருணையின் இல்லம்
அன்பினை அமுதாய் ஊட்டிடும் இல்லம்
நற்றமிழ் வானில் நனிசிறந்து ஓங்க
நன்னெறி காட்டிடும் நம்பிக்கை இல்லம்

(அவனருளாலே.....)

இல்லமும் உள்ளமும் மகிழுது இங்கே
இதுபோல் வாழ்க்கை உலகினில் எங்கே
இல்லை எம்வாழ்வில் இனிமேல் அச்சம்
இனிவருங் காலம் எமக்கே உச்சம்

தந்தையாய் தாயாய் தாங்கிடும் இல்லம்
தன்னிகர் இல்லா தளிர்களின் இல்லம்
மாந்தைச் சிவனார் மனமுவந்து அருள
மாண்புடன் திகழும் சிவனருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் சந்நிதி நிழலினில் வந்தோம்
அன்புடன் பழகும் உறவினைக் கண்டோம்
நமச்சி வாயத்தின் நல்வழி காட்டலில்
பிள்ளைகள் நாங்கள் பெயரினைக் காப்போம

எத்தனை இடர்கள எத்தனை சுமைகள்
அத்தனைக் குள்ளும் உயிர்ப்புடன் நிமிர்ந்தோம்
சத்தியம் செய்வோம் சவால்களை ஏற்போம்
சரித்திரம் படைக்கத் துடிப்புடன் உழைப்போம்

(அவனருளாலே.....)

கல்வியும் கலையும் கணனியும் கற்போம்
நாளைய உலகை நாங்களே நெய்வோம்
புள்ளியாய் சுற்றும் பூமியை ஆய்வோம்
பூமியை அமைதிப் பூங்காவாய்ச் செய்வோம்

கண்ணென எம்மைக் காத்திடும் பெரியோர்
கனவினை வெல்வோம் வாழ்வினில் நாங்கள்
எண்ணருஞ் சாதனை செய்துமே நாளை
இவ்வுலகு ஆளும் மன்னர்கள் ஆவோம்

(அவனருளாலே.....)

**ஆக்கம் : இராமச்சந்திரன் சுரேஸ்**
வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளர்ந்த தனைத்தும் மளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானமறிந்த தனைத்துமறிந்து
வளர்மொழி வாழியவே!

- மகாகவி சுப்பிரமணிய பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனருள் இல்ல நிறுவுனர்கள்



Dr.ஜெயந்திரன் நமசிவாயம்



திருமதி. மஞ்சுளா ஜெயந்திரன்



திரு.சுரேந்திரா சொர்ணலிங்கம்



Dr.ஜெயசிங்கம் ஜெயமோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளர் சிவனருள் இல்லம்




**திரு.செ.செல்வரஞ்சன்** (B.Ed, Hons), (SLPS-1)
(ஓய்வுநிலை அதிபர், அகில இலங்கை சமாதான நீதவான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Board of Directors



Dr. Jayendran
Namasivayam



Mrs. Manchula
Namasivayam



Dr. Jayasingham
Jayamohan



Dr. Ramasamy
Gajenthirav



Mr. Selvaratnam
Selvaranjan



Mr Kanapathippillai
Thirunavukkarasu
[Our Accountan]



Mrs.Selvarani
Yogarasa



Mrs Thilakavathy
Shanthirakanthan

# Former Directors



Pulavar
A.Thirunavukkarasu



T.P.Manikkavasakar



Mr.N.Thiruganasamanthar



Mr.N.Sivajokarasa



Mrs.I.Kuruparan



Mr.T.Kuruparan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ❖ ORGANIZERS

## ❖ DIRECTOR OF INCHARGE

- Mr Selvaratnam Selvaranjan(JP)

## ❖ BOARD OF DIRECTORS

- Dr Jayendran Namasivayam
- Mrs Manchula Namasivayam
- Dr Jayasingham Jayamohan
- Dr Ramasamy Gajenthirav
- Mr Selvaratnam Selvaranjan(JP)
- Mr Kanapathippillai Thirunavukkarasu
- Mrs Selvarani Yogarasa
- Mrs Thilakavathy Shanthirakanthan

## ❖ FORMER DIRECTORS

- Pulavar.A.Thirunavukkarasu(JP)
- Mr.T.P.Manikkavasakar(Engineer)
- Mr.N.Sivajokarasa (AO of RDHS Mannar)
- Mr.N.Thiruganasamanthar(DS of Nanaddan)
- Mrs.I.Kuruparan(Post Master)
- Mr.T.Kuruparan(Teacher)

## ❖ OFFICE STAFF

- Miss Thevaky Arulrasa [AO]
- Mrs Pirapahini Srikanthan [MA,SK]
- Miss Sutharshini Logeswaran [MA]
- Miss.Nageswaran Sujiththa [MA]

## ❖ GIRLS' HOME WARDEN

- Miss Thayavathy Kandasamy
- Miss Tharsika Ketheeswaran
- Miss Mangalachelvi Suthanthirathas

## ❖ BOYS' HOME WARDEN

- Mr Sivagnanamoorthy Palaniyandi– [AO]
- Mr Mahenthiran Partheepan[MA]
- Mrs Kamalambikai Kankesan [Warden]
- Mr Thayaparan[Warden]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ❖ COOKERS

- Mrs Mangayatkarasi Ramasamy
- Mrs Kamalathevi Santhiran
- Mrs Pakkiyam Sinnaththampi
- Mrs Kalijamma Tholan

## ❖ HOSTEL STAFF (GIRLS)

- Mrs Tharmarani Nagalingam - [AO]
- Miss.Yogeswaran Janany[MA]
- Mrs Saththiya Niththiyanantham – [Warden]

## ❖ HOSTEL STAFF (BOYS)

- Mr Poobalasingam Yogenran– [AO]
- MR Raman Tharsan[MA]
- Mr Atputha selvan Atputha Amalraj

## ❖ TEACHERS

1. Mr. Mr T. Johnsan (Maths)
2. Mr.V.Mayuran (History) B,A(Hons)Geo.sp,PGDE(Merit),M,A,M.Ed(Hons)
3. Mr K. Kopitharan (Hindu Cultural)
4. Mr M.Sureshkumar - (Tamil) BA(hon.), PGD, MED (hon.)
5. Mrs P.Shanthini (Dance)
6. Mr.S.Sundareswaran(Miruthangam)
7. Mr.P.Franklin(ICT)
8. Mrs T.Yasothini – (Music) (BFA) MA
9. Mr P. Kingslee(English) BA
10. Mr V.Karan (Science) B.Sc
11. Mrs.L.Arijani(English)
12. Mrs.G.Samini (Isai Kalaimani) Retired Teacher
13. Miss S.Jalany (Maths)
14. Mr. Suman(Science) B.Sc

## ❖ QUALIFICATION

- University Students – 14
- Communication Technology Students – 07
- E-soft Student – 01
- Technical College Student – 01
- Agriculture Student – 01
- Hotel Management Students – 02
- Factory Student – 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

கௌரியம்பிகை உடனமர்ந்தரும் கேதீச்சரநாதனின் அருளால் குழந்தையும் தெய்வமும் ஒன்று என்பதில் பற்றுறுதி கொண்டோரால் சென்ற கால இயற்கை அனர்த்தம், கொடிய யுத்தம் என்பவற்றால் பாதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தைகள் சிறுவர்கள் போன்றோரைத் தம் குழந்தைகளிலும் மேலான அக்கறையுடன் சிவனருள் இல்லம் என்பதனை நிறுவி பதினேழாவது வருடங்களாக நற்பிரஜைகளை உருவாக்கி சென்ற காலங்களில் பரிசளிப்பு விழாக்களும் குழந்தைகளின் கலை நிகழ்வுகளும் நடைபெற்று வருவதுடன், இந்த ஆண்டு எம்பெருமானின் கும்பாபிஷேக விழாக்காலத்தில் நடைபெறும் பரிசளிப்பு விழாவும், கலைநிகழ்வுகளும் சிறப்புடன் நிகழ வாழ்த்து ஆசி கூறுவதில் பெருமிதம் அடைகிறேன்.

**சிவஸ்ரீ தியாக கருணானந்தக் குருக்கள்**
பிரதமகுரு,
திருக்கேதீச்சரம் ஆலயம்
திருக்கேதீச்சரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வில் சிவனருள் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் சிறார்களுக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மன்னார் மாவட்டத்தில் சமயக் குரவர்களால் பாடப் பெற்ற தலமாகவும், பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகவும் விளங்கும் திருக்கேதீச்சர ஆலயமானது இந்து சமயத்தின் தொன்மையையும் சமய வாழ்வியலையும் எடுத்தியம்புகின்றது.

இவ் ஆலயச் சூழலில் அமைந்துள்ள சிவனருள் சிறுவர் அபிவிருத்தி நிலையமானது சமய பாரம்பரியங்களை கட்டியெழுப்புவதற்கும் சமயத்தினூடாக சமூகத்தினை நல்வழிப்படுத்தும் நோக்கிலும் ஆதரவற்ற சிறுவர்களைப் பராமரிப்பதிலும் முன்னின்று செயற்படுவது வரவேற்கத்தக்கதாகும்.

எதிர்கால சமூகத்தின் தூண்களாக விளங்கும் சிறார்கள் நல்வழிப்படுத்தும் சேவையைச் செய்வதிலும் வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் பெரும் பங்காற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் சேவை சிறப்புக்குரியதாகும்.

இச்சிறுவர் அபிவிருத்தி நிலையம் மேன்மேலும் வளர்ந்து சிறந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு உறுதுணையாக செயற்பட எனது மனமார்ந்த ஆசிகளைத் தெரிவிப்பதுடன் இன்றைய பரிசளிப்பு நிகழ்வில் பங்குபற்றி பரிசில்களைப் பெறும் சிவனருள் சிறுவர் அபிவிருத்தி நிலைய மாணவர்களுக்கு எனது ஆசியினையும் பாராட்டுக்களையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இ.குருபரன்**
ஆணையாளர்.
நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள்
திணைக்களம்.வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

இலங்கையின் தொன்மை வாய்ந்ததும் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான திருக்கேதீச்சர ஆலய சூழலில் அமையப்பெற்ற சிவனருள் இல்லத்தின் பரிசளிப்பு விழா - 2022 மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

உள்நாட்டு யுத்தத்தினாலும் சுனாமியினால் தாய் தந்தையாரை இழந்த பிள்ளைகள் மற்றும் பாதுகாப்புத் தேவை கோரும் பிள்ளைகளுக்கு அடைக்கலம் கொடுத்து ஆளுமையுள்ள மனிதர்களாக உருவாக்கிய அறிவியல் இல்லமாக சிவனருள் இல்லம் திகழ்கின்றது. கடந்த 17 வருடங்களாக வடமாகாணத்தில் தேவை கோரும் சிறார்களை அரவணைத்து உணவளித்து அறிவூட்டி பலநூறு இளையோரை சமூகத்திற்கு தந்துள்ளவர்கள் என்றால் மிகையாகாது.

சகல வசதிகளுடனும் கல்வி வசதிகளை பொருத்தமான முறையில் வழங்கி சாதாரண தர பரீட்சை மற்றும் உயர்தர பரீட்சைகளில் பலர் சித்தியடைந்திருப்பது மட்டுமன்றி மாவட்ட மாகாண நிலையில் முன்னிலை பெற்றிருப்பதும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். அத்துடன் 14 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்று பட்டதாரிகளாக மிளிர்கின்றார்கள் என்பது இல்லத்தின் சாதனையாகும்.

இவ்வாறான சிறப்புக்கள் மிக்க இல்லத்தை நடாத்திவரும் Dr.நமசிவாயம், Dr.ஜெயமோகம் இருவரையும் பாராட்டுவதுடன் அவர்களது சேவைக்கு மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அதே போல் இந்நிறுவனத்தின் பணிப்பாளரும் ஓய்வுபெற்ற அதிபருமாகிய திரு.S.செல்வரஞ்சன் அவர்களின் அர்ப்பணிப்பான சேவையையும் நிர்வாக செயற்பாட்டையும் பாராட்டுகின்றேன்.

மாணவர்களின் ஆற்றல்களுக்கு மகுடம் சூழ கௌரவிக்கும் இப்பரிசளிப்பு விழாவானது இல்லத்து மாணவர்களுக்கான ஊக்கப்படுத்தும் செயற்பாடாக அமைகின்றது. மாணவர்களின் திருக்கேதீச்சர வரலாறு நாட்டிய அரங்கேற்றமானது அவர்களின் பல்துறை ஆற்றல்களின் வெளிப்பாடாக அமைவதுடன் ஓர் சிறப்புமிக்க வரலாற்றுப் பதிவாக அமைந்துள்ளது. சிவனருள் இல்லம் மென்மேலும் வளர்ச்சியடைந்து சமூக சேவையின் உன்னத நிலையை அடைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ம.பிரதீப்**
பிரதேச செயலாளர்,
மன்னார் நகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

சிவனருள் இல்லப் பிள்ளைகளின் திறமைகளைப் பாராட்டி நடைபெறும் பரிசளிப்பு விழா சிறப்புற அமைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் பரிசில்கள் பெறும் பிள்ளைகள் அனைவருமே எமது மன்/கௌரியம்பாள் தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயில்கின்றவர்கள் என்ற வகையில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் இப் பிள்ளைகள் ஆற்றுகை செய்யும் "திருக்கேதீச்சரம் என்னும் தேன் பொந்து" என்னும் நாட்டிய நாடகம் சிறப்புற அமையவும் எனது வாழ்த்துக்கள்.

எனவே இந் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி விழாக்காணும் சிவனருள் குடும்பத்தினரை வாழ்த்துவதோடு இதை எல்லாம் பொறுப்பேற்று சிறப்புற அமைத்திருக்கும் சிவனருள் இல்லப் பணிப்பாளர் திரு.செ.செல்வரஞ்சன் அவர்களையும், விசேடமாக சிவனருள் இல்லப் பிள்ளைகளையும் வாழ்த்துகின்றேன்.

**T.கோகிலராஜா** (M.Ed)
அதிபர்
மன்/கௌரியம்பாள் தமிழ் மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

ஈழத்திரு நாட்டிலே நான்கு நாயன்மார்களில் இருவரான திருஞானசம்மந்தர், சுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடல் புகழ்பெற்ற திருத்தலமாக விளங்குகின்ற வடக்கு மாகாணத்தின் மன்னார் மாவட்டத்தின் எழில் கொஞ்சும் பாலாவி தீர்த்தக் கரையினிலே வீற்றிருந்து சைவ மக்களால் போற்றப்படுகின்றதும், ஆறுமுக நாவலர் அவர்களால் மன்னார் மாவட்டத்தின் மாந்தோட்டத்தின் பாலாவியின் கரைமேல் அமர்ந்துள்ள "தேன் பொந்து" என்னும் தலைப்பிலான பரதநாட்டிய நிகழ்ச்சி, மற்றும் பரிசளிப்பு விழாவை நடாத்துகின்ற சிவனருள் இல்ல ஸ்தாபகர்களான Dr.ஜெயேந்திரன் நமசிவாயம், (லண்டன்) மற்றும் Dr.ஜெயசிங்கம் ஜெயமோகன் (அவுஸ்ரேலியா) அவர்களுக்கும், சிவனருள் இல்லத்தை நிர்வகித்து வருகின்ற பணிப்பாளர் திரு.செ.செல்வரஞ்சன் (ஓய்வு பெற்ற அதிபர்) மற்றும், இவர்களுக்கு ஒத்துழைப்பை வழங்கி வருகின்ற பணியாளர் குழாமத்தினருக்கும், குறித்த நிகழ்ச்சியை வடிவமைத்து நடாத்தும் நடன ஆசிரியர் திருமதி வீரசிங்கம் சூரியயாழினி அவர்களுக்கும் முதற்கண் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதில் மனமகிழ்ச்சியடைகின்றேன்.

தானும் தனது குடும்பமும் எல்லா வசதிகளையும் பெற்று வாழ்ந்தால்போதும் எனும் குறுகிய மனநிலையில் வாழும் தற்போதைய சூழலில் கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக நடைபெற்ற போராட்டங்கள் அதன் விளைவாக ஏற்பட்ட பல்வேறு இடப்பெயர்வுகள் போன்ற சொல்லொனாத்துன்பதுயரங்களின் விளைவாக பாதிக்கப்பட்ட எமது சமூகத்தையும் குறிப்பாக எம் இளைஞர் சமுதாயத்தின் பிள்ளைகள் அவர்கள் பெற்றோரை தாய், தந்தையரில் ஒருவரை, உறவுகளை இழந்தது மட்டுமல்ல, அவர்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, வாழ்விடத்தையும் இழந்தனர். இவற்றை இனம் கண்டு அப்பிள்ளைகளை நீதிமன்று மற்றும் திணைக்கள அனுமதியுடன் அனுமதித்து போசித்து பராமரித்து வளர்ப்பதுடன், அவர்களுக்கான கல்வியுடன் பிள்ளைகளின் ஆளுமை விருத்தியுடன் அழகியல் உணர்வையும் வளர்க்க வல்ல கவின்கலையான நாட்டிய நிகழ்ச்சியை "திருக்கேதீச்சரம் எனும் தேன் பொந்து" என்னும் தலைப்பிலும், கூடவே பரிசளிப்பு விழாவையும் தற்போதைய எமது நாட்டுச் சூழலில் நடத்துவதென்பது எப்பேர்ப்பட்ட சவாலான விடயம் என்பதனை நாம் இவ்விடத்தில் சிந்தித்து பார்ப்பது மிகவும் அவசியமாகும்.

தற்போதைய பொருளாதார இக்கட்டான சூழலில் இதுபோன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடாத்துகின்ற சிவனருள் இல்ல ஸ்தாபகர்கள், நிர்வாகப் பணிப்பாளர் என்போருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும், தேவையான ஊக்கத்தையும், ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்ற அனைத்து நல்லுள்ளங்களுக்கும் கேதார கௌரியம்பாள் திருக்கேதீச்சர எம் பெருமானின் அருளும், ஆசியும் என்றும் கிடைத்திடும் என்று வாழ்த்துவதில் எல்லையற்ற மனமகிழ்ச்சியடைகின்றேன்.

**T.மனோகரராஜா**
சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தர்
மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.செ.செல்வரஞ்சன் (B.Ed, Hons)
Ret. Principal, (SLPS-1)

# பணிப்பாளரின் பார்வையில் சிவனருள் இல்லம்

பாடல் பெற்ற திருத்தலமாம் திருகேதீச்சர ஆலயத்தின் அடிவாரத்தில் அனாதரவான பிள்ளைகளை அரவணைத்து ஆரம்பிக்கப்பட்டதே சிவனருள் இல்லமாகும் இன்றைக்கு ஆரம்பிக்கப்பட்டு 17 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆழிப்பேரலையாலும் யுத்தத்தினாலும் தாய் தந்தையரை இழந்த 7 வயதிற்குட்பட்ட 27 பிள்ளைகளை 2005ம் ஆண்டும் தாயும் தந்தையுமாக நின்று பொறுப்பேற்றுக் கொண்டார் Dr.நமசிவாயம் தம்பதிகள். அவர்களின் எண்ணத்தில் உருவாகியதே சிவனருள் இல்லமாகும். இன்று அது சீரோடும் சிறப்போடும் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கி இன்றும் பல இப்படி பிள்ளைகளை உள்வாங்கி இறைபணி ஆற்றி வருகின்றது. இன்று இந்த சிவனருள் இல்லம் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளை சைவ பாரம்பரியத்துடன் வளர்த்ததோடு மட்டுமல்லாமல் இல்லத்தில் வளர்ந்த பிள்ளைகள் 15 பேர் இன்று பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்றால் சிவனருள் இல்லத்தின் சிறப்பை நான் சொல்ல வேண்டியதில்லை.

இந்நிலையை சிவனருள் இல்லம் அடைய Dr. நமசிவயாம் தம்பதிகளுடன் கைகோர்த்தவர்கள் தான் Dr.J. ஜெயமோகன் திரு.சுரேந்திரன் சொர்ணலிங்கம் ஆகியோர். இந்த நிறுவனர்களோடு பலர் இந்த இல்லம் இன்றுவரை சிறப்பாக இயங்க பல வழிகளிலும் உதவி புரிந்து வருகின்றனர். அவர்கள் எல்லோரையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

இன்று இந்த சிவனருள் இல்லம்

- ☞ சிவனருள் ஆண்கள் இல்லம்
- ☞ சிவனருள் பெண்கள் இல்லம்
- ☞ சிவனருள் ஆண்கள் விடுதி
- ☞ சிவனருள் பெண்கள் விடுதி

என நான்கு பிரிவாக இயங்கி வருவதுடன் 200 க்கு மேற்பட்ட பிள்ளைகளை உள்வாங்கி செயற்பட்டு வருகின்றது. சிவனருள் இல்லத்திலுள்ள பிள்ளைகள் நீதிமன்றத்தினாலும், சிறுவர் நன்னடத்தை திணைக்களத் தினாலும் ஒப்படைக்கப்பட்ட ஆதரவற்ற, வசதியற்ற, பாதுகாப்பற்ற பிள்ளைகளாவர். சிவனருள் விடுதியிலுள்ள பிள்ளைகள் எமது சிவனருள் நிறுவனர்களாலும், பணிப்பாளர்களினாலும் அடையாளம் காணப்பட்ட பிள்ளைகளாவர். இவர்கள் பெரும்பாலும் குடும்ப வறுமை நிலை காரணமாக தமது கல்வியைத் தொடர இடர்பட்ட பிள்ளைகளாவர். அத்துடன் படிப்பதற்கு நீண்ட தூரம் பள்ளிக்கூடம் செல்ல வேண்டிய பிள்ளைகளாவர்.

இவர்களுக்கான சகல வசதிகளும் அதாவது உணவு உடை உறையுள் மற்றும் சகல வசதிகளும் இலவசமாக வழங்கி வருபவர்கள் சிவனருள் நிறுவனர்களாவர். எல்லாப் பிள்ளைகளும் படிக்க வைக்கப்படுகிறார்கள். அதற்காக சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக 05 ஆண்டுகளின் பொதுப் பரீட்சையில் ஈட்டிய பெறுபேறுகளும் பல்கலைக்கழக அனுமதியும் இதற்கோர் சான்றாகும்.

மேலும் உயர்கல்வியினைத் தொடர முடியாமல் போன ஒரு சில பிள்ளைகள் தொழிற் கல்வியினைக் கற்பதற்கான வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாடசாலைக் கல்விக்கு மேலாக இல்லத்தில் மேலதிக வகுப்புக்கள் மற்றும் நடனம், சங்கீதம், மிருதங்கம் வயலின் போன்ற கவின் கலைப் பாடங்களும் கற்பிக்கப்பட்டு வருகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பயனுள்ள பொழுதுபோக்குகளில் பிள்ளைகள் ஈடுபட வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. சிவனருள் இல்லத்தில் அமைக்கப்பட்ட "கமலக்கொடி அம்பாள் நூல் நிலையம்" பிள்ளைகள் கற்றல் ஆர்வத்தை தூண்டும் ஓர் நூல் நிலையமாக பல புத்தகங்களையும், பத்திரிகைகளையும் தாங்கி நாள்தோறும் இயங்கி வருகிறது. அத்தோடு காளான் வளர்ப்பு, திருநீறு தயாரித்தல், வடகம் தயாரித்தல், புத்தகம் கட்டல், கைவேலை, பூந்தோட்டம் அமைத்தல் போன்ற பணிகளிலும் ஓய்வு நேரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் திருக்கேதீச்சர ஆலய பணிகளிலும் தம்மை பல ஆண்டுகளாக இப் பிள்ளைகள் ஈடுபடுத்தி ஆன்மீக உணர்வை தம்முள்ளே வளர்த்து நல்ல ஒழுக்க சீலர்களாக விளங்குவதைக் காண்கின்றோம். யுத்தகாலத்தில் பயந்து ஆலயத்திற்கு வரமுடியாத காலகட்டத்தில் அவர்கள் ஆலயப் பணிகளை அதாவது பூமாலை கட்டுதல், துப்பரவு பணிகளில் ஈடுபடல், தீவர்த்தி பிடித்தல், சாமி தூக்குதல் என்று அன்று தொடக்கம் இன்று வரை ஆற்றி வருவது சிறப்பே எதிர் காலத்தில் இந்த திருக்கேதீச்சரப் பெருமானுக்கு அருகிலிருந்து தொண்டாற்ற ஒரு அடியார் குழாம் ஒன்றினை சிவனருள் இல்லம் உருவாக்கி வருகின்றது. அது மட்டுமின்றி யாருமற்ற பிள்ளைகளுக்கு திருக்கேதீச்சர ஆலயத்திலிருந்து 01Km தெலைவில் அமைந்திருக்கும் சிவபுரம் என்னும் இடத்தில் அரசினால் வழங்கப்பட்ட காணியில் தென்னந்தோப்பும் பத்து வீடுகளும் சிவனருள் நிறுவனத்தால் கட்டப்பட்டு வருகின்றன. இப் பிள்ளைகளும் இந்த சமூகத்திற்கு சமய சமூக பணிகள் ஆற்றி சிவனருள் இல்லத்தின் பணியினைஇவர்கள் எதிர்காலத்தில் கொண்டு நடாத்துவார்கள் என்பதில் ஐயமில்லை அந்த வகையில் தான் பிள்ளைகள் வழிப்படுத்தப்பட்டு வருகின்றார்கள்.

மேலும் உயர்தரத்தில் கலைப் பிரிவில் மட்டுமே கற்கக்கூடிய வாய்ப்பு இல்லப் பிள்ளைகள் பயிலும் மன் / கௌரியம்பாள் தமிழ் மகா வித்தியாலயம் இருந்ததனால் பல்கலைக்கழகம் சென்ற பதினைந்து பிள்ளைகளும் கலைப்பிரிவில் பட்டம் பெறும் வாய்ப்பு கிடைத்தது. எனினும் வேறு பிரிவுகள் இல்லாதது ஒரு குறையாகவும் தென்பட்டதால் கடந்த இரு ஆண்டுகளாக உயர் தரத்தில் பொறியியல் தொழில் நுட்பத்துறையிலும் கணித விஞ்ஞானத் துறையிலும் மாணவர்கள் மன்/ சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியிலும், மன்/அடம்பன் மகா வித்தியாலயத்திலும் சேர்க்கப்பட்டு அத் துறைகளில் கல்வி பயின்று வருகின்றனர்.

மேலும் இந்தப் பிள்ளைகளை வைத்து பராமரிப்பது படிப்பிப்பது அதையும் செவ்வனே செய்வது என்பது பெரிய விடயமாகும் மாதா மாதம் இந்தப் பிள்ளைகளுக்கு வேண்டிய இலட்சக்கணக்கணக்கான நிதியினைத் தேடி எமக்கு வங்கியில் இடும் இந்த சிவனருள் இல்லத்தில் நிறுவர்களையும், நன்கொடையாளர்களையும் பாராட்டியே ஆகவேண்டும்.

மேலும் இந்தப் பிள்ளைகள் கல்வி வளர்ச்சியில் எம்மோடு இணைந்து செயற்படுகின்ற மன்/ கௌரியம்பாள் தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஆசிரியர் குழாமையும் பாராட்டி நிற்கின்றேன் தற்போதைய பணிப்பாளர் என்ற வகையில் நான் 16.04.20019 அன்று மன்/எருக்கலம்பிட்டி முஸ்லீம் மத்திய கல்லூரியிலிருந்து கௌரவமான முறையில் மன நிறைவுடன் ஓய்வுபெற்றேன். பின் ஏதாவது நிறுவனத்தில் வேலை செய்யலாம் என எண்ணி சில நேர்முகத் தேர்வுகளுக்கும் சென்று வந்தவேளை Dr.கதிர்காமநாதன் ஊடாக Dr.நமசிவாயத்தினை சந்திக்க கிடைத்த வாய்ப்பு எனது வாழ்க்கையின் திருப்பு முனையாக அமைந்தது. 32 ஆண்டுகள் அரச பணியிலிருந்த என்னை ஓய்வின் பின் சிவனருள் நிறுவனர் Dr.நமசிவாயம் சிவனருள் இல்லப் பணிப்பாளராக நியமித்தார். ஓய்வு பெற்ற நாள் முதல் ஓய்வில்லாமல் பணி செய்யும் வாய்ப்பினை தந்துள்ளார். இதை ஓர் இறை பணியாக கருதி மகிழ்வோடு செய்து வருகின்றேன். இப் பிள்ளைகளுடன் உடன் இருந்து பணி செய்வதை பெரும் பேறாக எண்ணுகின்றேன்.

மேலும் சிவனருள் இல்லம் இன்று வடமாகாணத்திலே சிறந்த ஓர் இல்லமாக இருக்கின்றது என்பதற்கு அண்மையில் இடம்பெற்ற மாகாணமட்ட கண்காணிப்பு அறிக்கை பின்வருமாறு பாராட்டப்படுகிறது

01) தங்கள் நிலையத்தில் பயிற்றுவிக்கப்பட்ட பணியாட்தொகுதி சிறுவர்களின் நலனில் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுவது பாராட்டுவதற்குரியதாகும் மேலும் பணியாளர்களுக்குத் தேவையான மேலதிக சிறுவர் பராமரிப்பு தொடர்பான பயிற்சிகளை VTA, NAITA, NISD நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு வழங்கி சிறுவர் நேயம் மிக்க பணியாட்தொகுதியை உருவாக்குதல் சிறப்பானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02) பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகள் தொடர்பாக பிரத்தியேக வகுப்புக்கள் சுய கற்றலுக்கான நேரம், இடவசதி, ஒழுங்கமைப்பு, குழுவாக கற்றலுக்கான ஒழுங்கமைப்பு மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான வகுப்புகள் கணனி பயிற்சிகள் வழங்கல் நூல் நிலைய வசதி விசேடமாக உள்ளூர் உற்பத்தி செயற்பாடுகளில் சிறுவர்களை ஈடுபடுத்தல் விளைபாட்டு பொழுதுபோக்கு வசதி என்பன சிறப்பான முறையில் முன்னெடுத்து செயற்படுத்தப்படுவது மெச்சதக்கதாகும்.

03) மேலும் பிள்ளைகளது அடிப்படை தேவைகளான உணவு உடை இருப்பிட வசதி சமையலறை குளியலறை மலசல கூட வசதி கழிவகற்றல் முகாமைத்துவம் என்பன சிறப்பான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமை வரவேற்கதக்கதாகும்.

எனவே இந்த இல்லம் இன்று 17 ஆண்டுகளாக சிறப்பாக இயங்குகின்றது என்றால் இந்த இல்லத்தின் நிறுவனர்களின் முயற்சியை பாராட்டியே ஆக வேண்டும். லண்டன், அவுஸ்ரேலியா என்று அவர்கள் நிரந்தரமாக இருந்தாலும் நாள்தோறும் தொலைபேசியின் ஊடாக இவர்கள் தொடர்பாடல்களும் அடிக்கடி அவர்களின் வருகையும் இல்லம் சிறப்பாக இயங்க வழிப்படுத்துவதுடன் இந்த இல்லத்தின் பொறுப்பு வாய்ந்த பணிப்பாளர் என்ற வகையில் என் செயற்பாடுகளுக்கு ஆலோசனையும் அனுமதிகளையும் வழங்கி வருகின்ற பணிப்பாளர் சபையின் தீர்மானங்களும் முன்னைநாள் பணிப்பாளர்களின் அர்ப்பணிப்பான சேவையும் அதாவது முன்னாள் பணிப்பாளர்களில் நான் அறிந்தவரை திரு.வே.பொ. மணிக்கவாசகர் அவரின் காலம் சிவனருள் இல்லத்தின் பொற்காலம் எனலாம். அதனைத் தொடர்ந்து பெயர் பணிப்பாளராக கடமை புரிந்த ஆசிரியர் திரு.T.குருபரன், தபாலதிபர், திருமதி.இந்துபிரியதர்சினி குருபரன் ஆகியோர் பல சவால்களுக்கு முகம் கொடுத்து இல்லத்தை வழிநடத்தியதை அறியக்கூடியதாக இருந்தது நன்றியுடன் நினைவு கூறுகின்றோம். அர்ப்பணிப்புடன் பணிசெய்யும் பணியாளர்களின் சேவையும் நன்கொடையாளர்களின் பங்களிப்பும் முக்கிய காரணமாகும்.

சிவனருள் இல்ல செயற்பாடுகளுக்கு நிதி மூலம் என்பது மிக முக்கியமானது. சிவனருள் இல்லம், சிவனருள் விடுதி என்பவற்றில் சுமார் 200 பிள்ளைகள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் அனைத்து தேவைகளையும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு என்பது மிக முக்கியமானது. அதற்கான நிதியை மாதாமாதம் எமது நிறுவனர்கள் அனுப்பி வைத்தனர். அதை சரியான முறையில் செலவு செய்தார். அதற்கான ஆவணங்களை பேணுதலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதற்கு மூலகாரணமாக இருப்பவர் இந்த இல்லத்தில் நீண்டகாலமாக கணக்காளராக பணிபுரிகின்ற திரு.K.திருநாவுக்கரசு ஐயா அவர்கள். கணக்காய்வுக்கு உட்படுகின்ற எமது கணக்குகளை நிதிப்பிரமாணங்களுக்கமைய செலவுகள் செய்யாமல் பயனுள்ள வகையில் செலவு செய்ய நல்ல ஆலோசனைகளையும் வழங்கி வருபவர் திருநாவுக்கரசு ஐயா அவர்கள்.

மாதா மாதம் பல இலட்சங்களை நாங்கள் செலவு செய்கின்றோம். அதில் எந்த தவறுகளும் நிதி மோசடிகளும் ஏற்படாதவண்ணம் நிதிமுகாமைத்துவத்தை இந்த இல்லத்தில் நீண்டகாலமாகச் செய்துவரும் திரு.K.திருநாவுக்கரசு அவர்களும் இந்த சிறப்பு மலர் வெளியிடும் இந்நாளில் வாழ்த்தும் நன்றியும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் எமது கணக்குகளை வருடாவருடம் கணக்காய்வு செய்கின்ற கிருபாரட்ணம் கணக்காய்வு நிறுவனத்திற்கும் (யாழ்ப்பாணம்) எமது நன்றிகள்.

அத்தோடு சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தில் வடமாகாண ஆணையாளரின் ஆலோசனைகளும், மன்னார் மாவட்ட சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள அதிகாரிகளினதும், உத்தியோகத்தர்களினதும் அனுசரணைகளும் சட்டப்படி இல்லத்தையும் விடுதியையும் சிறப்பாக நடத்த உதவுகின்றது. இத்தகைய சிறப்புமிக்க சிவனருள் இல்லம் வளர்வதற்கு மேலும் பல நற்பணிகள் புரிய திருக்கேதீச்சரப் பெருமானை வேண்டிநிறைவு செய்கின்றேன்.

நன்றி

**திரு.செ.செல்வரஞ்சன்**
பணிப்பாளர்,
சிவனருள் இல்லம்
திருக்கேதீச்சரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பாளருடன் பணியாளர்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பாளருடன் அலுவலக பணியாளர்கள்



## பணிப்பாளருடன் சிவனருள் உதைபந்தாட்ட குழு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளருடன் சிவனருள் கரப்பந்தாட்ட குழு



பணிப்பாளருடன் சிவனருள் துடுப்பாட்ட குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பாளருடன் சிவனருள் இல்ல பிள்ளைகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பாளருடன் சிவனருள் பிள்ளைகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பாளருடன் சிவனருள் விடுதி பிள்ளைகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே சிவம் Love is God

# SIVAN ARUL ILLAM

## THIRUKKETHEESWARAM , MANNAR, SRI LANKA

**Reg No – MN/SS/VOR/2007/14, NPC/30/06/05/01(GIRLS), NPC/30/07/05/02(BOYS); HA/4/MN/27**
**Telephone Nos +94 23 205 0804, +94 23 205 0805, +44 79694 88968, +61 430 035 066**
**Emails: sivanarulillamuk@gmail.com; sivanarulillam@gmail.com; sivanarulillamtkw@yahoo.com**
**Trustees: Dr. Jayendran Namasivayam(UK), Mrs. Manchula Namasivayam(UK), Mr. Surendra Sornalingam(UK), Dr. Jayasingham Jayamohan (AUS) , Dr R Gajenthirav**
**Director- Mr.S.Selvaranjan(incharge) (P.NO–0775815998,0232250705)**

## Trustees Report

Our children's home has taken a positive turn in the past few years since celebrating its 10th anniversary in July 2015. We are now giving opportunities for children from deprived areas of the North-East and Upcountry to come to our home and further their education.

In addition to the existing girls' and boys' home, in 2021 we increased our accommodation capacities and built two separate hostels for girls and boys. We then found children who came from poorer backgrounds but also had a strong desire to study and improve their personal situations through education. This means we are focusing our support where the need is great, due to severe poverty and a lack of development proving a serious constraint for these young people to continue their educational development. In this work we have strict selection criteria which leads us to choose exceptionally passionate and dedicated children who we believe will be great success stories. We are confident that once they complete their educational journeys, they will return as adults to their homes ready to contribute, so that their respective communities thrive, but also, they serve as inspiration for future generations of young people.

Our children have been steadily improving in their O/L and A/L performances while also developing specific areas of interest, like enhancing their leadership and IT skills. This has led to 15 children entering universities, some of whom have already completed their degrees. Of these children, the older students have taken on the responsibility of motivating the younger ones: helping them revise for exams, as well as conducting seminars and workshops.

But we do not limit ourselves to academic excellence, as we recognise there is so much more than book-smarts, so all of our children are also given opportunities to get involved in sports, music, dance, art and other preferred activities. We have encouraged them to enter both inter-school and national competitions and have had great pride in seeing them succeed in winning many awards for their talents.

Our children are also encouraged to develop a breadth of skills which will help them later in their adult lives. Some examples include the children growing mushrooms for their consumption, adding nutritional value to their vegetarian diet, but also feeding their entrepreneurial spirits, allowing them to sell the excess mushrooms to the public. We have also secured 9 acres of government land for the children to build houses for those children who don't have any family or relatives to re-unite with when they are ready to leave the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

home. We are now also completing 10 detached 2-bedroom houses with kitchen, varendah , hall and bathroom etc. We have planted 400 coconut trees around these houses which would give them an extra source of income. We have employed two of our children to maintain the coconut estate and also encourage them to cultivate other necessities for our home.

We have already started a graduate program for those children who have completed their degree to get involved in marketing, finance, sales, production, quality control, human resource and giving them training to learn these skills. We are running very successful government approved 4 months NVQ3 courses - CAA (computer application assistant) in Akkaraipattu to help the youth who have not been successful in pursuing their studies due to poverty and giving them opportunities to develop their skills in IT. Over 30 youth in the east have successfully completed these courses and have sought jobs in government and private offices. This has given them a source of income to support their families and fulfil their aspirations. Sixteen school leavers from our home have already acquired jobs in our very successful business enterprises, namely:

1. The food processing factory in Kilinochi
2. The bakery in Puthukudiyiruppu
3. The pure vegetarian restaurant in Mannar
4. The integrated farms in Palampitty, Madhu, Maavittapuram
5. Five free education centers in the northeast and the upcountry (Neenakerny, Muthur Kanchirankuda, Batticaloa; Akkaraipattu, Olumadu Nedunkerny and Katkulam, Vavuniya)

Our vision is to see most of our children getting involved actively in above-mentioned business ventures /enterprises to earn their living and also continue the legacy of Sivan Arul, helping those in need.

Sivan Arul has also endeavoured to contribute to its wider community. We have a large, efficient interest free loan scheme to help the farmers, fishermen, villagers with no other source of income to set up poultry farms, rearing chicken, goats etc We also encourage women especially the single mothers to run their own businesses. We are also supporting a group of ladies in the east involved in making handloom sarees for ladies and sarongs for men. These are very good quality and should be encouraged in a big way to sell abroad which would enhance their livelihood. We are very mindful of reviving some of the dying cottage industries in North & East. We kindly urge the continuing support from our donors living abroad also to participate in these industrious ventures to these poor families. There are a group of ladies, nearly 30 of them running a successful food business for weddings and functions with the help of our revolving fund method. We also encourage ladies to buy sewing machines from our interest free loan scheme. Once the loans are recovered from the first batch, we tend to rotate our funds to help new beneficiaries. This enables a large number of people to benefit. Many poor farmers who have benefitted from our revolving funds have successfully produced very lucrative crops which otherwise wouldn't have given them the opportunity.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We are running a very successful Aranery school in upcountry for over 1200 poor children of estate workers. Every Sunday they are taught moral values, religious songs by trained teachers. They are also encouraged to give vocal, dance, poem reciting performances. At the end the children are given Annathanam or other nutritious snacks. This has created a lot of interest in the community and elders are also encouraged to join in the Annathanam. We are also in the process of setting up an elder's care home, women empowering, counselling, training centre in Yatiantota, Awisawala to help the poor estate workers.

We are very grateful to our director in charge of the children home, Mr Selvaranjan, his co- directors and core staff team members for their hard work and dedication. They are instrumental in maintaining a high standard of discipline amongst the children, creating a very happy environment and focus on their academic achievements. They also organize trips and excursions for children during their school holidays, especially for those who have no family. The children are nurtured in our home with a lot of love and care. We are also very grateful to our director in charge of accounts Mr Thirunavukkarasu, who has been playing a key role, for many years in maintaining and producing transparent annual accounts with the help of our staff, Ms Thevaki, who is our great asset. We wish to express our sincere gratitude to Mr Kirubaratnam and his efficient staff for volunteering to offer professional, independent, external annual auditing for the children for many number of years.

We wish to express our sincere gratitude to our other present directors Mrs .S. Yogarasa ,Mrs T . Santhirakanthan and Dr R. Gajenthirav for their great services and contributions towards the welfare of the children home.

We like to pay tribute to our past directors Mr V. P. Manikkavasakar, Mr .K. Sasitharan Mr M. Srikantha, Mr N. Thirugnanasambanthar, Mr N . Sivayogarasa , Mr T. Kuruparan and Mrs I. Kuruparan

who have made a significant impact on the running and maintenance of the home during difficult times

We also like to acknowledge Mr T Viswarupan, former commissioner for child probation, Mr E Kuruparan, present commissioner for child probation and Mr M Pratheep DS Mannar who have supported in the development and progress of our home.

We wish to express our sincere gratitude to our other present directors Mrs .S. Yogarasa ,Mrs T . Santhirakanthan and Dr R. Gajenthirav for their great services and contributions towards the welfare of the children home.

We like to pay tribute to our past directors Mr V. P. Manikkavasakar, Mr .K. Sasitharan Mr M. Srikantha, Mr N. Thirugnanasambanthar, Mr N . Sivayogarasa , Mr T. Kuruparan and Mrs I. Kuruparan

who have made a significant impact on the running and maintenance of the home during difficult times

We also like to acknowledge Mr T Viswarupan, former commissioner for child probation, Mr E Kuruparan, present commissioner for child probation and Mr M Pratheep DS Mannar who have supported in the development and progress of our home.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We like to express our sincere gratitude to Shrimathi Sooriyayazhilini Weerasingam, the exponent, internationally renowned bharathanatyam teacher for painstakingly training our children for the unique dance drama "Thiruketheeswaram Oru Thenpondhu "staged on 5th July 2022, in front of Thiruketheeswara peruman and Gowri Ambal. The script for this Devine show was written by Ahalangan Ayyah. We are truly indebted to both of them for their sincere hard work and offering their services voluntarily.

Sivan Arul Foundation -Australia and Sivan Arul Humanity, UK are very grateful to all the donors who have supported this charity over a very long period. If not for their kindness and generosity this organisation wouldn't have survived for 17 years. We kindly request for your support to continue to help the most needy in North/East & Upcountry.

1. DR Jayendran Namasivayam
2. DR Jayamohan Jayasingham
3. Mrs .Manchula Namasivayam
4. Mr Surendra Sornalingam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dr. ஜெ. ஜெயமோகன்

# நினைவுகளின் ஒரு பசுமைப் பயணம்

யூன் மாதம் முதலாம் திகதி 2022. குளிர் காற்று முகத்தில் உரசி கண்ணுக்குள்ளால் சென்று கண்ணீராக வடிந்து சிட்னி மாநகரில் குளிர்காலம் தொடங்கி விட்டதை நினைவுறுத்துகின்றது.திறந்திருந்த வீட்டுக்கதவுகளை குளிர்காற்று வராமல் மூடிக்கொள்கின்றேன். வெளிக்கதவு மூடியதும் மனக்கதவுகள் சடாரென திறந்துகொள்ள, கூடவே சாம்பிராணி புகைபோல பசுமையான நினைவுகள் மேக மூட்டங்களாக என்னைச் சுற்றி பரவுகின்றன. அது ஒரு சந்தோசமான சிலிர்ப்பை ஏற்படுத்துகின்றது.

சிவனருள் இல்லம்! இல்லச்சிறார்கள்! இல்லச் சுற்றாடல்! அந்தப் பிஞ்சு உலகத்தின் அபரிமிதமான அன்பு! கூடவே திருக்கேதீச்சர திருக்கோயிலின் தனித்துவமான மணியோசை! பாலாறு தீர்த்த குடத்தை எதிர்பார்த்து மகாலிங்க சுவாமியின் தரிசனம்! இதைவிட வேறு என்ன இன்பம் வேண்டும். இது அல்லவோ ஆனந்தம்! இது அல்லவோ பேரின்பம்.

விரைவில் இந்த இல்லத்திற்கு போய் இந்த இன்பச் சுற்றாடலில் திளைத்து மகிழ வேண்டும் என்று கூத்தாடுகின்றது. ஆமாம் ஆறாம் திகதி யூலை மாதம் திருக்கேதீச்சரப் பெருமானின் கும்பாபிஷேக குடமுழுக்கு விழா. எங்கள் ஆவலின் ஆவலை எதிர்பார்ப்பை நசுக்கி நாசமாக்கியது. கொரோனா இப்போதுதான் நந்தி விலகிய மாதிரி எங்களுக்கு காலம் வழிவிட்டுக் கொடுக்கிறது. 21ம் திகதி சிட்னியிலிருந்து இலங்கைக்குப் புறப்பட்டு சிவனருள் இல்லம் செல்லலாம் என்று தான் எங்களுடைய எண்ணம். ஆனால் ஒரு பெரிய நந்தி வழிவிட்டாலும் பல சிறிய நந்திகள் வழி மறித்துக் கொண்டிருக்கின்றன. பொருளாதாரம், எரிபொருள் பிரச்சனை, இப்படி பல பல குட்டி நந்திகள் "அங்கே பிரச்சனை என்றால் என்ன செய்யப்போறீர்கள்" இது ஒரு நண்பரின் கேள்வி! பெற்றோல் இல்லையே, டீசல் இல்லையே, இது இன்னொருவரின் ஆதங்கம். "வருத்தம் வந்தால் என்ன செய்வீர்கள்? மருந்துகூட இல்லையாமே" இது என்னுடைய மனைவியின் மிக நியாயமான,என் உயிரை தக்க வைக்க ஆசைப்படும் ஒரு அன்புக் கேள்வி. எல்லாவற்றையும் மீறி கட்டாயம் போவேன் , போய்த்தான் சேருவேன் என்று மன வைராக்கியம் ஒன்று உள்ளே எழுகின்றது. ஏன் வலுக்கட்டாயமாக அந்த சிவனருள் செல்வங்களின் அன்பு காந்தக் கயிறாக என்னை கட்டி அங்கே இழுக்கின்றது

சிவன் அருள் இல்லம்! பசுமையான அந்த நினைவுகளை அசைபோட தொடங்குகின்றேன். இந்த இல்லம் தொடங்கி 16வருடங்கள் ஆகிவிட்டன. என்னுடைய அருமை பாரிய தோழன் ஜெயேந்திரன் நமசிவாயம் இந்த அருமையான பணியில் 14வருடங்களுக்கு முன் என்னை இணைத்துக் கொண்டார். இந்த நேரத்தில் மாணிக்கவாசகரின் சிவபுராணம் நினைவுக்கு வருகின்றது. "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்று சொன்னார். அதே போல் இந்த இல்லத்தில் என்னை இணைத்தது கூட அந்த திருக்கேதீச்சரத்தானின் அருள்தான். அவன் திருவருள் இல்லையேல் இந்த பாக்கியம் எனக்கு கிடைத்திருக்காது. அதை நினைக்கும் போது கண்கள் பனிக்கின்றன. அவன் திருவருள் இல்லாவிட்டால் இந்த சிறார்களின் அன்பில் நான் நிலைத்திருக்க முடியுமா?

இந்த 16 வருடங்களில் இந்த சிவன் அருள் ஒரு பெரிய விருட்சமாக வளர்ந்து பரவி குடை போல் பலருக்கு நிழல் அளித்துக் கொண்டிருக்கிறது. எத்தனை மாணவச் செல்வங்கள் வளர்ந்து பரீட்சைகளில் தேறி பல்கலைக்கழகம் போய்விட்டார்கள்! எத்தனை மாணவர்கள் பல்கலைக்கழகப் படிப்பை முடித்துக்கூட வெளியே வந்துவிட்டார்கள்!! இன்று கூட அப்படியே வெளியே வந்த பல மாணவர்கள்,"எங்களுக்கு சிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்தான் வேண்டும் " என்று பழையபடி உங்களுடைய சிவன்அருள் இல்லத்திலேயே வந்து கூட்டாக சேர்ந்துவிட்டார்கள். பலவிதமான தொழில்களைப் புரிந்து சிவன் அருள் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். எத்தனையோ வெற்றியான முயற்சிகள். ஒரு சிவபுரம் மலர்ந்துள்ளது. ஒருருத்ரம்-ஒரு உணவு விடுதி உருவாகியுள்ளது. பாலம்பிட்டியில் ஒரு பண்ணை, பிள்ளைகளுக்காக! இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். இதெல்லாம் எப்படி சாத்தியமானது? எங்களாலா? கட்டாயமாக இல்லை! இது இறையருள். பாரதியார் சொன்னார் "நினைவு நல்லது வேண்டும் நெருங்கிய பொருள் கைப்பட வேண்டும்" என்று! நல்லதை நினைத்தோம். நல்லதே நடந்தது.அண்மையில் ஒரு விடுதி (Hostel) வசதிகளை தொடங்கி மலையக பிள்ளைகள், கிழக்கு மாகாணத்தில் வசதியற்ற பல பிள்ளைகளுக்கு இடமளித்து அவர்களையும் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாகி சிவன் அருள் இல்லம் மும்முரமாக அந்தப் பணியை செய்து வருகின்றது.

கௌரியம்பாள் பாடசாலைஎங்களுடைய சிவன் அருள் பிள்ளைகளையே முக்கியமாக கொண்டிருந்து இப்போது பெரிய அளவில் விருத்தி ஆகி தனக்கென்று ஒரு பெயரை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் பார்க்கும் போது நம்ப முடியாமல் இருக்கின்றது. எங்களை கருவியாக பாவித்து இந்த சிவன் நடத்திய ஒரு நாடகம்தான் இது.

இந்த சிவன் அருளை நடத்தும் நிறுவுனர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள் எல்லோருமே இந்த இறைவன் பிள்ளைகளுக்கு எழுதும் அன்புக் கடிதத்தை வரையும் பேனாக்கள்தான். நாங்கள் பேனாக்கள் மட்டுமே. அதிலிருந்து வழியும் மை இறைவனுடைய காதல் கடிதம். ஆனால் எங்களை ஒரு கருவியாக உபயோகித்தானே! அந்த திருவருளிற்கு நன்றி கூறுவோம். சிவன் அருளின் வெற்றிக்கு வழிகாட்டிய பல பணிப்பாளர்களை நினைவு கூர வேண்டியுள்ளது. மாணிக்கவாசகர் ஐயா தொடங்கி பிறகு சிவா தொடர்ந்து குருபரன் தம்பி, இந்துமதி இவர்களுடைய பங்களிப்பை மறக்க முடியாது. இப்பொழுது செல்வறஞ்சன் சேரின் (Sir) வழிகாட்டலில் இல்லம் வைரமாக ஜொலித்துக்கொண்டிருக்கின்றது. பல பணியாளர்களின் தன்னலமற்ற சேவையை பாராட்ட வேண்டும். இவர்கள் இல்லாமல் இந்த இல்லம் இன்று உருவாகி இருக்க முடியாது. அவர்கள் எல்லோருக்கும் நாங்கள் தலை வணங்கு கின்றோம்.

திருக்கேதீச்சரம் செல்ல இன்னும் மூன்று கிழமைகள் உள்ளன. விமானத்தை விட வேகமாக என்னுடைய பசுமையான நினைவுகள் இல்லத்தை சேர்ந்து அடைந்து விட்டது. "ஒரு தடங்கல் இல்லாமல் போய்விட வேண்டுமே" என்று மனம் ஆதங்கப்படுகிறது. சிவன் அருள் முன்னால் உள்ள அந்த வேப்பமரத்தின் கீழே இருக்க வேண்டுமே! அந்த வேப்பங்காற்று என்மேல் படவேண்டுமே! சுற்றி வர சிவனருள் பிள்ளைகளை நான் அணைத்துக்கொண்டிருக்க வேண்டுமே! அவர்களுடைய மழலை பேச்சை கேட்க வேண்டுமே! அவர்களுடைய ஆடல், பாடல்களை பார்க்க வேண்டுமே! என்று மனது அங்கலாய்க்கின்றது. கூடவே ஐயோ! எந்த விதமான தடங்கலும் வராமல் இருக்க வேண்டுமே என்றும் யோசனை வருகின்றது. ஆனால் அதையும் மீறி திருக்கேதீச்சர பெருமானின் மணியோசை என் காதுகளில் கேட்கின்றது. இல்லை நீ கட்டாயம் வருவாய் என் செல்வங்களைப் பார்ப்பாய் என்று அவர் காதுகளில் கூறுவது கேட்கின்றது. இந்த நேரத்தில் திருமூலருடைய திருமந்திரம் ஒன்று நினைவுக்கு வருகின்றது.

**"படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்**
**படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே"**

பல "மாடங்கள் அமைந்த கோயிலுக்கு நாங்கள் சேவை செய்வதை விட, பெரிய சேவை தேவைப்பட்டோருக்கு, கஷ்ரப்பட்டோருக்கு சேவை செய்வது தான்" இந்த சேவையில்தான் நாங்கள் இறைவனைக் காண வேண்டும். எவ்வளவு அழகாக திருமூலர் இதை சொல்லியிருக்கின்றார். மெல்ல கண்களை மூடி கொள்கின்றேன். இரண்டு கன்னங்களிலும் கண்ணீர் தாரையாக ஊற்றுகின்றது. இந்த முறை வரும் கண்ணீர் குளிரால் வந்ததில்லை. அன்பினால் ஊற்றும் இந்த பாசக் கண்ணீர் எங்களுக்கு இந்த திருவருளைத் தந்த இறைவனின் பெரு அருளை நினைத்துக் கொள்கின்றேன்.

சிவன் அருள் வாழ்க! சிவன் அருள் இல்லம் வாழ்க!

நன்றி

**பேராசிரியர் ஜெ. ஜெயமோகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலரும் நினைவுகள்

வளங் கொழிக்கும் ஈழத்திரு நாட்டின்
திருக்கேதீச்சரம் என்னும்
புண்ணிய புனித பூமியில்
சிவதிரு தொண்டின்
அடியினை ஒற்றி (பற்றி)
சிவன் அருள் கொண்டு
மொட்டொன்று முகை விரித்து
மலர்ந்து–அது சிவனருள்இல்லமாக!

இரு உள்ளங்களின் எண்ணத்தில் உதித்த சிந்தனைக்கு
செயல் வடிவம் கொடுத்திட பல கரங்கள் உதவின–இருப்பினும்
அவை நிலையான உருப்பெற்று சிறப்புடன் விளங்கிட
எமக்கு தந்தையர்கள் ஆகினர்
Dr.J.ஜெயேந்திரன் நமசிவாயம் ஐயா!
Dr.J.ஜெயசிங்கம் ஜெயமோகன் ஐயா!

25.12.2004 அன்று விடிகாலைப் பொழுது
கடலின் அலை பொங்கி எழுந்தது
மனம் என்னும் உள்ளம் வெந்து துவண்டது
ஏக்கங்கள் தவிப்புக்கள் பல விதமாய்
ஆம் அன்றைய தினம்
இயற்கையின் கோரத்தால்(சுனாமி)
தாய் தந்தையரை இழந்த மழலைச் செல்வங்களையும்
போர் என்னும் ரணகளத்தால்
ஆறாத வடுக்களையும் வலிகளையும் சுமந்து
நின்ற உறவுகளையும்
அரவணைத்து அடைக்கலம் கொடுத்தது
சிவன் அருள் இல்லம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுமை நிறைந்த நினைவுகளோடும்
எதிர்கால கனவுகளின் எண்ணத்தோடும்
ஒருகுடை நிழலின் கீழ் ஒன்றானார்கள் மழலைகள்!
ஆல மரம் போல் விருட்சமாகிட-அவர்களுக்கு
அன்போடு பண்பை வளர்த்து
அறிவோடு ஆன்மீகத்தை ஊட்டி
விளையாட்டோடு வீரத்தை வளர்த்து
இயல் இசை நாடகம் என்னும்
முத்தமிழை வாழ்வோடு இணைத்தது
சிவன் அருள் இல்லம்!

தன்னிகரில்லா தந்தையர்களின்
நாமம் புகழ் பெற்று விளங்கிட
வித்தைகள் பல கற்று
வானவர் போற்றிட
வாழ்ந்து காட்டும் மாணாக்கர் இவர்கள்!
நல்லவராய் வல்லவராய்
பிள்ளைகள் தரணியில்
புகழ் பெற்று விளங்கிட
வழிப்படுத்தி நெறிப்படுத்த
நல்ல பணிப்பாளராய்
செல்வரஞ்சன் ஆசான்

அறிவென்னும் பொக்கிசத்தை
பௌவியமாய் ஊட்டி
பல்கலைவரை சென்று
பட்டம் பெற்றிட வைக்கும் நல் ஆசான்கள்

வாழ்க்கையில் சாதிக்க துடிக்கும்
ஒவ்வொருவருக்கும் நம்பிக்கையின்
இருப்பிடமாக அமைந்தது சிவன் அருள் இல்லம்
17ம் ஆண்டின் நிறைவினைக் காணும்
சிவனருள் இல்லமானது இன்னும்
புதிய பல சாதனைகள் படைத்து
வானகமும் வையகமும் போற்றிட
வாழ்ந்திடுவார்கள்

இழப்புக்களின் வலிகளையும் வேதனைகளையும்
சுமந்த இளம் சிட்டுக்களை
சுதந்திரப் பறவைகளாக
வானில் சிறகடிக்க வைத்து
வாழ்க்கைக்கு வழிகாட்டும் சிவனருள்
குடும்பம் என்றும் சிறப்புற்று விளங்கிட வாழ்த்துகின்றோம்.

**செல்வி A. தேவகி**
நிர்வாக உத்தியோகத்தர்,
சிவனருள் இல்லம்
திருக்கேதீச்சரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமலக் கொடி அம்பாள் நூலகம்
# சிவனருள் இல்லம்

2005ம் ஆண்டு இரு நல் உள்ளங்களால் ஸ்தாபிக்கப்பட்ட சிவன் அருள் இல்லத்தில் நூலகமும் ஓர் அங்கமாகும். அன்று நூலகமானது இல்லப் பிள்ளைகளின் வாழ்வில் வெறுப்பையே ஏற்படுத்தியது. பிற்பட்ட காலத்தில் சிவன் அருள் நூலகமானது மிகவும் அழகாக உருவாக்கப்பட்டதுடன் கமலக்கொடி அம்பாள் நூலகம் என பெயரிடப்பட்டதுடன் இல்லப் பிள்ளைகளின் வாழ்வில் நூலகப் பயன்பாட்டின் ஆர்வத்தைத் தூண்டினார் இல்லப்பணிப்பாளர் திரு.செ. செல்வரஞ்சன் அவர்கள்.

கமலக் கொடி அம்பாள் நூலகமானது ஓர் அதிசயமாகும். எங்கும் காணமுடியாத புதினங்கள், புத்தகங்கள் என பல அதிசயங்களை காணமுடியும் செய்தித்தாள்கள் சிறுகதைகள் என பல கல்விக் கலைகள் நிறைந்த ஓர் அங்கமாகும். இங்கே தினமும் உதயன், தினகரன், வானவில், மித்திரன், வீரகேசரி, தமிழன், தினதந்தி, தமிழ்முரசு, தினக்குரல் போன்ற செய்தித்தாள்களையும் அத்துடன் சிறுவர்களுக்காக ஜினியர், விஜய் போன்றவற்றையும் தினம் தோறும் இங்கே மாலை 3.00மணியளவில் எமது கமலக்கொடி அம்பாள் நூலகத்தில் காணமுடியும்.

இவ் நூலகத்தில் பாலர் வகுப்பு முதல் உயர்தரம் வரையான அனைத்துப் பாடங்களுக்குமான பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் செயல் நூல்கள் அத்துடன் பரீட்சை வழிகாட்டி போன்ற நூல்களையும் O/L,A/L மாணவர்களுக்கான Past Papers புத்தகங்களையும் சித்திரம், நடனம், நாடகம், சங்கீதம் போன்ற கலைகளுக்கான நூல்களையும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான புத்தகங்களையும் எமது நூலகத்தில் காண முடியும் வேலை வாய்ப்புக்களுக்கான பொதுப்பரீட்சைக் உரிய நூல்களையும் தேடி அறிந்து கற்க முடியும்.

சிறுவர்களுக்கான சிறுகதைகள்,முட்டாள் கதைகள், நன்நெறிக்கதைகள், பஞ்சதந்திரகதைகள் போன்றவையும் சிறுவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் சிங்கள அறிவை வளர்ப்பதற்காக சிங்கள, ஆங்கில சிறுகதைகள், நகைச்சுவைக் கதைகள் போன்ற பல தமிழ், ஆங்கிலம், சிங்களம் போன்ற அழகான அச்சிடப்பட்ட நேர்த்தியான அட்டை போடப்பட்ட வண்ண வண்ணமான பல புத்தகங்கள் இங்கே காணப்படுகின்றன.

மாலை 3.00-5.00 வரை நூலகப் பயன்பாடாகும். இங்கே ஆண்கள் பெண்கள் என இரு பாலரும் ஆர்வத்துடன் பயன்படுத்துவதையும் காணமுடியும். இங்கே புத்தகங்களைத் தவிர கணனியும் உள்ளது இதன் ஊடாக சிறார்கள் இனையத்தின் மூலம் கல்வி சார்ந்த பல விடயங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

மிகவும் முக்கியமாக பழைய செய்தித்தாள்களை வீண்விரையம் செய்யாது பாடசாலை விடுமுறைக் காலங்களில் அல்லது சனி, ஞாயிறு போன்ற கிழமைகளில் பழைய செய்திதாள்களைக் கொண்டு சினிமா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை, ஆன்மீகம், பொதுஅறிவு, விளையாட்டு, சிறுகதை போன்ற தமக்கு ஏற்ற தலைப்புகளைத் தெரிவு செய்து வெளிக்களக்கொப்பியினை சிறார்கள் தயாரிப்பார்கள் இவற்றுள் சிறந்த கொப்பியை பணிப்பாளர் தெரிவு செய்து அவர்களுக்கு பரிசில்கள் வழங்கி அக் கொப்பியினை நூலகப் புத்தகங்களுடன் சேர்ப்பார். இவை வருடம் வருடம் நிகழ்த்தப்படுகின்றன் ஓர் நிகழ்வாகும். இப் புத்தகங்களும் வாசிகசாலையில் ஓர் அரிய புத்தகங்களாகக் காணப்படுகின்றன.

சமயம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த அறநெறி கல்வி சார் விடயங்களை உள்ளடக்கிய நூல்கள் பல எமது நூலகத்தில் உள்ளதுடன். உலகம் இலங்கை சார்ந்த பல விடயங்களும் பெரியோர்கள் பொதுவான விடயங்கள் சார்ந்த பல நூல்களை எமது கமலக் கொடி அம்பாள் நூலகத்தில் காண முடியும்.

புத்தகம் உருவினை அடைய பல காலம் பிடித்தது ஆனால் நாம் புத்தகத்தை அடைய ஒரு நொடி போதும். கல்விக்கலைகள் நிறைந்த சிவன் அருள் நூலகம் என்றுமே ஓர் அதிசயம் தான். இந்த நூலகத்திற்கு பிள்ளைகள் நூலகநேரத்தின் போது முந்தி அடித்துக் கொண்டு விரும்பிச் செல்வதை வைத்தே இந் நிலையத்தின் பயனை நூலகர் என்ற வகையில் தினம் பார்க்கின்றேன்.

இந்த வேளையில் இந்த நூலகத்தை கமலக் கொடி அம்பாள் நூல் நிலையம் என்ற தனது தாயாரின் பேரில் நிர்மாணம் செய்து உவந்தளித்த சிவனருள் இல்ல நிறுவனர்களின் ஒருவரான Dr.J. ஜெயமோகன் குடும்பத்தினருக்கு நன்றி தெரிவிப்பதுடன் இதை சிறப்புற வழிநடத்திச் செல்கின்ற தற்போதைய இல்லப் பணிப்பாளர் அவர்களுக்கு நன்றி.

**செல்வன் இ.தர்சன்**
(A/L 2020)
சிவனருள் இல்லம்

**நல்ல நண்பர்கள் கண்ணாடியைப் போல
உன் நிறை குறைகளை கூட்டாமல் குறைக்காமல்
முகத்துக்கு நேரே சொல்லும்,
நீ அகன்றால் உன்னைப் பற்றி யாரிடமும் குறை சொல்லாது
அத்தகைய கண்ணாடியை நாம் கவனமாகப் பாதுகாக்கிறோம்
அத்தகைய நண்பர்களையும் இழக்காமல் பாதுகாப்போம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகம் திறப்பு விழா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மும்மணிகள்

வடமாகாணத்தின் திருநகராம்
மன்னார் மாவட்டத்தின்
சிவனருள் இல்லமாம்
சிறப்புடை இல்லமாக
மதிப்புடன் மிளிர்வதற்கு
வான் உலா மதியைப் போல
பெற்றுதித்த தேன்னிலாக்களாக
மன்னார் மாவட்டத்திற்கு
இரு மணி முடிகளாய் அழகு தந்தீர்கள்
Dr.நமசிவாயம் ஐயா மற்றும் ஜெயமோகன் ஐயா அவர்கள்

எங்கள் இல்லத்தின் தலைவர்
நம் செல்வரஞ்சன் ஐயா அவர்களின்
பணியைக் கூறுவதற்கு சொல்ல
வார்த்தைகள் இல்லை
காலை மாலை என்று பொழுதுபாராமல்
சிறார்களுடன் பழகும் விதத்தைக் கண்டு
யான் மெய்சிலிர்த்த தருணமும் உண்டு
ஆண்டாண்டு காலமாய் நீங்கள் மூவரும்
ஆற்றிய பணிகள் யாவும்
தூண்டிய விளக்கைப் போல
சுடரொளி பரப்பி நிற்க
தோண்டிய ஊற்றின் நீராய்

உயர்ச்சி நாளும் வந்து சேர
ஈண்டும் பால் கொண்ட
என் நாளும் எம்மைப் பேச வைக்கும்
தொய்வில்லாப் பணி செய்து
உங்கள் சேவை தொடர
தூய நன்நெறி நின்று
துயரற நீடூழி வாழ
கேதீஸ்வரத்தான் தொடரருள்
புதிய வேண்டும் என
பிரார்த்தித்து நல் வாழ்த்து கூறுகிறேன்

**ஆக்கம் : செல்வி க. தயா**
சிவனருள் காப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாலயக் கட்டடக்கலை வளர்ச்சியில் திருக்கேதீஸ்வர ஆலயம்

**அறிமுகம்:**

திருக்கோயில்கள் என்பவை இந்துப்பண்பாட்டின் தனித்த அடையாளங்களாகவும் தெய்வ நலப்பிழப்பு வெளிப்பட்டுத் தெரியும் புண்ணிய ஷேத்திரங்களாகவும் புனிதப் பயணங்களுக்கான கேந்திர நிலையங்களாகவும் திகழ்வன. இதனால் சமுதாய நடுவண்கள் என்ற அந்தஸ்தையும் பெற்றுத் திகழ்கின்றன. எனவேதான் தம் மனம் போன போக்கில் திருக்கோயில்களை அமைத்து விடலாகாது என்ற சிந்தனையில் கோயிலமைப்பு விதிகள் உருவாக்கப்பட்டன. அத்தைகய விதிகள் சிவாகமங்கள், சிற்பசாத்திரங்கள் என்ற எல்லைக்குள் அமைந்துவிட்டன. ஆலயங்கள் அமைப்பதற்கென 32 சிற்பசாத்திரங்கள் விஷ்வகர்மாவினால் ஆதியில் கூறப்பட்டன. என சிவாகமங்கள் இருபத்தியெட்டும் இயம்புகின்றன. எனவே தான் திருக்கோயில் என்பது உயிர்ப்புள்ள தெய்வநலம் பொருந்திய சமய நிறுவனம் என்ற உணர்வு மக்கள் மனங்களில் பதிவாகியுள்ளன. சைவநாயன்மார்களின் பக்தியியக்கச் செயற்பாடுகளால் சமூக மயப்படுத்தப்பட்டிருப்பதுடன் அவற்றின் சமூக முக்கியத்துவம் நன்குணத்தப்பட்டிருந்தன.

"திருக்கோயிலிலுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவனங்கே"

என்கிறது சிவஞான சித்தியார்.

"திருப்பதிகளிலுள்ள கோயில்களும் கோயில்களிலும் வடிவங்களும் அருளாளர்களின் உறுதியால் ஒன்றித் திளைத்து நிற்போர்க்குக் கல், மண் செம்பாகத் தோன்றா, அவை அவர்களுக்குத் செய்வதை அழகாகவே தோன்றும்" என்று திரு.வி.கல்யாணசுந்தரனார் குறிப்பிடுவது கவனத்திற்குரியது.

இதனடிப்படையில் திருக்கோயிற் கட்டடக் கலையின் பரிணாமத்தினை தமிழகச் சூழலில் வைத்து அவதானிக்கின்ற போது பலவகைச் சிறப்புகளுடன் வளர்ந்தமையினை உணரலாம் இந்து கோயிற் கட்டடக்கலை மரபானது பல்லவர் பாணி, பாண்டியர் பாணி, சோழர் பாணி, விஜயநகர நாயக்கர் பாணி, மராட்டியர் பாணி என்ற படிமுறை வளர்ச்சி கண்டிருந்தது. தமிழகச் சூழலில் மேற்படி பலவகைப் பாணிகள் செல்வாக்குடன் ஆலயங்கள் பலவும் காலந்தோறும் எழுந்தன ஆனால் ஈழத்துத் திருக்கோயிற் கட்டடக்கலை மரபானது தனக்கென தனித்துவம் பாணிக்களைக் கொண்டிருக்கவில்லை. ஆயினும் தமிழக- ஈழத்து கலாசாரத் தொடர்புகளின் தாக்க மற்றும் செல்வாக்கு மற்றும் அரசியல் படை நடவடிக்கைகளினால் மேற்குறித்த பாணிகளை அடியெற்றித் திருக்கோயில்கள் அமைக்கப்பட்டன. இவ்வகையில் ஈழத்திலுள்ள இந்துத் திருக்கோயில்கள்யாவும் திராவிடக் கட்டடக்கலைப் பாணியிலேயே அமைந்துள்ளன.

"வரிய சிறை வண்டு யாழ்செய்யும் மாதோட்டநன்னகருள் பரியதிரை எறியவரு பாலாவியின் கரைமேல்" எனச் சுந்தரர் போற்றும் இறைவன் எழுந்தருளியுள்ள தலம் திருக்கேதீஸ்வரம் ஆகும். "பாடல் பெற்ற" தலம் எனும் உயரிய அந்தஸ்தைப் பெற்றிருக்கின்ற இவ்வாலயம் ஆறுமுகநாவரால் "தேன்பொந்து" எனக் குறிப்பிட்ட சிறப்புக்குரியது. இத்தலமானது இந்திய அரசாங்கத்தின் பேராதரவுடன் இன்று மீள் புனருத்தாரணம் செய்யப்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமைவிடமும் சிறப்பும்:**

இலங்கையின் வடபாலுள்ள மன்னார் மாவட்டத்தில் மாதோட்டம் எனும் இடத்தில் திருக்கேதீச்சரத் திருத்தலம் அமைந்துள்ளது மாந்தை என்பது பண்டைய ஈழத்தில் புகழ் பெற்று விளங்கிய துறைமுகங்களில் ஒன்றாகும். மாந்தைத் துறைமுகம் சர்வதேச வாணிப நிலையமாக விளங்கியதை இங்கு கண்டெடுக்கப்பட்ட சீன, இந்திய, மத்திய, கிழக்கு நாடுகளின் பாண்டங்கள் எடுத்தியபுகின்றன அத்துடன் இதன் நகரச்சிறப்பினை சம்பந்தர் தேவாரத்தில் குடிவாழ்க்கை வாழையம் பொழின் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டம் னெவரும் குறிப்பு சனநெருக்கம் மிகுந்த நகரமாக மாந்தை நகர் விளங்கியமையை அறியத்துனை புரிகின்றது. தேவாரங்களில் மாதோட்டம் பற்றிய குறிப்புக்கள் பல காணப்படுகின்றன.

மாந்தையின் சிறப்பை கி.பி. 9ம்நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் பாடல்களிலும் காணமுடிகின்றது. திருக்கேதீச்சர நாதரைச் சுந்தரர்ச் தமது பாடல்களில் பாடிய போது அத்தலத்துக்கு அருகில் காணப்படும் துறைமுகம் அதன் வாணிப நடவடிக்கைகள், கடல்படு திரவியங்கள் ஆகியன பற்றியுங் குறிப்பிடத் தவறவில்லை.

"வங்கம் மாறுகின்ற கடல் அாதோட்ட நன்னகர்"
"வரிய சிறை வண்டி யாழ் செய் மாதோட்ட நன்னகர்"
"வையம் மாறுகின்ற கடன மாதோட்ட நன்னகர்"
"வானத்துறு மலியுங்கடன் மாதோட்ட நன்னகர்"
"படடுண்டு வண்டாலும் பொழின் மாதோட்ட நன்னகர்"
"மாவின் கனி தூங்கும் பொழின் மாதோட்ட நன்னகர்"
கறையார் கடல் சூழ்ந்த ஆழி மாதோட்ட நனகர்"

என வருகின்ற சுந்தர்த்தி சுவாமிகளின் கருத்து வெளிப்பாடுகள் மாந்தை நகரின் சிறப்புரைக்கின்றன.

ஈழத்தில் வரலாற்றுப் பெருமையும் தொன்மையுமிக்க திருக்கேதீச்சர தலத்துடன் தொடர்புடைய தொன்மங்கள் பலவுள்ளன. பண்டைய காலத்தில் திருக்கேதீச்சரம் என்பது சிவத்தலத்தையும், மாதோட்டம் என்பது அத்தலம் அமைந்துள்ள இடத்தையும் குறித்து நின்றது. தற்காலத்தில் திருக்கேதீச்சரம் எனும் சொல்லானது சிவத்தலம் மற்றும் அது அமைந்துள்ள இடம் ஆகியவற்றைக் குறித்து நிற்கிறது கி.பி இரண்டாம் நூற்றாண்டில் மாதோட்டம் இருந்ததை தொலமி எனும் புவியியல்றிஞரின் குறிப்புகளில் காணக்கிடைக்கின்றது.

வரலாற்றுத் தொன்மையும், பல்வேறு சிறப்பம்சங்களையும் தனக்குள் அகப்படுத்தியிருக்கும் பெருமைக்குரிய இத்தலம் 1690 களில் போர்த்துக்கேயரால் இடித்தழிக்கப்பட்டது. ஆயினும் 1894ஆம் ஆண்டுகளில் புரதான கோயிலில் இருந்த இடத்தைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சிகள் ஆரம்பமாயின. இதன் விளைவாக கோயில் இருந்த இடம் கண்டறியப்பட்டு மூர்த்தி தலம் தீர்த்தச் சிறப்புக்களுடன் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது.

**கோயிற்கட்டுமாணம்**

குடைவரைகள், தனிக்கற்கோயில்கள், கற்றறிக்கோயில்கள் என்ற படிமுறையில் திராவிடக் கட்டடக்கலையின் வளர்ச்சியினை இனங்காணலாம். திராவிடக் கட்டடக்கலை வளர்ச்சியின் மூன்றாவது பரிணாமம் இராஜசிம்மன் காலத்தில் தொடங்கியது. இது கட்டுமானக் கோயில்களின் காலமாகும்.

ஈழத்தில் எழுந்த திருத்தலங்கள் திராவிடப் பாணியிலமைந்தவை. பெரும்பாலும் கட்டுமானக் கோயில்கள் என்ற பண்பியல்பைப் பெறுபவை. இந்த அடிப்படையில் செங்கல், கருங்கல், பொழிக்கல், கண்டக்கல், சீமெந்து முதலான பொருட்களால் இக்கோயில்கள் கட்டப்பட்டன சிறப்புக்குரியன. இந்திய–ஈழத் தொடர்பின் முக்கிய அடையாளங்களில் கட்டடக்கலை கூறுகளும் தனித்துவம் பெறுகின்றன. இந்தத் தொடர்பின் தொடருறுத் தன்மையையும் பண்பாட்டு நெருக்கத்தையும் பிரதிபலிக்கும் வகையில் திருக்கேதீச்சரத் திருத்தலத்தின் கட்டட மீள் புனருத்தானப் பணி அமைந்துள்ளது. கருவறை அர்த்தமண்டபம், மகாமண்டபம், பரிவாரத் தெய்வங்களுக்கான சந்நிதானங்கள் வசந்த மண்டபம் மற்றும் தூண்கள் உள்ளிட்டவை மீள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனரமைக்கப்பட்டுள்ளன. இவை முற்றுமுழுதாக கருங்கற்களானவை. கருங்கற் கட்டுமானப்பணிகள் மாமல்லபுரத்துக் கலைஞர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

கருவறையையும் பிரிக்கும் பகுதியாக அந்தராளம் எனும் அமைப்பு இடம்பெறுகின்றது. இவ் அமைப்பை பார்வையில் தெளிவாக கண்டுகொள்ள முடிகின்றது கர்ப்பக்கிருகத்தின் விமானத்தின் அழகினை எடுத்துக்காட்டுவதாகவும் அந்தராளத்தை அடுத்து அர்த்த மண்டபம் அமைவு பெற்றுள்ளது மண்டபத்தின் வாயிலில் துவாரபாலகர்கள் இருபக்கச் சுவர்களின் கோஷ்டங்களில் இடம் பெறுகின்றது. அர்த்த மண்டபம் கால்புறவாய் (14 6) என்ட அளவில் அமைக்கப்பட்டுள்ளது.

மகாமண்டபம் கருங்கற் சிற்பத் தூண்களால் மிகவும் நுட்பமாகவும், அழகாகவும் அமைவு பெற்றுள்ளது. மகாமண்டபத்தின் வெளியளவு (28 7) என்றவாறாக அளவுப்பிரமாணங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

சிறப்பாக இவ்வாலய இறைவனுக்கு நைமித்திய மகோற்சவத்தின் போது அளிக்கப்படும் வசந்த மண்டபம் விளங்குகின்றது. அரசனுக்கு ராஜ உபசாரங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதை நிகர்க்கும் வண்ணம் இறைவனுக்கும் சிவாலய வழிபாட்டு மரபில் ராஜ உபசாரம் வழங்கும் மரபுக்கு வசந்த மண்டபம் நிலைக்களனாக உள்ளது முதலாவது வீதியில் வடக்கில் ஈசானத்தில் யாகசாலைக்கு அடுத்ததாக இடம் மண்டபம் அமைந்துள்ளதனை அவதானிக்க முடிகின்றது.

**தூண்கள்**

மன்னாரில் “தேன் பொந்து” ஒன்றுள்ளது அதனைச் சென்றடையுங்கள் எனக்கோடிட்டுக் காட்டிய நாவலரது அடையாளப்படுத்தலைத் தொடர்ந்து இவ்வாலயத்தின் கட்டட வளர்ச்சி விதந்து சுட்டத்தக்க வகையில் மேனிலை பெற்றிருந்தது காலந்தோறும் இத்தலத்தின் கட்டுமானக் செல்நெறி படிப்படியான வளர்ச்சியினைப் பெற்று இன்று உச்சப்பரிமாணத்தைக் கண்டிருக்கிறது. கருவறை சுவர்கள் கோஷ்டங்கள் அமைக்கப்பட்ட சிற்பங்கள் யாவும் தூண்களுக்குள் வந்துள்ளன. ஈழத்துக் கட்டடக் கலை வளர்ச்சியில் அதிக சிற்பங்களைத் தாங்கி நிற்பது சிவன், முருகன், சக்தி, கணபதி, விஸ்ணு எனத் தெய்வங்களின் தொன்மக் கூறுகளை தூண்களுக்குள் அகப்படுத்தியிருப்பதும் அதிக எண்ணிக்கையில் கருங்கற் தூண்களைக் கொண்டிருப்பதுமான தலம் திருக்கேதீச்சரமே னெ விதந்து சுட்டுவதற்குரிய தன்மையில் இக் கோயிற் கட்டுமானத்தில் கற்தூண்கள் தனித்த அடையாளத்தைப் பெற்றிருக்கின்றன. இங்குள்ள கற்தூண்களின் மிடுக்கும் கலைநயமும் பார்ப்போரை ஈர்க்கக்கூடியன. ஒவ்வொரு தூண்களும் ஆன்மிகத் தூண்டுவன. கடவுள் சார்ந்த தொன்மக்கதைகளை மீள மீள மீட்டுருச் செய்வதற்கான அறிகையைத் தூண்டுவதற்கான களத்தைத் திறந்து விடுகின்றன. அந்தளவுக்கு கலாதத்துவச் சிறப்புடையனவாக இக்கற்தூண்கள் சமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலுக்குள், கோபுர வாசலினால் உள்நுழையும் போது தோன்றும் காட்சி எம்மைவேறோர் உலகினுள் ஆழ்த்துவிடும். கலையின் இன்பத்தை அனுபவிக்கத்தூண்டும் வகையில் இவ்வாலய அமைப்பினைக் கண்டு மகிழலாம்.

**கர்ப்பக்கிருகம்**

ஆலயத்திற்கு கர்ப்பக்கிருகம் தலை போன்றது கர்ப்பக்கிருகம் என இரண்டு சொற்கள் ஆகிய பதபே கர்ப்பகிருகம் கர்ப்பம் என்பது உயிர் உள்ள தோற்றம் எனவும் க்ருகம் என்பது தோற்றம் உண்டாகிய இடம் எனவும் பொருள்படும். ஒரு சைவாலயத்தின் முக்கியமான மையப்பகுதி கருவறையாகும். உயிரினத்தின் தோற்றத்திற்கு எப்படி கர்ப்பம் முக்கியமானதே அதேபோல தெய்விகம் மிளிர்வதற்கு புனிதமான மையப்பகுதி கர்ப்பக்கிருகம் என்று கொள்ளப்படுகின்றது.

கர்ப்பக்கிருகத்தில் இடம்பெறவேண்டிய பல்வேறு அம்சங்கள் பற்றி பிரமான நூல்கள் கூறுவதற்கேற்ப இவ்வாலயம் அமைக்கப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். இவ்வாலயத்தின் சிவலிங்கம், அம்பாள் கர்ப்பக்கிருகத்துடன் கூடிய கருவறை அமைப்பு பெரிய படிக்கட்டுக்களுடன் கூடிய ஆலய அமைப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இக் கட்டடங்கள் கீழிருந்து மேலாக நிலப்பகுதிக்குள் அமைந்திருக்கும் கர்ப்பக்கிருக கட்டிடத்தின் உயரத்தை மிகைப்படுத்தும் உபபீடம் வெளியே அதிஷ்டத்தை அடுத்து சுவர், பிரஸ்தரம் அதாவது கூரைகிவோம் அதாவது கழத்து எனும் ஆறு பகுதிகளைக் கொண்டு விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் அடித்தளம் உயரமாக அமைக்கப்பட்டது. அது பீடம் எனவும் இன்றும் உயர உபபீடம் னெ்றும் உபபீடத்தைச் சுற்றி சற்சதுரமான கருங்கற்சுவர் பல அலங்கார அமைப்புகளுடன் அமைக்கப்பட்டு அவர்களின் மத்தியில் வணக்கத்திற்குரிய லிங்கம், அம்பாள் விக்கிரகம் என்பன ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பிராமன நூல்களின் ஆகமவிதிகளுக்கமைய சூரியன் உதிக்கும் திசை நோக்கி இவ்வாலயத்தின் மூலமூர்த்தி பிரதிஷ்கூட செய்யப்பட்டுள்ளது. சிவன் கருவறை கிழக்கு நோக்கியும் அம்பாள் கருவறை தெற்கு நோக்கியம் அமைக்கப்பட்டுள்ளதுடன், சிவன் கருவறையானது கால் புறவால் (12 5) அம்பாள் கருவறை (12 4) என்ற அயவுப் பிமானங்களில் ஆகம விதிகளுக்கு அமைவாக அமைக்கப்பட்டுள்ளது.

**அர்த்த மண்டபம்**

சிவாலயக் கட்டடக்கலை அமைப்பில் கர்ப்பக்கிருகத்தைத் தொடர்ந்து இடம்பெறும் மண்டபங்கள் சிறப்பிற்குரியன. மண்டபம் என்பது அலங்காரம் என்பது பொருள் மயமதம் மண்டபத்திற்கு விளக்கம் தருகையில் அதிஷ்டானத்திற்கு மேலே ஸ்தம்பம்,பிரஸ்தரம் திரிவர்க்கம், கபோதம், பிரதி இவைகளுடன் கூடிய யாதொரு கட்டிடமுண்டோ அதற்கு மண்டபம் என்று பெயர் பெறுகின்றது. இதற்கமையவே திருக்கேதீஸ்வர ஆலயமும், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்தம்பமண்டபம், வசந்த மண்டபம் என்றவறாக அமைக்கப்பட்டுள்ளது. மண்டபங்களில் முக்கிய இடம் பெறுவது தூண்கள் ஆகும். கர்ப்பக்கிருகத்தைத் தொடர்ந்து அதனுடன் தொடுக்கப்பட்டவரே முன்னே இருப்பது அர்த்தமண்டபம். இந்த அர்த்த மண்டபத்தையும் இவற்றைக் கண்ணுறுகின்ற போது இன்பநிலை தானே வந்தெய்தும் அந்தளவுக்கு ஆன்மிக நாட்டத்தை தூண்டத்தக்க வகையில் கற்தூண்களும் சிற்பங்களும் காட்சி தருகின்றன. இங்குள்ள கருவறையும் அதனைச் சூழவுள்ள நூற்றுக்கு மேற்பட்ட கற்தூண்களும் ஏனைய மண்டபங்களும் தரை மட்டத்திலிருந்து மிக உயரமாகக் காணப்படும் வகையில் உயர் மேடையொன்றின் மீது கட்டப்பட்டுள்ளமை சிறப்புக்குரியது.

கருவறைச் சுவரில் சிற்பவணிகள் காணப்படுகின்றதை பொதுவாகச் சிவத்தலங்களிலுள்ள மண்டபங்கள் பிரகார சுவர்கள் கோஷ்டங்கள் முதலான கோயிலுறுப்புக்களிலேயே சிற்பங்களின் அணிவரிசைகள் சித்திரிக்கப்படடுவதுண்டு அதனால் இத்தலத்திலுள்ள தூண்களில் மட்டுமே சிற்பங்களின் அணிவரிசைகளைக் காணவியலும் இவையாவும் சிவனின் திருவிளையாடற் கதைகளில் வருகின்ற தொன்மக்கதைகளாகவும் விநாயகர், சக்தி,முருகன், விஸ்ணு முதலான கடவுளர்களின் தொன்மங்களைப் பிரதிபலிப்பனவாகவும் காணப்படுகின்றன.

ஆகவே நுண்கலைகளால் தலையாயது கட்டடக்கலை அதாவது ஏனைய கலை வளர்வதற்கு கட்டடக்கலையே அடித்தளமாகும். இதற்கமைய சிவாலயக் கட்டடக்கலை வளர்ச்சியை திருக்கேதீஸ்வர ஆலயத்தைக் கொண்டுமேல்வருமாறு அனைவரும் அறிவதற்கு ஏதுவாக இக்கட்டுரை அமையும் என இக் கட்டுரையை எழுதியுள்ளேன்.

**உசாத்துணைகள்**

01. திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர், 1976, திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை வெளியீடு.

02. பட்டுசாமி.தி.(1984), இலங்கைத் திருக்கேதீச்சரம் கோயில் அமைப்பு ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானம், முன்னேஸ்வரம், சிலாபம்

03. ரமணராஜா சி, வயது 40. 14.06.2022 மு.ப 10.00 விரிவுரையாளர், யாழ்ப்பாணம்

04. உமாநாத் வயது 38,14,06.2022,பி.ப 4.00 தொழினுட்ப உத்தியோகத்தர்

ஜெயரூபி முருகேசு (இளங்கலைமாணி)
சிவன் அருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏற்றிவிட்ட ஏணி

கருணாகரன் கௌசிகன் ஆகிய என்னுடைய கடந்த கால அனுபவங்களினை பகிர்ந்து கொள்வோமாயின், நான் கைக்குழந்தை முதல் காந்தரூபன் அறிவுச்சோலை எனும் இல்லத்திலேயே எனது குழந்தைப்பருவம் தொடங்கியது என்றே கூறலாம். அவ்வாறாக அவர்களது அரவணைப்பினாலே படிப்படியாக வளர்ந்து கல்வி, விளையாட்டு மற்றும் ஏனைய கலைநிகழ்ச்சிகளைப் பயின்றவனாக என்னுடைய தம்பிமார்கள், தங்கைமார்கள், அண்ணாமார்கள் மற்றும் அக்காமார்களுடன் என்னுடைய பாடசாலைப்பருவம் மிகவும் மகிழ்ச்சிகரமாக நகர்ந்தது என்றே கூறவேண்டும்.

இவ்வாறாக நான் தரம் ஆறுவரை பூரணமாக கல்வி பயின்று முடித்ததும் எனது அடுத்த ஆண்டாகிய ஏழாம் வகுப்பில் அதாவது என்னுடைய பன்னிரெண்டாம் வயதினிலே யுத்தமானது. சற்று எம்மையும் பாதித்தது என்றே கூறவேண்டும். இவ்வாறாகா யுத்தகாலத்தினால்எங்கள் அனைவரினதும் கல்வி மற்றும் உணவு என்பன கேள்விக்குறியாகவே மாறியது எனலாம். அவ் வயதிலே நாம் அனைவரும் ஓடிஆடி கல்வி பயில்வதற்குப் பதிலாக நாமே எமது பாதுகாப்பிற்கான பதுங்கு குழிகளினை அமைத்த ஓடி ஒளிந்து கொண்டமையே அதிகம் எனலாம்.

அவ்வாறான தொரு கடுமையான யுத்த நேரத்திலும் எங்களை தம் பிள்ளைகள் போல் வளர்த்த அம்மாக்களும் மாமாக்களும் எங்களிற்காக பல இன்னல்களினைச் சந்தித்தார்கள் என்றே கூறவேண்டும். அதாவது பெற்றோரை இழந்த செஞ்சோலையிலே வசித்த பெண் பிள்ளைகளினதும் மற்றும் காந்தரூபன் அறிவுச்சோலையிலே வளர்ந்த ஆண் பிள்ளைகளினதும் பூரணபாதுகாப்பிற்கும் மற்றும் உணவிற்காகவும் பல இன்னல்களைச் சந்தித்தார்கள் என்றே கூறவேண்டும். இன்னும் நாம் ஆழமாகக் கூறின் நாம் அனைவரும் ஒரு சமயம் அதாவது இறுக்கமான யுத்தகாலத்தில் எமது உணவாக அங்கர்மாவும் சீனியும் தான் இருந்தது. அவற்றை நாம் இடம் பெயர்ந்து செல்லும் வழியில் பசிக்கும் சமயத்தில் உண்டது மட்டுமல்லாமல் குடி நீருக்காக அலைந்து திரிந்து குளத்து நீரினை போத்தலிலே எடுத்து நாம் அணிந்திருந்த ரீ சேட்டினைக் கொண்டு வடித்தும் குடித்தோம் என்றே கூறவேண்டும் இதன் விளைவாக எம்மில் பலர் வயிற்றுளைவு, வயிற்றுப்போக்கு போன்ற நோய்களையும் நான் உட்பட எனது தம்பிமார்களும் அனுபவித்தனர்.

இவ்வாறாக பல தாங்கௌாத் துன்பங்களிற்கு மத்தியில் மெதுமெதுவாக எமது விடுதலைப் போராட்டம் தோல்விப்பாதையிலே செல்ல எம் அனைவரையும் இராணுவக்கட்டுப்பாட்டினை நோக்கி அழைத்துச் சென்றனர். அதாவது கடுமையான வெயிலிற்கும் மழைக்கும் மத்தியில் கிட்டதட்ட 200 ஆண்பிள்ளைகளினையும் 200 பெண்பிள்ளைகளினையும் அம்மாக்களும் மாமாக்களும் தங்களுடைய சொந்த உறவுகளினையும் கூட பொருட்படுத்தாது எமது பாதுகாப்பில் அக்கறை கொண்டு இரவு பகலாக கிடைக்கும் இடத்தில் சமைத்து உணவு தந்தும் மாக்களினைத் தந்தும் இராணுவக் கட்டுப்பாட்டினை நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அனைவரும் சென்று “செவன் 4” எனும் முகாமில் ஆண் மற்றும் பெண்பிள்ளைகள் அனைவரும் கிட்டதட்ட ஆறு மாதங்கள் தங்கியிருந்தோம்.

பின்னர் அந்த முகாமிலே கடுமையான வெயிலிற்கும் மத்தியிலும் நோய்களிற்கும் மத்தியில்தறப்பாள் கூடாரங்களிலே எமது கல்விப்பருவம் கழிந்தது என்றே கூற வேண்டும். இவ்வாறாக சில மாதங்கள் கழிந்ததும் எமது சகோதரிகளாகிய செஞ்சோலைப் பிள்ளைகயினை வவுனியா இல்லத்திற்கும் எமது அண்ணாக்களை மன்னார் டொன் பொஸ்கோ இல்லத்திற்கும் தரம் எட்டிற்கு கீழ்ப்பட்டவர்களினை மன்னார் சிவனருள் இல்லத்திற்கும் என வவுனியா நீதிபதியிடம் இராணுவம் ஒப்படைக்க வவுனியா நீதிபதி எம்மை மன்னார் நீதிபதி ஒப்படைத்து 2009ம் ஆண்டு ஆவணிமாதம் 18ம் திகதி சிவனருள் இல்லத்தின் முன்னாள் பண்பாளர் திரு.வே.பொ.மாணிக்கவாசகர் ஐயா எம்மைப் பொறுப்பெடுத்தார். நாம் கிட்டதட்ட 80சிறுவர்களிற்கு மேல் அவரிடம் கையளிக்கப்பட்டோம்.

அதன்பின்பு எனது பயணம் சிவனருள் இல்லத்தோடுதொடங்கியது என்றே கூற வேண்டும். அதாவது நாம் சிவனருள் இல்லத்திலே ஓர் அமைதியான சூழ்நிலையினையும் மீண்டும் கல்வி, விளையாட்டு மற்றும் ஏனைய பொழுதுபோக்குகளை மீண்டும் அனுபவிக்கத் தொடங்கினோம் என்றே கூறவேண்டும். இவ்வாறாக நாட்கள் கடந்து செல்லச் செல்ல எம்முடன் வந்த பலர் தங்கள் உறவுகளினைத் தேடிச் சொந்த இடங்களிற்கு மீண்டும் சென்ற மகிழ்வான செய்திகளினையும் அறிந்தோம். இப்படிப்படிப்படியாக வளர்ச்சிப்பாதையினை நோக்கி நகர்ந்து செல்லும் சமயங்களில் இவ்வாறு யுத்தின் வடுக்கலினைச் சுமந்து வந்த எமக்கு சிறுவர் நன்னடத்தைப் பிரிவினால் பல சுற்றுலாக்கள், கருத்தரங்கு நிகழ்வுகள் என்பனவெல்லாம் மேற்கொள்ளப்பட்டதோடல்லாமல் இல்லத்தினுடைய ஸ்தாபர்களான வைத்திய கலாநிதி நமசிவாயம் ஐயா அவர்களினதும் மற்றும் வைத்திய கலாநிதி ஜெயமோகன் ஐயாவினதும் குடும்பங்கள் வருகைதந்து எம்மைபல வழிமுறைகளில் நல்வழிப்படுத்தியதோடல்லாமல் பல சுற்றுலாக்கள் போன்ற பலவற்றினையும் ஏற்பாடுசெய்து எம்மை யுத்த துன்பத்திலிருந்து அமைதியான உலகப்புகழ் பெற்ற திருத்தலமாம் திருக்கேதீச்சரநாதருடைய இறையருள் பூமியில் மிகவும் மகிழ்வாக வாழ வழியமைத்த பெருமை வைத்தியர் இருவரையுமே சாரும் என்றே கூறவேண்டும்.

இப்படியாக எமது மறு வீடு என்று சொல்லக்கூடிய சிவனருள் இல்லத்தில் கல்வியிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் மற்றும் ஏனைய கலைநிகழ்ச்சிகளான கவிதை, கட்டுரை, சங்கீதப் போட்டிகள் மிருதங்க வகுப்புக்கள், நடன வகுப்புக்கள் மற்றும் கணினி வகுப்புக்கள் அனைத்திலும் எமது இல்ல ஆண்மற்றும் பெண்பிள்ளைகள் என இருவரும் பல திறமைகளிற்குச் சொந்தக்காரர்கள் என்றே சொல்ல வேண்டும் அதற்கான தோர் எடுத்துக்காட்டாகப் பார்க்கின் நானும் எனது சகவகுப்பு சகோதர சகோதரிகள் என ஏழு பேர் ஒரேதடவையில்பல்கலைக்கழகம்சென்றபெருமைஎமது இல்லத்திற்கும்அதேவேளைஎமதுபாடசாலைக்கும் பெருமை சேர்த்த விடயம் என்றே சொல்ல வேண்டும். அதாவது நாமே எமது பாடசாலையில் முதன் முறையாக பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள் என்பதுடன் சென்ற அனைவரும் இல்லப் பிள்ளைகள் என்ற பெருமையும் இதனுள் அடங்கும் என்றே கூறவேண்டும். அவ் எழுவரில் மூன்று பேர் கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கும் நான்கு பேர் யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்திலும் என பட்டப்படிப்பினை மேற்கொண்டமை என்பது எமது இல்ல ஸ்தாபர்களிற்கு பெருமை கொள்ளுமோர் அடைவுமட்டம் என்றே கூற வேண்டும். இவ் பல்கலைக்கழக அடைவுமட்டத்தினூடாக இன்று எம்மைப்பார்த்து பல பிள்ளைகள் பல்கலைக்கழகம் மற்றும் நுண்கலைத்துறைகளிற்கும் செல்வதோடல்லாமல் தொழிற்பயிற்சிகளினை மேற்கொள்கின்றமையும் குறிப்பிடத்தக்கதோர் விடயம் என்றே கூற வேண்டும். அத்துடன் நான் இன்று பட்டப்படிப்பினை முடித்து எமது ஸ்தாபகர்களினால் ஆரம்பிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களைக் கொண்ட பெணகளிற்கான “சிவனருள் உற்பத்திகள்” நிறுவனத்தில் உற்பத்திகள் மேற்பார்வையாளராக தொழில்புரிகின்றமையும் குறிப்பிடத்தக்கது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடல்லாமல் எமது ஸ்தாபர்கள் இருவரும் எம்மை வளர்ப்பது மட்டுமன்றி பெற்றோரை இழந்த பிள்ளைகளினை தம் பிள்ளைகள் எனக்கருதி ஒவ்வோர் பிள்ளைகளிற்கும் எதிர்கால நலன் கருதி பன்னிரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட தனித்தனி வீடு கட்டிக் கொடுக்கின்றதோர் பரந்த மனமுடைய பணியினையும் நான் எனது இக் கட்டுரையில் குறிப்பிடுவதில் பெருமை கொள்கின்றேன் இவ்வாறாக நான் மிகச் சுருக்கமாக சிவனருள் இல்லத்தில் என்னுடைய அனுபவத்தினை பகிர்ந்து கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

அநாதரவான என்னை இன்று பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பிபை முடித்து வெளியேர காரணகர்த்தா சிவனருள் இல்லமே. அது என்னை "ஏற்றிவிட்ட ஏணி" தொடர்ந்தும் நான் என்னுடைய அனுபவப்பகிர்வினை முடிப்பதற்கு முன்பு கடந்த மூன்று ஆண்டுகள் என்பது பல மாற்றங்களைச் சந்தித்த வருடம் என்றே கூறவேண்டும் அவற்றினை நாம் படிப்படியாக நோக்கின் 2019ம் ஆண்டு புரட்டாதி மாதம் முதலாம் திகதி எமது இல்லத்திற்கு புதிய பணிப்பாளராக மன்னார் மாவட்டத்தின் பிரபல்யமான ஓய்வு பெற்ற அதிபராகிய திரு. செ. செல்வரஞ்சன் சேர் அவர்கள் கடமைகளினைப் பொறுப்பேற்றார். அவர் பெறுப்பேற்ற சமயம் எமது இல்லத்திலே ஆண்கள் மற்றும் பெண்கள் என மொத்தம் நூறிற்கும் குறைவான பிள்ளைகளே இருந்தனர் எனலாம். இவ்வாறாக பிள்ளைகளின் வீதம் குறைந்து காணப்பட்ட சமயம் அனைவரிற்கும் குறிப்பாக ஸ்தாபகர்களும் கூட எமது இல்லத்தினுடைய எதிர்காலம் குறித்து சற்று யோசித்துக் கொண்டிருந்த சமயத்திலேயே எமது புதிய இல்லப்பணிப்பாளராகிய செல்வரஞ்சன் சேரினுடைய எண்ணக்கருவில் தோன்றியதே சிவனருள் ஆண்கள் விடுதி மற்றும் சிவனருள் பெண்கள் விடுதிகள் ஆகும். இவ்வாறு புதிய பரிமாணத்தின் மூலம் மீண்டும் எமக்குப் பல பெண்கள் மற்றும் ஆண்பிள்ளைகள் கிடைக்கப் பெறலாயினர். அப்பிள்ளைகள் வடக்கு, கிழக்கு, மலையகம் எனப் பலமாவட்டங்களிலிருந்தும் கல்வி கற்று வருகின்றமையினை நாம் மிக மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் நான் இவ்மூன்றாண்டு உணவு முறையினைப் பற்றிக் கூறின் இக்காலப்பகுதியில் நான் மிக ஆரோக்கியமான மற்றும் காலபோகத்திற்குரிய பழ வகைகள் போன்றவற்றினை உண்ண முடிந்தது என்றே கூறவேண்டும் இதில் நான் குறிப்பாக இலந்தப்பழசீசன், நாவற்பழசீசன், பலப்பழசீசன் போன்ற காலங்களில் நாமே அதாவது உயர்ர்தர மாணவர்கள் ஆகிய நாமே சேரிடம் அனுமதி பெற்று பழங்களினை மரங்களிலே பெற்று அனைவருற்கும் பகிர்ந்து உண்டமையினையும் அறிய முடிவதோடு இன்றைய பொருளாதார நெருக்கடியிலும் கூட நாம் சேருடன் விரும்பிய உணவுகளினையும் மற்றும் பால்மா வகையினையும் ஓர் தந்தையிடம் கேட்டுப் பெறுவதைப் போன்று பெற்றுக் கொள்ள முடிகிறது என்றே கூறவேண்டும். இவற்றுடன் நான் எமது ஆடைகளினைப் பற்றிக் கூறின் இவ் மூன்றாண்டில் நாம் பல விரும்பிய ஆடைகளைப் பெற்றோம் என்றே கூறவேண்டும். அதாவது இதில் நான் கூற முனைவது யாதெனில் நாம் விரும்பிய உடையினை சேர் எம் அனைவருடனும் கலந்தாலோசித்தே வாங்கித்தந்தார் எனலாம். உதாரணத்திற்கு இக்காலகட்டத்தில் நாம் நான்கு சிவனருள் ஜேர்சிகள், முழுக்கை சேட்கள், ஜின்ஸ்கள், வேட்டி மற்றும் வீட்டு உடைகள் என நாம் விரும்பியதனையே வழங்கினார். என்றே கூறவேண்டும்.

இவற்றோடு நாம் சுற்றுலாக்கள் பற்றி நோக்கின் இவரது காலங்களில் பல ஒரு நாள் சுற்றுலாக்களும் அகில இலங்கை ரீதியான சுற்றுலா போன்ற பல கல்விசார்ந்த மற்றும் சமயம் சார்ந்த சுற்றுலாக்களிற்குச் சென்றதோடு இங்கும் அவர் நாம் விரும்பிய உணவுகளினையும் பாதுகாப்பான தங்குமிட வசதிகளினையும் ஏற்படுத்தித்தந்ததோடு நாம் விரும்பிய பொருட்களினை வாங்குவதற்கான பணத்தினையும் வழங்கத்தவறவில்லை என்றே கூறவேண்டும்.

இதைதவிர செல்வரஞ்சன் ஆசானுடைய கால கல்விசார்ந்த செயற்பாடுகளினை நோக்கின் அவர் எங்கு சென்றாலும் முதலில் வாங்கும் பொருளாக பாடப்புத்தகங்கள் என்றே கூறவேண்டும். அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களினுடைய தேவையினை அறிந்து பயிற்சிப்புத்தகங்களினை வாங்கியதோடு மட்டுமன்றி அவரது அன்றாட வேலைப் பழுவிற்கு மத்தியிலும் O/L, A/L மாணவர்களிற்கு ஒருநாள் தவறாது வகுப்புக்களும் அவர்களிற்கு பரீட்சைகளும் வைப்பதோடு அவர்களினை உற்சாகம் ஊட்டும் வகையில் பரிசில்களும் வழங்குவார். அத்தோடு வாசிப்பு மாதத்திலே பொதுஅறிவுப்போட்டிகளினையும் மற்றும் வலயமட்டம், சிறுவர் நன்னடத்தைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கட்டுரை, சித்திரப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கும் ஊக்கப்படுத்துவதோடு அவற்றில் எம்பிள்ளைகள் 1ம், 2ம், 3ம் போன்ற இடங்களினையும் பெற்றுள்ளனர் என்றேகூற வேண்டும். இவைதவிர மாதாந்த பிறந்தநாள் விழாக்கள், சிறுவர் தினம், வாசிப்புமாத தினம், வாணி விழாக்கள் போன்ற கலை நிகழ்வுகளினையும் நடாத்துவதோடு மாணவர்களது திறமைகளினை வெளிக்கொணரும் வகையிலான நிகழ்வுகளினையும் ஏற்பாடு செய்து கொடுத்து திறமையான மாணவர்களிற்கு பரிசில்களினையும் வழங்கிச் சிறப்பிப்பார். இவற்றுடன் ஒவ்வொரு வருட இறுதியிலும் சிறந்த இல்லம், சிறந்த விடுதி, சிறந்த மாணவர்கள் போன்றவற்றிற்கும் மிகப் பெறுமதியான பரிசில்களினையும் வழங்கி உற்சாகம் ஊட்டியுள்ளமையினையும் நாம் அறிந்த விடயம் என்றே கூறவேண்டும். இவ்வாறாக நாம் பல உதாரணங்களினைக் கூறிக்கொண்டே செல்ல முடியும் எனவே மேற்கூறிய விடயங்களினை கருத்திற் கொண்டு இன்று இவருடைய வருகையின் பின் இல்லத்திலும் சரி, விடுதியிலும் சரி கல்வி கற்கின்ற பிள்ளைகள் அனைவரும் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் வளர்ந்து வருவதற்கு இல்ல பிள்ளைகள் அனைவரையும் தனது சொந்தப்பிள்ளைகள் போல் கண்ணுங்கருத்துமாக வளர்ந்து வருகின்ற செல்வரஞ்சன் ஆசானையே சேரும் எனலாம்.

**செல்வன் க. கௌசிகன்**
கிழக்குப் பல்கலைக்கழகம்
சிவனருள் இல்ல மாணவன்

வாழ்க்கையில் வெற்றி பெற
வேண்டுமானால்
நல்ல நண்பர்கள் தேவை.
வாழ்நாள் முழுவதும் வெற்றி
பெற வேண்டுமானால்
ஒரு எதிரியாவது தேவை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயிலனின் பேனா முனையிலிருந்து சிந்திய முத்துக்கள்

எங்கோ பிறந்தோம் நாங்கள் ஏன் பிறந்தோம் என்று அறியாது வாழ்ந்தோம். பெற்றவரை இழந்தோம் பெரியோரை நாமறியோம். உறவுகள் இல்லாத ஊதியாய் வாழ்ந்தோம். நாம் வாழ்ந்த கொடிய வாழ்வில் கடவுளாய் தோன்றி கரம் கொடுத்து அரவணைத்து கண்ணை இமை காப்பது போல் இல்லங்கள் பல அமைத்து இதமான வாழ்வு தந்து கல்விக்கூடம் அனுப்பி கல்வி பயில வைத்து பசியாற உணவும் படுப்பதற்கு வசதிகளும் இதமான வாழ்வும் இனிய புது உறவுகளும் இறைவன் மேல் பக்தியும் இதமான வாழ்வும் தந்த சிவன் அருள் இல்லத்திற்கு இக்கவிதை சமர்ப்பணம்.

கவிப்பாவால் உமைப் போற்றி - என்
கண்ணீரால் உம் பாதம் கழுவி
மனம் மகிழ்ந்து மலர் தூவி - உம்
திருவடியை பணிகின்றேன்.

பாசமாய் எமை அணைத்து
பண்போடு எமை வளர்த்து
நேசக் கரம் நீட்டி எமை
நேர் வழியில் நடக்க வைத்து
தாயா களமை வளர்த்து
தந்தை போல் அன்பு காட்டி
உறவுகள் இல்லா எமக்கு
உதவிகரங்கள் நீட்டி
வெயிலினியே நிழலாக
மழை பெய்தால் குடையாக
கண்ணுக்கு இமை போன்று
காவலனாய் நீர் இருந்து
கல்விதனை கற்க வைத்து
கண்ணியமாய் வாழ்வளித்து
மெழுகுபோல் நீர் உருகி
பிறர் வாழ ஒளி கொடுத்து
ஒரு குலை தேங்காய் போல்
எமை எல்லாம் அரவணைத்து
கவலை இல்லா வாழ்வு தந்த
கடவுள் யார் என்று கேட்டால்
சிவன் அருள் உறவுகள் என்பேன்.

இல்லங்களை அமைத்தார்கள்
இதமான வாழ்வு தந்தார்கள்
அடிமையாக வாழாமல்
அன்பு காட்டி வாழ வைத்தார்கள்.
எம் சிவன் அருள் உறவுகள்.

நன்றி

**செல்வன் து.குயிலன்**
சிவனருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனையாளர்களின் சிந்தனையில் இருந்து என்னைக் கவர்ந்த சில துளிகள்

- சுற்றி இருப்பவர்கள் சொல்வதை எல்லாம் கேட்டுக்கொள், கற்றுக்கொள் தீர்மானிப்பது உன் சுயமாக இருக்கட்டும்.
- நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதுமே மண்டியிடுவது இல்லை.
- கல்வியின் வேர்கள் கசப்பானவை ஆனால் கனிகள் இனிப்பானவை.
- அமைதிக்காகவே வியர்வை சிந்தினால் போரில் ரத்தம் சிந்த வேணடடியதில்லை .
- உற்சாகமான உழைப்பு இல்லாமல் உயர் வெற்றி எதையும் சாதிக்க முடியாது.
- கடுமையாக உழைப்பதைத் தவிர வெற்றிக்கு ரகசியம் வேறு இல்லை.
- துயரம் வந்தால் அதைத் தொடர்ந்து வெற்றி வருமென எதிர் பாப்பவன் புத்திசாலி.
- நாம் நம் நன்மை அடைய மற்றவர்களை எதிர்பார்க்கும் வரை நாம் அடிமைகளே.
- உன் எண்ணம் தான் உனது வாழ்க்கை உனது வாழ்க்கை தான் உனது எண்ணம்.
- அன்பு செலுத்துதல் ஆணுக்கு அழகு புரிந்து கொள்ளுதல் பெண்ணுக்கு அழகு.
- இன்பத்தைப் பங்குபோட்டால் இரட்டிப்பாகும் துன்பத்தை பங்கு போட்டால் பாதியாகும்.
- வென்ற பிறகும் சமாதானம் பேசுபவன் உண்மையான வீரனாகிறான்.
- எதிரியை வெல்வதை விட அவனைப் புரிந்து கொள்வதே மேல்.
- ஒருபோதும் போராடாமலே இருப்பதை விடப் போராடித் தோற்பதே மேல்.
- இன்று நல்லதைப் பேசி நல்லதை எழுத நாளைய சந்ததி உன்னை பின்பற்றும்.
- மனைவிக்கு உலகமாய் இரு ஆனால் மனைவிதான் உலகம் என்று இருந்து விடாதே.
- உன் பொறாமையால் மற்றவர்கள் தாழ்வதில்லை நீதான் தாழ்வாய்.
- பிரிவு உறவை வளர்க்கும் அடிக்கடி பிரிவது கசக்கும்.
- ஏமாற்றுவது கெட்டிக் காரத்தனமல்ல பெரும் நம்பிக்கைத் துரோகம்.
- வாக்குறுதி நிலவு போன்றது. உடனே நிறைவேற்று அல்லது தேயும்.
- சொல்லிய வார்த்தைக்கு நீ அடிமை சொல்லா வார்த்தை உனக்கு அடிமை.
- பணிவு என்பது தாழ்மையின் சின்னமல்ல உயர்ந்த பண்பின் அறிகுறி.
- உங்களுக்குக்காக பொய் சொல்பவன் உங்களுக்கு எதிராகவும் பொய் சொல்வான்.
- உங்கள் மனம் பிழை என்று சொல்வதை ஒரு போதும் செய்யாதீர்கள்.
- வாழ்க்கையை வகுத்துக்கொள் இல்லாவிட்டால் வாழ்க்கை அர்த்தமின்றி கழிந்து விடும்.

**மரியதாஸ் ஞானக்கோன்**
A/L (2022)
சிவனருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துகின்றேன்

1. திருஞான சம்பந்தர் திருமுறையில் இடம் பெற்ற
திருசேர் தேசம்;
திருக்கேதீச்சரமாய் மாதோட்ட நன் நகராய்
தெரிந்த தேசம்;
முருகுடைய மன்னார் மாவட்ட இயற்கைவளம்
முதன்மை கானும்;
பெருமையினை நிரற்படுத்திப் பேசுதற்கு உண்மையிலே
பலநாள் தேவை;

2. அவனியுள்ள மக்களெலாம் அதிசயிக்கும் விதமாக
அமைந்த கூடம்;
சிவனருள் இல்லமெனச் சிறப்பான நாமத்தைத்
தனதாய் ஆக்கி;
அருமை மிகு சேவையினால் அனைவருக்கும் சமனான
கல்வியூட்ட;
நிறுவுனர்கள் இருவருளார் நிலையான திட்டங்கள்
நிலைக்கும் வண்ணம்!

3. நல்லுள்ளம் தான் கொண்ட நமசிவாயம் ஜெயந்திரன்
அவரோடென்றும்;
வல்லவராம் ஜெயசிங்கம் ஜெயமோகன் இருவருமே
வாய்த்த தொண்டர்!
இனிதான சேவையினை இயற்றுகின்ற செல்வரத்னம்
செல்வ ரஞ்சன்;
பணிப்பாளர் என வாய்த்தார்! பாராட்டும்
பணிகள் ஓங்கும்!

4. பதினேழு வருடங்கள் பண்பான சேவையுடன்
பயணிக் கின்ற
சிவனருள் இல்லத்தின் செப்பரிய நிறைவு விழா
சிறப்புப் பெற்று-
கற்கின்ற மாணவர்கள் பல்கலைக் கழகத்தில்
கால் பதிக்கும்,
வெற்றியினை விழிகண்டு வியந்திடவே உள்ளத்தால்
வாழ்த்துகின்றேன்

**நி.சத்தியா**
விடுதிக் காப்பாளர்,
சிவனருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகளும் அதன் விடைகளும்

1) நித்திரையின் தூதுவன் நினையாமல் எட்டிப் பார்ப்பவன்? அவன் யார்?
கொட்டாவி.

2) துளித் துளியாய் கண்ணீரை விட்டு இருளை தூர விரட்டும்? அது என்ன?
மெழுகு திரி

3) கண்ணில் கண்டதைச் சுருட்டிக் வண்ண வண்ண நிறங்களில் வெளியேறுவான்? அவன் யார்?
கமரா

4) கண்ணுக்குதெரியாதவன் உயிருக்கு உகந்தவன் ? அவன் யார்?
காற்று

5) தலையைச் சீவினால் தாளில் மேய்வான்? அவன் யார்?
பென்சில்

6) சுற்றுவது தெரியாது ஆனால் சுற்றிக் கொண்டிருப்பான்? அவன் யார்?
பூமி

7) வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல்? அது என்ன?
முட்டை

8) கழற்றிய சட்டையை திருப்பி போட மாட்டேன்? அவன் யார்?
பாம்பு

9) நெருப்பில் வெந்தவனுக்கு நீண்ட நாள் ஆயுள்? அவன் யார்?
இரும்பு

10) தாவுவது அவனே தாக்குவதும் அவனே? அவன் யார்?
காற்று

11) தலையில் சீவினால் தாகம் தீர்ப்பான்? அவன் யார் ?
இளநீர்

12) வாய் இல்லை. வார்த்தைகள் சொல்வான், உயிர் இல்லை. ஊருக்குப் பறப்பான்? அவன் யார்?
கடிதம்

13) மண்ணிலே பிறந்து விண்ணிலே மறையும், வாசனை தந்து நெஞ்சிலே நிறையும்? அது என்ன?
சாம்பிராணி

14) உரசினால் உயிரை விடுவான்? அவன் யார்?
தீக்குச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15) அடர்ந்த காட்டினுள் நுழைவான். அலைந்து திரிந்து அழகுபடுத்துவான்? அவன் யார்?
சீப்பு

16) பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல்? அது என்ன?
கிளி

17) அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது? அது என்ன?
நீர்

18) பழகினால் மறக்காதவன் பயந்தோரை விடாதவன்? அவன் யார்?
நாய்

19) ஆடிஆடி நடப்பான் அரங்கத்தில் நடப்பான்? அவன் யார்?
யானை

20) ஆனை விரும்பும், சேனை விரும்பும், அடித்தால் வலிக்கும்,கடித்தால் இனிக்கும்? அது என்ன?
கரும்பு

21) ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் தூசி கிளம்பாது? அது என்ன?
எறும்பு

22) இவன் அழுதால் உலகம் சிரிக்கும்? அவன் யார்?
வானம்

23) ஊசி போல் இருப்பான் ஊரையே எரிப்பான்? அவன் யார்?
தீக்குச்சி

24) வெளியில்போகும் போது நண்பன் வீட்டிற்கு வந்தால் விரோதி? அவன் யார்?
செருப்பு

25) நீந்தத் தெரியும் மீனல்ல, நடக்கத் தெரியும் மனிதனல்ல, இறக்கை யுண்டு தேனியல்ல, இறகு உண்டு பறக்காது?
வாத்து

26) வானம் விடும் கண்ணீர்? அது என்ன?
மழை

27) மேலே பறப்பவனுக்கு கீழே கடிவாளம்?அது என்ன?
பட்டம்

28) மீன் பிடிக்கத் தெரியாது வளை பின்னுவான்? அவன் யார்?
சிலந்தி

29) தண்ணீரில் குதித்தவன் வீட்டுக் குழம்பில் கொதித்தான்? அவன் யார்?
மீன்

30) தலை தெரியும் உடல் தெரியாது கைபட்டால் உரு தெரியாது? அவன் யார்?
நீர்க் குமிழி

டி.மனிஸ்
தரம் - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவனருளால் உதித்த சிவனருள் இல்லம்

ஈழத்திருநாட்டிலே சிவன் அருள் பாலிக்கும் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாம் திருக்கேதீச்சரம். இங்கு வண்ண மயில் ஆடும் அரங்குகள் பல. குரங்குகள் கூத்தாடும் விதங்களும் பல. குயில் கூவ, பறவை இனங்கள் பல சேர்ந்து இசைக்குமே மெல்லிசை. அதைக் கேட்டு அசை நடனம் போடும் மரங்கள், இதன் நடுவே ஆதரவற்ற சிறுவர்களை அரவணைக்க கரம் நீட்டும் அன்பு இல்லம் அதுவே எம் சிவன் அருள் இல்லம்.

சுனாமிப் பேரலையாலும், அரங்கேற்றப்பட்ட போராலும், சிதறிய குடும்பங்களும், இலட்சியங்களும் பல. அவற்றை மீள எழ வைத்தது Dr. நமசிவாயம் அவர்களின் ஆழ் மனதின் ஓர் அலை. அதுவே இன்று 17ஆண்டுகளைக் கடந்து வளர்ச்சி காணும் சிவனருள் இல்லம். ஆம் அன்று பல சிறார்கள் தங்கள் இல்லங்களை இழந்தார்கள். அவை கல்வி, கலை, அன்பு, உறவு, இலட்சியம் என பல கிளைக்கொண்டிருந்தன. இன்று அவை அனைத்தையும் சிறார்களுக்கு ஒன்றுசேர வழங்கி பெரு விருட்சமாகி வளர்ந்து வருகின்றது சிவனருள் இல்லம்.

அதன் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக Dr.ஜெயேந்திரன் நமசிவாயம் குடும்பத்தினர், Dr. ஜெயசிங்கம் ஜெயமோகன் குடும்பத்தினர் திகழ்கின்றார்கள். அவர்களின் ஆத்மார்த்தமான சேவைகளுக்கு சிறார்கள் மீது அவர்கள் கொண்ட தீராத காதலே காரணம். இவ் வளர்ச்சிக்கு உறுதுணையாக பணிப்பாளர்கள், பணியாளர்கள் பலர் தமது சேவைகளை காலத்திற்கு காலம் வழங்கி வந்துள்ளனர்.

இன்று திரு.செ.செல்வரஞ்சன் அதிபர் அவர்களின் பல வருட சேவை அனுபவத்தினாலும், தன்னலமற்ற சேவையினாலும் தன்னகத்தே அவர் கொண்ட தனித்துவ ஆற்றல்களாலும் இவ் இல்லம் அவர் தலைமையில் எழில் கொண்டு பல வளர்ச்சிப்படிகளைக் கண்டுள்ளது என்றால் மிகையாகாது.

இவ் இல்லம் இன்று பல பட்டதாரி மாணவர்களையும், தலைமைத்துவ பண்புள்ள மாணவர்களையும், நற்பிரஜைகளையும் உருவாக்கியுள்ளது. இவ் இல்லத்தின் பணி மென்மேலும் சிறப்புற்று அழியாப் புகழ்கொண்டு வளர வேண்டுமென கௌரியம்பாள் உடனுறை கேதீச்சரப் பெருமானை வேண்டிப் பிரார்த்தின்றேன்.

**K.தர்சிகா**
சிவனருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவேகானந்தரின் பொன்மொழிகள்

- ☞ உனது மனதை உயர்ந்த இலட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அதிலிருந்தே நல்ல செயல்கள் விளையும்.
- ☞ நேரத்தை வீணாக்கும் போது கடிகாரத்தைப் பார். ஓடுவது முள் அல்ல. உன் வாழ்க்கை.
- ☞ உலகிலுள்ள தீமைகளைப் பற்றியே நாம் வருந்துகிறோம். நம் உள்ளத்தில் எழும் நச்சு எண்ணங்களைப் பற்றி சிறிதும் கவலை கொள்வதில்லை. உன் உள்ளத்தை ஒழுங்குபடுத்தினால் இந்த உலகமே ஒழுங்காகிவிடும்.
- ☞ யோசிக்காமல் நீ செய்யும் ஒவ்வொரு செயலும் பின்னாளில் உன்னை யோசிக்க வைக்கும்.
- ☞ எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையில் நீங்கள் செய்து முடிப்பீர்கள்.
- ☞ உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யலாம். ஆனால் எதற்காகவும் உண்மையை தியாகம் செய்து விடாதீர்கள்.
- ☞ யோசிக்காமல் நீ செய்யும் ஒவ்வொரு செயலும் பின்னாளில் உன்னை யோசிக்க வைக்கும்.
- ☞ பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்ய வேண்டிய வேலை தட்டிக் கொடுப்பது மட்டும் தான்.
- ☞ நான் இப்போது இருக்கும் நிலைக்கு நானே பொறுப்பு.
- ☞ நீ எதாவது ஒன்றை மனதில் நினைத்துப் பார். உடனே அதைப்பற்றிய உருவகம் இல்லாமல் நீ எதையுமே பார்க்க முடியாது. அது காற்றோடு இருந்தாலும் கூட இலைகள் அசைந்தாடுவது போன்றதொரு உருவகம். ஒருகணம் உன் மனதில் வந்து போகும். நம்முடைய மூளை அப்பத்தான் டிசைன் செய்யப்பட்டுள்ளது. எழுத்தாக இருந்தாலம் சரி எண்ணாக இருந்தாலும் சரி. அதற்கு ஒரு உருவத்தை கொடுத்துள்ளோம். ஏன் கொடுத்துள்ளோம்? அப்படியென்றால் தான். நாம் மூலையால் அதை சிந்தித்துப் பார்க்க முடியும். இது போலத்தான் கடவுளுக்கும் இந்துமதம் உருவத்தை கொடுத்தது. சிலையாக வடித்து வைத்துள்ளது. அதற்கு காரணம். கடவுள் என்னும் பரம்பொருளை நாம் சரியாக சிந்தித்து புரிந்து கொள்வதற்கே.
- ☞ இதயம் சொல்வதை செய் வெற்றியோ தோல்வியோ அதை தாங்கும் சக்தி அதற்கு மட்டும் தான் உண்டு.
- ☞ நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனதுதான். சமுதாயத்தின் வீழ்ச்சிக்கு காரணம் என்று நான் சொல்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ பகை பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.

☞ வெள்ளிகளை சந்தித்தவன் இதயம் பூவைப் போல மென்மையானது. தோல்வியை மட்டுமே சந்தித்தவன் இதயம் இரும்பை விட வலிமையானது.

☞ பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவி சாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.

☞ செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த லட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து அதிலிருந்து நல் செயல்கள் விளையும்.

☞ தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுவார்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகின்றார்கள்.

☞ உலகம் எவ்வளவு பெரியதோ அவ்வளவு பெரியதாக உங்கள் இதயத்தை விரிவாக்குங்கள்.

☞ எல்லோரிடமும் அன்பைக் கொடுத்து ஏமாந்து விடாதே. யாரிடமும் அன்பைப் பெற்றுக் கொண்டு ஏமாற்றி விடாதே.

☞ நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம் கூட சக்தியற்றது ஆகிவிடும்.

☞ நீ பட்ட துன்பத்தை விட அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது.

ப.சிவஞானமூர்த்தி
நிர்வாக உத்தியோகத்தர்
சிவனருள் ஆண்கள் இல்லம்
திருக்கேதீச்சரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிகளில் சிவனருள் இல்லத்தின் பங்களிப்பு

பக்தர்கள் தொழுகின்ற பாலாவியின் கரைமேல் எழுந்தருளியிருக்கின்ற திருக்கேதீச்சர ஆலயத்தின் வெளி வீதியின் வடக்குப் புறத்தில் தேர் முட்டி அருகாமையில் பெண்கள் இல்லமும் மேற்கு வீதியில் ஆண்கள் இல்லமும் அமைந்துள்ளது. சைவப் பெரியார் ஸ்ரீலஸ்ரீ.ஆறுமுகநாவலர் அவர்கள் கி.பி. 1872 ஆம் ஆண்டு யாழ்பாண சமய நிலை எனும் துண்டுப்பிரசுரத்தில் மன்னார் மாவட்டத்தில் **"தேன் பொந்து ஒன்று உள்ளது அதனை சென்று அடையுங்கள்"** என்று அறைகூவல் விடுத்து திருக்கேதீச்சர ஆலய திருப்பணிக்கு வித்திட்டவர் ஆவார். அவரது வழி நின்று தற்போது இவ் ஆலயமானது இந்திய அரசின் நிதி உதவியுடன் கருங்கல் சிற்ப வேலைப்பாடுகள் இடம் பெற்றுஇ 06.07.2022 அன்று மகா கும்பாபிஷேகம் இடம்பெற சிவனருள் கைகூடி வந்துள்ளது.

இத்தருணத்தில் 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புகலிடம் வழங்கி அவர்களுக்கான சேவைகளை வழங்க உருவாக்கப்பட்ட சிவனருள் இல்லம் 2009 ஆண்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களையும் உள்வாங்கி தற்போது கிழக்கு, மலையக பிராந்தியங்களில் வசதிகளற்ற சிறுவர்களையும் தன்னகத்தே உள்வாங்கி ஆண்கள் பெண்கள் இல்லம் என படிப்படியாக வளர்ச்சி பெற்று 18 ஆண்டுகளை பூர்த்தியாகியுள்ள இந்நேரத்தில் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிகளில் சிவனருள் இல்லம் எத்தகு இறை பணியை ஆற்றி உள்ளது என நோக்குவோம்.

**1. சிவனருள் இல்ல நிறுவுனர்களின் வழிகாட்டுதல்**



நெடுங்காலமாக இவ்வாலய திருப்பணி சபை தலைவராக மறைந்த மூதறிஞர் இரா.நமசிவாயம் ஐயா அவர்கள் இருந்து எம்பெருமானுக்கு அளப்பெரும் பணிகளை ஆற்றி உள்ளார். அவரது வழி வந்த எமது வைத்திய கலாநிதி ஜெயந்திரன் நமசிவாயம் ஐயாவும், எல்லாம் வல்ல கௌரியம்பாள் உடனுறை திருக்கேதீச்சர சிவபெருமான் மீது அளவற்ற அன்பும் பக்தியும் கொண்டு தொண்டுகள் செய்தும் நித்தம் தொழும் சிவ அடியவராவார்.

ஐயா லண்டனிலிருந்து சிவனருள் இல்லம் வந்து தங்கும் காலத்தில் அதிகாலையில் எழுந்து சிறுவர்களையும் சிறுமியர்களையும் அழைத்துக் கொண்டு, பாலாவி தீர்த்தம் சென்று நீராடி தலையில் தீர்த்த குடங்களை சுமந்துகொண்டு திருக்கேதீஸ்வர பதிகத்தைப் பாடியும் "நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" என்ற மாணிக்கவாசகர் பெருமான் அருளிய திருவாசகத்தை பாடியும் ஆலயத்தை வலம் வந்து வணங்கி மேற்குப் புறத்தில் அமைந்துள்ள சோழர்கால மகாலிங்கத்திற்கு பாலாவி தீர்த்தத்தால் நீராட்டுவதும், பின்னர் கௌரிஅம்பாள் உடனுறை திருக்கேதீஸ்வர சிவபெருமானை வணங்கி செல்வது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வழக்கமும், திருக்கேதீச்சர பெருமானின் அருளும், இல்ல பிள்ளைகளை சைவசமய சூழலில் சைவ பாரம்பரியங்களை பேணி வளர்க்க வேண்டும் என்ற இல்ல நிறுவுனர்களின் திடமான எண்ணமும், சிவனருள் இல்லத்தில் பணிப்பாளர்களாகவும், சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர்களாக சேவை புரிந்தவர்களது வழிகாட்டுதலும், மன்/ கௌரிஅம்பாள் பாடசாலை சமூகத்தின் சமயம் சார்ந்த செயற்பாடுகளும் மற்றும் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு மிக அருகாமையில் எமது இல்லம் அமைந்தமை முதலிய காரணங்களால் நாம் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிகளில் பங்கு கொள்ள வித்திட்டது எனலாம்.

## 2. கூட்டுப்பிரார்த்தனை



வாராந்தம் வெள்ளிக்கிழமை தோறும் திருக்கேதீஸ்வர ஆலய மாலை பூசை நிறைவு பெற்ற பின்னர் பஞ்சபுராணம், திருக்கேதீஸ்வர பதிகம், சிவபுராணம், பக்தி பாடல்கள் முதலியவற்றை பாடி கௌரி அம்பாள் உடனுறை திருக்கேதீஸ்வர பெருமானே மகிழ்வித்து வருகின்றோம். ஆலயத்திற்கு வரும் அடியவர்களும் இதில் இணைந்து கொள்கின்றனர். இவ்வழிபாட்டில் அம்மை அப்பன் இல்ல அம்மா, பெரும் ஆர்வத்துடன் கலந்து கொள்வதுடன் எம்மை ஊக்குவித்தும் வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது ஆகும். இவ் கூட்டு வழிபாடு மனதிற்கு அமைதியையும் இறை உணர்வையும் தரவல்லன. வெள்ளிக்கிழமை தோறும் வாராந்தம் விபூதி பிரசாதங்களை பொதியிடும் பணியினை கோபி ஆசிரியரின் மேற்பார்வையில் மேற்கொள்ளதும் வழக்கம்.

## 3. மகோற்சவ கால தொண்டுகள்


தேர்த்திருவிழாக் காலங்களில்
சிவன் அருள் இல்ல ஆண்கள் விடுதி
தண்ணீர்ப்பந்தல்

இல்லம் உருவான காலம் முதலே மகோற்சவ காலங்களில் சிவனருள் இல்லம் தொண்டுகள் ஆற்றி வந்துள்ளது. இருப்பினும் 2010 ஆம் ஆண்டுகளின் பின்னர் மன்/கௌரிஅம்பாள் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் சமய பாட ஆசிரியராக கடமையாற்றிய ஸ்ரீ.கோபிதரன் ஆசிரியரது வழிகாட்டுதலில் சிவனருள் இல்ல பணிப்பாளரினது ஒத்துழைப்புடனும் மஹோற்சவ தினத்திற்கு சில வாரங்களுக்கு முன்பு திருநாவுக்கரசர் பெருமான் வழியில் உழவார பணி செய்வது வழக்கம். ஆலயத்தின் அகப்புறச் சூழலிலுள்ள புல் பூண்டுகளை அகற்றுதல், குப்பைகளை அகற்றுதல், ஆலயத்தினுள்ள குத்து விளக்குகள் மற்றும் பாத்திரங்களை மினுக்குதல், கோவில் முழுவதும் கழுவி சுத்தம் செய்தல், விபூதி பிரசாதங்களை தயார் செய்தல் முதலிய இறை தொண்டுகளில் இல்ல பிள்ளைகள் ஆகிய நாம் சிவ சிந்தையுடன் ஈடுபட்டு வந்ததுள்ளோம்.

மகோற்சவ காலங்களில் அதிகாலையில் எழுந்து ஆலயத்தை கூட்டி சுத்தம் செய்தல், உட்புறம் மற்றும் வெளிப்புற பகுதிகளை சுத்தமாக்குதல், பகல் திருவிழா நாட்களில் காவுவதற்கு ஆள் இல்லாத வேளைகளில் எல்லாம் இல்ல மாணவர்கள் பாடசாலையின் அனுமதி பெற்று இல்லம் வந்து சீருடைகளை களைந்து வேட்டி சால்வைகளுடன் வந்து அப் பணியை முடித்து, மீண்டும் சீருடை அணிந்து பாடசாலை செல்வது வழக்கம். திருவிழா நேரத்தில் பூசைகளில் கலந்து கொள்வதுடன் அடியவர்கள் புடைசூழ எம்பெருமான் வீதி உலா வரும்போது எம்பெருமான் அடியவர்களையும் இணைத்துக் கொண்டு பஜனை பாடல்கள் பாடுதல், சாமி தூக்குதல், தீவெட்டி தூக்குதல் முதலிய தொண்டுகளையும் செய்துவருகின்றோம். மகோற்சவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கும் மகா சிவராத்திரி மடத்தின் பணியில் சபை வைக்கும். (அன்னதானம் வழங்கும்) பணியிலும் பங்களிப்பை வழங்கி வருகின்றோம். தேர் உற்சவம் அன்று ஆண்கள் இல்லத்தின் முகப்பில் தாகசாந்தி பந்தல் அமைத்து வெளி வீதி உலா வரும் எம்பெருமானுக்கு மடைப் பூசை செய்த பின்னர் பிரசாதங்களை வழங்கியும் அடியவர்களுக்கு குளிர்பானங்கங்கள் வழங்குவதும் வழக்கம். திருக்கேதீஸ்வர ஆலய மகோற்சவ காலத்தில் சிவனருள் இல்லத்தால் குறிப்பிடத்தக்க தொண்டுகள் ஆற்றப்படுகின்றுது.

**அம்மை அப்பன் அருட்பாமாலை வெளியீடு**



நமசிவாயம் ஐயாவின் வழிகாட்டுதலில் முன்னாள் சிவனருள் இல்ல பணிப்பாளர் வே.மாணிக்கவாசகர் ஜயா இணைப்பாளராகவும் இருந்து, கௌரியாம்பாள் உடனுறை கேதீச்சரப் பெருமான் மகிழும் அம்மை அப்பன் அருட்பாமாலைக்கு திருக்கேதீச்சர வரலாற்றுடன் தொடர்புடைய நிகழ்வுகளை தொகுத்து கவிஞர் வேலணையூர் சுரேஸ் பாடலாக்கத்தினையும், கோ.சத்தியன் இசையையும் வழங்க, வ.வைகஷ்ணவி அவர்கள் பாட, சப்தமி கலையகம் ஒலிப்பதிவினை செய்து வழங்க, ஈரடி வெண்பா வடிவில் அகர வரிசை ஒழுங்கில் பாடப்பட்ட இறுவட்டினை சிவனருள் இல்லம் தயாரித்து 13.02.2016 வெளியிட்டது. இதனை https://youtu.be/ZMVvrQBRxRQ என்ற YouTube தளத்தில் கேட்க முடியும்.

**4. நிழல் தரும் மரங்களை நடுதல்**

மா, தென்னை மரங்கள் சூழ்ந்து வண்டுகள் தேனை உண்டு மகிழ்ந்து ரீங்காரமிடும் பசும் சோலையாகும் காணப்பட்டது என திருஞானசம்மந்தர்மூர்த்தி நயனாரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் திருமுறையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்.

**"மூவரென இருரென முக்கண்ணுடை மூர்த்தி**
**மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரில்...." (சுந்தரர் தேவாரம்)**

**"வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்மஞ்ஞை**
**நடமிடும் மாதோட்டம்...." (சம்பந்தர் தேவாரம்)**

தற்போது முன்னர் போல கருங்கல் சிற்ப வேலைப்பாடுகள் நடந்து கம்பீரமான புதுப் பொலிவுடன் திருக்கேதீஸ்வர ஆலயம் காணப்படுகின்றது. ஆகவே நாயன்மாரகள் காலம் போன்று ஆலய வெளிப்புற சூழலும் பசும் சோலைகள் சூழ்ந்து காணப்பட வேண்டும், என்பது எம்பெருமான் அடியவர்களின் விருப்பம். இறையருளால் நடந்துவிட ஆலய திருப்பணி சபையுடன் இணைந்து எம் பெருமான் அடியவர்களும் இணைந்து மரங்களை நாட்டி, நீர் ஊற்றி, கால்நடைகள் கடித்திடா வண்ணம் பராமரித்து வளர்த்திட பங்களிப்பு நல்கிட வேண்டும். நாம் ஆலய மேற்குப் புறவெளி வீதியில் இருமருங்கிலும் நிழல் தரும் மரங்களை வளர்த்து வருவதுடன் ஆண்கள் இல்ல வெளிப் புறத்தில் நந்தியாவட்டை மரங்களையும் வளர்த்து இவ் மலர்களை ஆலய பூசைக்கு பூவாகவும், மாலையாகவும் வழங்கி வருகின்றோம்.

**5. மகா சிவராத்திரி கால தொண்டுகள்**

மகா சிவராத்திரி விரத நன்னாளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து பாலாவியின் கரை மேல் அமர்ந்த எம்பெருமானை வணங்கி பாலாவி புனித தீர்த்தத்தில் தீர்த்தமாடி தீர்த்த குடங்களை சுமந்து எம்பெருமானை நீராடி செல்வது வழக்கமாக உள்ளது. சிவராத்திரி விரத நாளுக்கு குறிப்பிட்ட தினங்களுக்கு முன்பு திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையுடன் இணைந்து பல சைவ அமைப்புக்களும், மன்/சித்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விநாயகர் தேசிய பாடசாலை, மன்/கௌரி அம்மாள் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, இன்னும் சில பாடசாலைகளும், சைவ அடியவர்களும் இணைந்து தொண்டுகள் செய்வது வழக்கம். இவர்களுடன் இணைந்து குறிப்பிடத்தக்க தொண்டுகளை சிவனருள் இல்லத்ததினரும் ஆற்றி வருகின்றோம். இவ்வகையில் சிரமதானப் பணிகளை செய்வதும், ஆலய அலங்கார வளைவு வைப்பதற்கு உதவுதல், நந்திக்கொடி கட்டுதல், நந்திக்கொடி வழங்குதல், வீபூதி பிரசாதத்தை தயார் செய்தல் முதலிய பணிகளை குறிப்பிட முடியும். சிவராத்திரி விரத நாளன்று அதிகாலையில் எழுந்து பாலாவி தீர்தமாடி தீர்த்தம் சுமந்து எம்பெருமானை நீராடிவிட்டு தமது வழமையான தொண்டுகளை நாம் செய்வது வழக்கம்.

**"பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்**
**செத்தார்ரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே" (சுந்தரர் தேவாரம்)**

என பாடி தமது பாவங்களை தீர்க்க என பாலாவி தீர்த்தத்தை தலையில் சுமந்து மேற்கு புற உள் வீதியில் அமைந்துள்ள சோழர்கால மகாலிங்கத்திற்கு நீராட்ட வரும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒழுங்குபடுத்துவதும், தீர்த்த குடங்களை மீண்டும் தீர்த்த குடம் வழங்கும் இடத்திற்கு எடுத்துச் சென்று வழங்குவதும், எம்பெருமானுக்கு அடியவர்கள் அர்ச்சனை செய்வதற்காக எடுத்து வரும் அர்ச்சனை கூடையை பெற்று, அதில் உள்ள தேங்காயை உடைத்து வைத்தும் கற்பூரம் ஊதுபத்தி முதலிய பொருட்களை எடுத்து வைத்துவிட்டு விபூதிப் பிரசாதத்தையும் அர்ச்சனை செய்த மலர்களையும் அர்ச்சனை கூடையில் போட்டு அவற்றை பக்தர்களுக்கு ஆலய குருக்கள்மார் வழங்க எடுத்து கொடுத்தல்.

மகா சிவராத்திரி தினமன்று மதியமும் இரவும் சிவனடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் மகா சிவராத்திரி மடத்தின பணியில் சபை வைக்கும் பணியிலும் பங்களிப்பை வழங்கி வருகின்றோம். வாகன போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டவர்களுடன் இணைந்து பங்களிப்பு வழங்குதல் மற்றும் வழமையாக ஆலய முன்றலில் சிவராத்திரி விழா கலை நிகழ்வுகள் ஆலய திருப்பணி சபையால் மாலை ஆரம்பித்து 4 ஆம் யாம பூசை வரை நடாத்தப்படும் இதன் போது சிவனருள் இல்ல பிள்ளைகள கலை நிகழ்வுகளையும், பஜனையும் ஆற்றுகை செய்து சிவ அடியவர் உள்ளத்தை சிவ சிந்தையால் மகிழ்விப்பார்கள்.

## 6. தூய வெண்ணீறு உருவாக்கம்

திருக்கேதீஸ்வர ஆலய சூழலில் உள்ள புற்களை மேய்ந்து மாடுகள் போடுகின்ற சாணத்தை எடுத்து அவற்றை வரட்டி தட்டி உரிய முறைப்படி தூய திருநீற்றை உருவாக்குகின்றோம். இவ்வாறு உருவாக்கம் பெற்ற திருநீற்றை முதன்முதலில் எம்பெருமான் பாதங்களில் வைத்து வழிபாடு செய்து அவ் விபூதி கொண்டு எம் பெருமானுக்கு அபிஷேகம் செய்தமையும் எம்பெருமான்அருளாகும். தற்காலத்தில் கலப்படம் மிகுந்த திருநீறு தான் அதிகம் புழக்கத்தில் உள்ளது. ஆனால் சிவனருள் இல்ல பிள்ளைகள் தூய திருநீற்றை உருவாக்கம் செய்து அவற்றைப் சைவ அன்பர்களுக்கு வழங்கும் சிவ பணியை ஆற்றி வருகின்றோம்.

## 7. கர்ப்ப கிரக மூல விக்கிரக படங்களை வெளியீடு செய்தமை

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இறைவன் திருக்கேதீஸ்வரநாதர், இறைவி கௌரி அம்பாள் இவ்விரு மூல விக்கிரக படங்களை படமெடுத்து அவற்றை ஒன்றாக்கி திருக்கேதீஸ்வர ஆலய மூல விக்கிரக படத்தை 2022 ஆம் ஆண்டு மகா சிவராத்திரி விரத விழாவில் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சைவ அன்பர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. சைவ உணவகம் அமைத்தமை

திருக்கேதீஸ்வர ஆலயத்தை வழிபட வருகின்ற பக்கர்கள் வழிபாடு செய்த பின்னர் ஆலயச் சூழலில் அவர்களுக்கு சைவ உணவு உண்பதற்கு ஏற்ற சைவ உணவகம் இல்லாத நிலை காணப்பட்டது. இதற்கு தீர்வாக வவுனியா மன்னார் பிரதான வீதியில் முள்ளிக்குளம் என்ற இடத்தில் திருக்கேதீஸ்வர ஆலயத்திலிருந்து 6மைல் தூரத்தில் "ருத்ரம் உயர்தர சைவ உணவகம்" என்ற நாமத்துடன் தற்போது இயங்கி சைவ அன்பர்களுக்கு தரமான சைவ உணவினை வழங்கி வருகின்றோம்.

## 9. கேது பகவான் ஆலயம்

மேரு மலையை மத்தாகவும், வாசுகி பாம்பை கயிறாகவும் கொண்டு அமுதம் பெற பாம்பின் தலைப்பகுதியை அசுரர்களும், வால் பாகத்தை தேவர்பளும் பற்றி பாற்கடலை கடைந்தனர். அப்போது ஆலகால விஷம் தோன்றியது. அடியவர்களை காக்க சிவபெருமான் விஷத்தை உண்டார். விஷம் அவரது கண்டத்துக்கு (கழுத்துக்கு) கீழே போகவிடாமல் உமாதேவியார் தடுத்தார். பின்னர் அமுதத்தை வழங்க விஷ்ணு, மோகினி அவதாரம் எடுத்தார். தேவர்களையும், அசுரர்களையும் தனித்தனியாக அமரும்படி மோகினி கூறினாள். அப்போது "ஸவர்பானு" என்ற அரக்கன் தேவர்கள் வரிசையில் அமர்ந்து அமுதத்தை உண்டான். அவனது சூழ்ச்சி பின்னர் தெரியவந்து கோபம் கொண்ட மோகினி வடிவில் இருந்த விஷ்ணு, சக்கரத்தால் வெட்ட அப்போது தலை வேறு, உடல் வேறானது. உடல் துண்டிக்கப்பட்ட ஸவர்பானு திருமாலை நோக்கி கடும் தவம் புரிந்தான். இதனால் மகிழ்ந்த விஷ்ணு அவன் தவத்தை ஏற்று, பாம்பின் உடல், பாம்பின் தலை கொண்ட இரண்டு உருவங்களாக ஸவர்பானுவை படைத்தார்.

பாம்பின் உடலும், மனிதனின் தலையும் கொண்டது ராகுவானது. பாம்பின் தலையும் மனித உடலும் கேதுவானது. இப்படிப்பட்ட ராகுவும், கேதுவும் 'சாயா கிரகங்கள்' என்றும் 'நிழற்கிரகங்கள்' என்றும் அழைக்கபடுகின்றனர். நம்மை நிழல் போல் தொடரும் துன்பங்கள் விலகிச்செல்ல ராகு, கேதுவை வழிபடுவது நன்று. கேது பகவாகன் பாலவியில் தீர்த்தமாடி, திருக்கேதீச்சர நாதரை வழிபட்டு சாபம் நீங்கப்பெற்றார். கேது வழிபட்டுப் பேறுபெற்றதைப் பெருமைப்படுத்தும் விதமாக 'கேதீசரர்' ஆனார். இத்தகு வரலாறு உடைய கேது பகவானுக்கு ருத்திரம் உணவக வளாகத்தில் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. தெற்கு புறம் நோக்கியவாறு கேது பகவானின் கீழ் பாகம் பாம்பு உருவிலும், மேற் பாகம் மனித உருவில் பாம்பு தலையுடன் அமைந்து, லிங்கத்திற்கு நித்தம் நீராட்டும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளதுடன் அருகில் கிழக்கு புறம் நோக்கியவாறு அம்பாள் விக்கிரகம் லிங்கத்ததை பார்த்தவாறும் அமைக்கப்பட்டுள்ளது.

## 10. மார்கழி திருவெம்பாவும் திருப்பள்ளியெழுச்சியும்.

மாணிக்கவாசகர் பெருமான் திருப்பெருந்துறையில் இறைவனை துயில் எழுப்புவதற்காக பாடிய திருப்பள்ளியெழுச்சியை, மார்கழி மாத திருவெம்பா காலத்தில் திருக்கேதீஸ்வர கிராம சிறுவர்கள், இளைஞர்கள், சிவனருள் இல்ல பிள்ளைகள் ஆகிய நாம் எல்லோரும் இணைந்து அதிகாலையில் திருக்கேதீஸ்வர, சிவபுர கிராம வீதிகளிலும்

> **"போற்றி! என்வாழ் முதல் ஆகிய பொருளே! புலர்ந்தது**
> **பூங்கழற் கிணைதுணை மலர் கொண்டு...."**

என்ற திருப்பள்ளியெழுச்சி பாடல்களை பாடியும் சிவ அடியவர்களை துயில் எழுப்பியும் திருக்கேதீச்சர ஆலயத்தில் எம் பெருமானையும் துயில் எழுவும் பாடுகின்றோம். அதிகாலைப் பொழுதில் இருள் நீங்க ஒளி எழுவதுபோல, இப் பாடல்களை பாட ஆன்மாக்களுடைய திரோதானமலம் அகன்று ஞானவொளி வெளிப்படும் முறையை உணரலாம். மேலும் நம்முள் உறங்கும் இறைவனை துயில் எழுப்புமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. திருக்கேதீச்சர வரலாற்றை ஓவியமாக வரைந்தமை.**

திருக்கேதீச்சர வரலாற்றுடன் தொடர்புடைய புராண, இதிகாச, வரலாற்று நிகழ்வுகளை இலக்கிய சான்றுகள், வரலாற்று ஆய்வுகள், ஐதீக கதைகள் துணையுடன் "திருக்கேதீச்சர ஒரு தேன் பொந்து" எனும் பெயரில் சிவனருள் இல்லம் தயாரித்தது. இதன் தயாரிப்பாளராகவும் பின்னனி குரல் வழங்குபவராகவும் எமது இல்ல நிறுவுனர் நமசிவாயம் ஐயாவும், திரு.து.பிரசாந் (சித்திர பாட ஆசிரியர், மன்னார்), திரு.S.பத்மநாதன் (யாழ்பாணம்) இருவரும் சித்திர வடிவமைப்பையும், லது டிஜிற்றல் (இணுவில்) படப்பிடிப்பையும், சப்தமி (யாழ்பாணம்) ஒலி வடிவத்தையும் வழங்க இவற்றுக்கெல்லாம் எமது இல்ல பணிப்பாளர் திரு. செ.செல்வரஞ்சன் ஐயா இணைப்பாளராகவும் பணி செய்து இவ் இறை பணியை நிறைவு செய்தனர். இதனை முதன்முதலாக நமசிவாயம் ஐயாவால் லண்டன் சிவன் கோயிலில் சைவ அன்பர்கள் முன்னிலையில் தமிழ், ஆங்கில மொழி விளக்கத்துடன் சமர்பணம் செய்யப்பட்டது. இதனை இளம் தலைமுறையினர் முதல் யாவரும் இலகுவாக பார்க்க கூடிய வகையில் https://youtu.be/igU6ZLQz41o என்ற YouTube தளத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**12. சிவபுர வீட்டுத் திட்டம்**

சிவனருள் இல்லத்தில் இருந்து கல்வி கற்று பெற்றோர்களை இழந்த திருமண வயதை அடைந்து இல்லபிள்ளைகளுக்கு திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு அருகில் உள்ள சிவபுரம் எனும் கிராமத்தில் வீட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இல்வாழ்க்கை வாழும் இல்ல பிள்ளைகள் இங்கு தங்கி குடும்பமாக வாழ்வதுடன் எம்பெருமானுக்கு நாள்தோறும் தொண்டு செய்ய வேண்டும் என்பதும் இவ் வீட்டுத்திட்ட உருவாக்கத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். இங்கு ஓர் சிவ பீடமும் பிள்ளைகளின் வழிபாட்டுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

**12. நாட்டிய நாடக சமர்ப்பணம்.**

ஆலய வரலாற்றுடன் தொடர்புடைய விடயங்களை நாட்டிய நாடகமாக எம்பெருமனுக்கு சமர்ப்பணம் செய்ய வேண்டும் என்ற சிவசிந்தை நமசிவாயம் ஐயாவிற்கு எழுந்தது, ஐயா இதற்கான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் வழங்க, சிவன் அருள் இல்ல பணிப்பாளர் திரு.செல்வரஞ்சன் ஜயா இவ் அரும் பணிக்கு இணைப்பாளராக செயற்பட்டு, திரு. தமிழ்மணி அளகங்கன் நாட்டிய நாடகத்தை உருவாக்கி தந்துதவ, நெறியாழ்கை, நடன அமைப்பு, நட்டுவாங்கம் என்பனவற்றை நிருத்தியவாணி திருமதி.சூரியாழினி வீரசிங்கம் அவர்களும் வழங்க சிவனருள் இல்லம் மற்றும் வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக இல்லமுமாக 90 மேற்பட்ட பிள்ளைகளின் பங்குபற்றுதலுடன் **"திருக்கேதீச்சரம் எனும் தேன்பொந்து"** எனும் பெயருடன் சிவனருள் இல்லத்தால் தயாரிக்கபட்டு கௌரியம்பாள் உடனுறை திருக்கேதீச்சர பெருமானின் ஆலயத்தில் 05.07.2022 அன்று சமர்ப்பணம் செய்யப்பட உள்ளது.

நிறைவாக மேற்குறிப்பிட்ட திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிகளில் எல்லாம் வல்ல கௌரியம்பாள் உடனுறை திருக்கேதீச்சர பெருமானின் அருளால் சிவன் அருள் இல்லம் ஈடுபட்டதன் ஊடாக திருக்கேதீச்சர பெருமானின் அருளை பெற்று சிவன் அருள் இல்லம் வளர்ந்து வந்துள்ளது தொடர்தும் இவ்வாறான சிவ தொண்டுகளை திருக்கேதீச்சர பெருமானின் அருளால் சிவன் அருள் இல்லம் குடும்ப உறவுகள் ஆற்றுவோம்.

"....அவனருளாலே அவன்தாழ் வணங்கி...."

**பொன்னம்பலம் கோகிலன்**
சிவன் அருள் இல்ல மாணவன்.
இந்து நாகரிகம்
நான்காம் வருடம்
கிழக்கு பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் கண்ட சிகிரியா

சிவனருள் இல்லப்பணிப்பாளர் திரு.செ.செல்வரஞ்சன் தலைமையில் 15.03.2022 அதிகாலை மிக ஆவலுடன் மகிழ்வுடனும் சக பிள்ளைகள் அறுபது பேருடன் பேரூந்தில் சிகிரியாவை நோக்கி திருக்கேதீச்சரம் சிவனருள் இல்லத்திலிருந்து புறப்பட்டோம். மூன்று மணித்தியாலயங்களின் பின்னர் வரலாற்றுச் சிறப்பு மிக்க சிகிரியாவின் அடிவாரத்தை சென்றடைந்தோம்.

பணிப்பாளரின் அறிவுரைகளில் சிகிரியாவின் வரலாற்றினையும் அறிந்து கொண்டு அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டு "சிகிரியா" எனும் குன்றை நோக்கி ஏறத் தொடங்கினோம். ஒரே வியப்பாக இருந்தது. இந்த குன்றைப் பயன்படுத்தி எப்படி கோட்டையை மேலே கட்டினான். எதிரிகள் நெருங்க முடியாத பாதுகாப்பை எப்படி இயற்கை அரண் கொண்டு அமைத்தான் என்று எண்ணியவாறு படிகளில் படிப்படியாக ஏறத்தொடங்கினோம்.

இலங்கையின் இணையற்ற கலை பாரம்பரியத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது சிகிரியா. இது மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள நகரத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது. 1144 அடி உயரமான இக்குன்றினுள் அழகிய வேலைப்பாடுகளுடன் சித்திரங்கள் பல உள்ளன. இவை 6ம் நூற்றாண்டில் சேர்வையாகும். இக் கோட்டையை முதலாம் காசியப்ப மன்னன் (கி.பி477-495) அமைத்தான்.

இக் கோட்டையை சுற்றி பல அகழிகளும் கட்டப்பட்டுள்ளன. இக் குகையினுள் சுவரோயிங்கள் இயற்கை வர்ணங்கள் கொண்டு வரையப்பட்ட பல சித்திரங்கள் காணப்படுகின்றன. இவைகளில் பல இன்னும் அழியாமல் அழகாகக் காட்சி தருகின்றது. இந்த ஓவியங்களில் காணப்படும் பெண்களை சிலர் தேவதைகள் எனவும் சிலர் காசியப்பனின் மனைவிகள் என்றும் கூறினர். இக் கோட்டையை சுற்றி ரசனை செய்வதற்காக மக்கள் பலர் தனித் தனியாகவும் கூட்டம் கூட்டமாக சென்று வந்தனர். அதன் பின் நாங்களும் சுற்றி வந்து இறுதியாக சிகிரியா அருங்காட்சியத்திற்கு சென்றோம். அங்கு அனுமதி சீட்டினை காட்டிய வண்ணம் உட்ச் சென்று அக்காலத்து கட்டடங்களின் சிதைவுகள், அக்காலத்து பெண்கள் அணிந்த மாலை, மணிகள், தோடுகள் என்பனவும், கோட்டையை அமைப்பதற்கு பயன்படுத்திய உபகரணங்கள், மண்பாண்டங்கள், கோட்டையின் அமைப்பு திட்டம் பற்றிய வரைபு, கண்டெடுக்கப்பட்ட கற்கள், கல் ஆசனம், இரும்புருக்கப்பட்ட சூலை என்பனவும், மற்றும் இப்பன் கட்டுவ அஸ்தி மயானத்தின் மாதிரி மற்றும் போதி சத்துவ சிலைகள் தலைகள் இல்லாமல் காணப்பட்டன. இதன் மூலம் சிகிரியாவின் அருமைகளை கண்டு மனப்பூர்வத்துடன் வெளியேறினோம்.

அடுத்து குகை ஓவியங்களுக்கு பிரசித்திப் பெற்ற தம்புள்ளை குகை பொற்க்கோவில் இலங்கையின் மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் அமைந்து உள்ளது கொழும்புக்கு கிழக்கே 148Km தூரத்தில் கண்டிக்கு வடக்கே 72Km தூரத்திலும் அமைந்துள்ள பழையருமையான குகைக் கோவிலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றிலுமுள்ள சமநிலத்திலிருந்து சுமார் 100m உயரத்திற்கு எழும் மலை மீது இக்குகைத் தொகுதி அமையப் பெற்றுள்ளது.

இதுவரை 80ற்கு மேற்பட்ட குகைகள் இப்பகுதியில் கண்டறியப்பட்டுள்ளன. இதில் 09 குகைகள் மிகவும் முக்கியமானவைகளாக கொள்ளப்படுகிறது. இங்கு புத்தப் பெருமானின் 153 சிலைகளும் அரசர்களின் சிலைகளும் அங்கு காணப்பட்டன. இந்துக் கடவுள்களான விஷ்ணு, பிள்ளையார் சிலைகளும் காணப்பட்டன. சுமார் 2100 சதுர மீற்றர் பரப்புள்ள சுவர் ஓவியங்களை கொண்டுள்ள இக்குகை கோவிலில் "மாரா பேபிள் சலனம்" மற்றும் புத்தரின் முதல் சங்கத்தின் ஓவியங்களும் அங்கு காணப்பட்டன.

சிறப்பு மிகுந்த தம்புள்ளை பொற்கோவிலை யுனெஸ்கோ நிறுவனம் 1991ம் ஆண்டு உலக பாரம்பரிய தளங்களில் ஒன்றாக அறிவித்தது இதன் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். இவற்றை கண்டு களித்த பின்னர் மதிய உணவினை அருந்தி விட்டு அங்கிருந்து நேராக மிகிந்தலைக்கு எங்களுடைய பணிப்பாளர் அழைத்துச் சென்றார். சரியாக மாலை 6.30 மாலை மணியளவில் மிகிந்தலைக்கு வந்து இறங்கினோம். அங்கிருந்து விகாரையின் உச்சகட்டத்தை அடைவதற்காக ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலரும் நடந்துச் சென்றோம். அவ் விகாரையில் மூன்று மலைக்குன்றிலும் ஒவ்வொரு சிறப்பு வாய்ந்த புத்த பெருமானின் சிலை காணப்பட்டது.

அக் குன்றானது இலங்கையில் உள்ள எச்சக் குன்றுகளில் ஒன்றாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தொடர்ந்து ஏற்படும் இயற்கை அனர்த்தங்களினால் மண் உள்ளீர்க்கப்பட்டு இத்தகைய எச்சக் குன்றுகள் உருவாகின. மகிந்த தேரரின் வருகையின் பின்னர் எச்சக்குன்றுகள் புண்ணிய இடமாக மாற்றம் பெற்றன.

இதனால் வரலாற்றுச் சிறப்பு மிக்க நினைவு சின்னங்கள், புதைபொருட்கள் என்பன அங்கு காணப்பட்டன. இதன் மூலம் நாங்கள கற்பனையில் எண்ணிக் கொண்டிருந்த விடயங்களை நேரில் ரசனை செய்ததுடன், அந்த எச்சக்குன்றின் உண்மைகளும் மற்றும் வரலாற்றின் சிறப்பினையும் அறிந்து கொண்டோம் . இந்த மனநிறைவுடனும், மகிழ்வுடனும் பணிப்பாளர் மற்றும் பணியாளர்களுடன் பாதுகாப்புடன் பேருந்தில் ஏறி இல்லத்தை இரவு வந்து அடைந்தோம்.

ஒரு நாள் களப்பயணம் பயனுள்ளதாக அமைந்தது.

நன்றி

**செல்வி S.சரஸ்வதி**
தரம் 11
சிவனருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூ பூக்கும் உதடுகள்

காம்பில் விரல் வைத்து
கழுத்தை திருகையிலே
கேட்கின்றது என்செவியில்
பூக்களின் அழகுரலும்

சின்ன எறும்பு ஒன்றை
கொன்று மிதிக்காமல்
மண்ணில் நடக்கின்றது
என் பாதம் கண் திறந்து

சிறு துன்பம் பிறக்கும்
செய்தறியா என்கரத்தில்
இறைவன் தன் முகவரியை
எழுதி வைத்த கைரேகை

குத்திக் கிழிக்கின்ற
கூர் முள் ஒன்றில்லை
என் இதய ரோஜாவில்
எல்லாமே தேன் துளிகள்

பகை யென்றும் நட்பென்றும்
பாராட்டும் உலகத்தில்
எல்லோருக்கும் என்னுதடு
எப்போதும் பூ பூக்கும்

நதியாய் நான் ஓடும் வரை
எல்லாப்பக்கத்தையும்
நனைத்து கொண்டே இருக்க வேண்டும்
கடலை சென்றடைவதற்குள்

செல்வி.ச.இயலரசி
தரம் - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையவழிக் கல்வியின் சாதகங்கள் மற்றும் பாதகங்கள்

இணையவழிக் கல்வி (online class) எனப்படும் புதிய Digital கல்வி முறை தற்போது Covid 19 ஊரடங்கு காரணமாக தற்போது பின்பற்றப்பட்டு வருகிறது. இதனால் ஏற்படும் சாதகங்கள் மற்றும் பாதகங்கள் என்ன? உளவியல் ரீதியான சிக்கல்கள் என்ன? அதை எவ்வாறு நாம் எதிர்கொள்வது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

இக் காலத்தில் மாணவர்கள் பள்ளிக்குச் சென்று மட்டுமே படித்துக் கொண்டிருந்த மாணவர்களுக்கு இது எப்படி இருக்கிறது. அவர்களுக்குப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு எப்படி இருக்கிறது? மற்றும் இதைப் பெற்றோர்கள் எப்படிப் பார்க்கின்றார்கள். என்ற பல்வேறு மாறுபட்ட கண்ணோட்டங்களில் இதை நாம் அணுக வேண்டியுள்ளது.

நமக்கு இந்த online வகுப்புகள் புதுமையானதாகவும் வித்தியாசமானதாகவும் இருப்பதனால் பல சிக்கல்கள் ஏற்படுகிறது. நாம் முதலில் நன்மைகள் என்று எடுத்துக் கொண்டால் யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் இந்த இணையவழிக் கல்வியைப் பயில முடியும் உதாரணமாக வெளிநாடுகளுக்குச் சென்று படிக்க வேண்டும் என்ற நிலை மாறி தற்போது அவரவர் இருக்கும் இடத்திலேயே இணையவழிக் கல்வி மற்றும் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.

மற்றும் பள்ளிப் பாடங்களுடன் இணைந்து பலருக்கும் விருப்பமான பல்வேறு துறைகளைப் பற்றிக் கற்றுக் கொள்வதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்திருக்கிறது. இவ் இணையவழிக் கல்விகள் ஒரு சில செயன்முறைகளினை எளிமையாக்குகின்றன. அதாவது ஒரு மாணவர் பள்ளிக்குச் சென்று படிக்க வேண்டும். என்றால் அதற்காகச் செலவிடும் நேரம் பொருட்செலவை விட இணையவழிக் கல்விக்காக செலவிடும் நேரம் பொருட்செலவுகள் குறைவாகவே உள்ளது பள்ளிக்குச் சென்று நான் கல்வி கற்க வேண்டும் என்ற கட்டாயத்தில் இருந்து விடுபட்டு பல வாய்ப்புக்களினை இணையவழிக் கல்வி அமைத்துத் தருகிறது. இதனால் தற்போதுள்ள காலகட்டத்தில் மாணவர்கள் கல்வி தடைப்படாமல் இருப்பதற்கு இந்த இணையவழிக் கல்வி முறை வழிவகை செய்கிறது.

சில மாணவர்களுக்கு பள்ளி செல்வது என்பது பயமாகவும் தயக்கமாகவும் இருப்பதனால் உளவியல் பாதிப்புக்கள் இருப்பதைக் காணலாம் அவர்களுக்கு இதுபோன்ற கல்வி முறை சௌகரியமாக இருக்கக்கூடும். பள்ளிக்குச் சென்று கல்வி கற்கும் போதுதான் மாணவர்களுக்கு சுய ஒழுக்கம் நேர முகாமைத்தும் சமூகத்திறன் போன்றவை கிடைக்கும் என்பது ஆசிரியர் மற்றும் பெற்றோர்கள் வாதமாக உள்ளது இந்தக் கருத்தையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது முக்கியமான ஒன்றாகும். ஏனெனில் பள்ளிக்குச் சென்று கல்வி கற்கும் போது உடன் படிக்கும் மாணவர்களுடன் நட்புறவைப் பேணி சமூகத்திறனை வளர்க்க உதவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையத்தளம் அதிகநேரம் பயன்படுத்துவதால் சில சமயம் சிறுவர்கள் பதின்ம பருவ மாணவர்கள் தவறான வழிகளில் பயன்படுத்துவதற்கும் இணையத்தளத்திற்கு அடிமையாகுவதற்கும் இது ஒரு காரணமாக உள்ளது. எனவே இதைக் கண்காணிக்கும் பொறுப்பு பெற்றோரிடம் தான் உள்ளது மாணவர்கள் ஆசிரியர்களுக்கும் இந்த online வகுப்புக்கான முறையான திட்டமிடல் அட்டவணைகள் போன்றவற்றில் குறைபாடுகள் காணப்படுகிறது மற்றும் சிறுவர்களுக்கும் சில ஆசிரியர் மற்றும் பெற்றோர்களுக்கும் இந்த இணையவழி தொழினுட்பத்தை பயன்படுத்துவதில் அனுபவமின்மையும் சில சிக்கல்களும் உள்ளன இது அனைவருக்கும் சில சமயங்களில் மன உளைச்சலை ஏற்படுத்தலாம்.

இந்த Digital கல்வி முறை என்பது உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் சில பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. அதாவது அதிக நேரம் கணினி மற்றும் தொலைபேசி திரைகளை பார்த்துக் கொண்டே இருப்பதனால் கண் குறைபாடுகளும், ஒரே இடத்தில் அதிக நேரம் அமர்ந்திருப்பதனால் குறைந்த உடல் செயல்பாடுகள் காணப்படுகிறது.

அதேபோல் உளவியல் ரீதியாக அதிக நேரம் கணினி மற்றும் கைபேசி பயன்படுத்துவதனால் குழந்தைகளின் மூளை வளர்ச்சித் திறன் பாதிக்கும் அபாயம் உள்ளது இதன் மூலம் அவர்களுக்கு கவனச்சிதறல் தூக்கமின்மை படைப்பாற்றல்குறைவு கற்பனைத்திறன் குறைவு மற்றும் பதற்றம் பயம் மன அழுத்தம் போன்ற பாதிப்புக்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

இதை எவ்வாறு திறன்பட எதிர் கொள்வது? கல்வி என்பது ஒரு மனிதனின் அறிவுத்திறனை வளர்க்க உதவுவது இதை நாம் பள்ளி பாடப்புத்தகங்கள் மூலமாக மட்டுமே பெற்று விடமுடியாது எனவே நாம் அறிவை விரிவு செய்வதற்கு பல முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இதற்காகநாம் புத்தகங்கள் வாசிப்பது என்பதைக் கடைப்பிடிக்க வேண்டும் அதாவது பள்ளிப் புத்தகங்களினைத் தவிர வேறு புத்தகங்கள் படிப்பதன் மூலமும் தானாக கற்றுக் கொள்வதன் மூலமாகவும் நம் அறிவினை வளர்த்துக் கொள்ள முடியும்.

மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் எளிமையாகப் புரியும் வகையிலும் இந்த இணையவழிக் கல்வி அமைய வேண்டும் இந்த online வகுப்புக்களை Video வடிவில் மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் புரியாதவற்றைத் திரும்பப் பார்த்து புரிந்து கொள்ளவும் கிடைக்கும் நேரத்தில் பார்ப்பதற்கும் உதவும்.

இணையவழிக் கல்வி மூலம் ஏற்படும் பாதிப்புக்களையும் நன்மைகளாக மாற்றி பெறுவோம்.

**செல்வன் இ.நிதர்ஷன்**
A/L (2022)
சிவனருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை

கண்டிப்புக்கும் அன்பிற்கும் ஒரே
வார்த்தை அப்பா
வாழ்வில் நான் ஒரு படி
சறுக்கினால் பத்துபடி உயர்த்திடுவார்

நான்பெற்ற வெற்றிகளை தான்
பெற்ற வெற்றியால் எண்ணி
உளமார மகிழ்ந்து கண்ணீர் மல்க
பெருமை கொள்பவர் – என் அப்பா

சின்னதாய் நான் கொஞ்சமாய் நான்
சிணுங்கினாலும் துடித்து என்னை தோளோடு
சாய்த்துக் கொள்பவர் இறைவா இன்னுமொரு
ஜென்மம் என்தந்தைக்கு மகளாகப் பிறக்க வேண்டும்

ஆயிரம் விண் மீன்கள் ஆகாயத்தில்
பிரகாசித்தாலும் இரவுக்கு அழகு நிலவும் தான்
அதே போலத்தான் ஆயிரம் உறவுகள் மண்ணில்
இருந்தாலும் வாழ்க்கைக்கு அழகு உண்மையான
தந்தைதான்

**N.Sumathy**
O/L 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

- அம்மா நீ அற்புதம்
- அம்மா சொன்ன அற்புதமான பொய்களில் ஒன்று கடைசி உருண்டையில் மட்டும் தான் எல்லா சத்துக்களும் இருக்கும் இதை மட்டும் வாங்கிக் கொள் கண்ணா!
- நாம் பெற்ற முதல் இரத்த தானம் எது தெரியுமா? நம் அம்மாவின் பால் தான்.
- தன் அம்மா தனக்கு என்ன வெல்லாம் செய்தால் என்பதனை மனிதன் கடைசி வரை உணர்வதில்லை.
- அவன் அதை உணரும் போது உயிரோடு இருப்பது இல்லை
- அம்மா என் அருகில் இருந்தால் கற்பாறை கூட பஞ்சு மெத்தை தான்
- சொல்ல வந்ததை சொல்ல முடியாமல் தவிர்த்து நின்று பார் தாய் மொழியின் அருமை புரியும்
- என் முகம் பார்க்கும் முன்பே என் குரல் கேட்டும் முன்பே என் குணம் அறிய முன்பே என் நேசித்த மனித இதயம் என் அம்மா மட்டும் தான்
- ஒரு அம்மாவின் இறுதி ஆசை என்ன தெரியுமா என் கல்லரையில் – உன் பெயரை எழுதிவை உன்னை நினைப்பதற்கு அல்ல அங்கு உன்ன சுமப்பதற்கு
- என்னை நடக்க வைத்து பார்க்கவேண்டும் என்ற ஆசையை விட நான் விழுந்து விடக்கூடாது என்ற கவலை தான் இருந்தது என் அம்மாவின் கவனம்.
- உலகில் மிகவும் அழகான வார்த்தை என்ன தெரியுமா எனக்கு அம்மா உங்களுக்கு?.......

செல்வி N.சுபானி
A/L (2020)
சிவனருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவனருளின் கல்விப் பணி

ஒருவரின் அச்சத்தைப் போக்கி மடமைகளை அழிக்கும் ஒரே ஆயுதம் கல்வி மட்டுமே, அதுவே ஒருவரின் அறிவுக்கண்ணைத் திறக்கும் திறவுகோலாகவும் அமைந்து அவரை அறிவாளியாக்குகின்றது. கல்வியே ஒரு நாட்டின் வளத்தை தீர்மானிக்கின்ற பிரதான சக்தியாகவும் உள்ளது.

இதனையே திருவள்ளுவர்

**"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்று பிற"** என அழகாக சொல்லியுள்ளார். அதாவது உலகிலுள்ள செல்வங்களில் மனிதனாக பிறந்தவர்களுக்கு என்றும் அழியாத சிறந்த செல்வமாகிய கல்விச் செல்வமே அறிவொளியை உருவாக்க கூடியது. ஏனைய அனைத்து செல்வங்களும் அறியாமையை உண்டாக்க கூடியதும் நிலையற்று அழிந்து போகக்கூடியதுமான செல்வங்களாகும் என கூறுகின்றார்.

இதற்கமைய பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வீழ்ந்து கிடக்கும் எமது தமிழ் சமுகத்திற்கு கல்வியின் மகத்துவத்தினை உணர்த்தி அறிவார்ந்த சமுதாயத்தினை உருவாக்க கல்வி எனும் திறவுகோலால் அறிவுக்கண்ணைத் திறக்க அரும்பாடுபட்டு உழைக்கும் உன்னத அறப்பணியினை 17 வருடங்களுக்கு மேலாக **"சிவன் அருள்"** ஆற்றிவருகின்றது.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு கல்வியின் முக்கியத்துவத்தினையும் தேவையையும் கருத்திற்கொண்டு சிவனருள் அமைப்பானது நாட்டின் பல பிரதேசங்களில் உள்ள பின்தங்கிய கிராம மக்களின் நலன் கருதி இலவசக் கல்வி நிலையங்களை உருவாக்கி அதன் மூலம் கற்ற சமுதாயத்தை உருவாக்க உழைத்து வருகின்றது.



அமரர் கனகரத்தினம் துரைசிங்கம் ஞாபகார்த்த சிவனருள் இலவச கல்வி நிலையம் ஒலுமடு, நெடுங்கேணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக இலங்கையில் அதிகஸ்ர பிரதேசங்களாக உள்ள வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் போன்ற பிரதேசங்களை மையப்படுத்தி கல்வியின் தேவை எங்கு அவசியமாக உள்ளதோ அங்கு எல்லாம் இலவசக் கல்வி நிலையங்களை அமைத்து அச்சமூகத்தின் திறமைகளை வெளிக்கொணர்ந்து மதிப்பு மிக்க சமுதாயத்தை உருவாக்க சிவனருள் அமைப்பானது பெரும் பணியாற்றிவருகின்றது.

சிவனருள் அமைப்பானது உருவாக்கப்பட்டு இற்றைக்கு 17 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில்,

1. அமரர் கனகரத்தினம் துரைசிங்கம் ஞாபகார்த்த சிவனருள் இலவசக் கல்வி நிலையம்- ஒலுமடு, நெடுங்கேணி
2. விஜயகுமார் ஞாபகார்த்த சிவனருள் இலவசக் கல்வி நிலையம்- கற்குளம், வவுனியா
3. சிவனருள் இளந்தளிர் இலவசக் கல்வி நிலையம்- நீனாக்கேணி, மூதூர்
4. சிவனருள் ஹரிதாஸ் இலவசக் கல்வி நிலையம்- காஞ்சிரங்குடா, மட்டக்களப்பு
5. சிவனருள் இலவசக் கனிணி பயிற்சி நிலையம்- அக்கரைப்பற்று, அம்பாறை

ஆகிய இடங்களில் பின்தங்கிய கிராமங்களை இனங்கண்டு அந்த மக்களினதும் இளம் தலைமுறையினரதும் கல்வித் தாகத்தை தீர்க்க இலவசக் கல்வி நிலையங்களை அமைத்து சிறந்த சேவையினை முன்னெடுத்து வருகின்றது.



இவ்வருடம் பெரும் அறப் பணியில் மிக சவாலான காலத்திலும் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்து அறப்பணியினை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல சிவனருள் அமைப்புடன் இணைந்து மிகத் திறமையான அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களும், நிர்வாகிகளும் இக்கல்வி நிலையங்களின் மகத்தான செயற்பாடுகளை நெறிப்படுத்தி, சிறந்த கல்வியைப் போதித்து கற்ற இளம் சமுதாயம் ஒன்றை உருவாக்க அரும்பாடுபட்டுவருகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக பின்தங்கிய கிராமங்களில் உள்ள சிவனருள் அமைப்பின் இவ் இலவச கல்வி நிலையங்களில் 1000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இணைந்து தமது கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். இவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு தற்போது குறித்த நிலையங்களில் கனிணி வகுப்புக்களும் (NVQ Level- III, NVQ Level- IV) ஆரம்பிக்கப்பட்டு நகர்ப்புறங்களில் உள்ள மாணவர்களுக்கு இணையான கல்வி முறை மற்றும் கனிணித் தொழிநுட்ப அறிவினையும் இப்பின்தங்கிய கிராம மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் வரப்பிரசாதம் சிவனருள் அமைப்பினால் கிடைக்கப்பெற்றுள்ளமை மிகப் சிறந்த அறப்பணியாகும்.



சிவனருள் ஹரிதாஸ் இலவச கல்வி நிலையம்- காஞ்சிரங்குடா, மட்டக்களப்பு

அதேவேளை, பின்தங்கிய கிராம மக்களின் நலன் மற்றும் கலாசாரத்தை பேணி பாதுகாக்கும் பொருட்டும் இளம் சமுதாயத்தினரிடையே சமய மற்றும் ஆன்மீக பண்புகளை சிதைவடையாது பாதுகாப்பதற்காகவும் 50 இற்கும் மேற்பட்ட கிராமங்களில் அறநெறிப் பாடசாலைகளை பொறுப்பேற்று அறநெறி வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றது.

அத்துடன் ஆரம்ப கல்வியை சிறப்பாக வழங்க வேண்டும் என்பதில் கூடிய கவனம் கொண்டுள்ள இவ்வமைப்பானது முன்பள்ளிகள் பலவற்றையும் பொறுப்பேற்று அந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கல்வி மேம்பாட்டு செயலமர்வுகளை மேற்கொள்வதுடன் முன்பள்ளி மாணவர்களின் போசாக்கு மட்டத்தினை அதிகரிக்கும் பொருட்டு சத்துணவும் வழங்கி வருகின்றமை குறிப்பிட்டு கூறக்கூடியதுமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**அன்னயாவினும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்**

என்ற கல்வியின் சிறப்பினை உணர்ந்த பாரதியாரின் கூற்றுக்கு அமைய அன்னதான மடங்கள் ஆயிரம் அமைத்தல் மற்றும் ஆலயங்கள் பல அமைத்தலை விட அக்கிராமங்களில் வாழும் ஏழை மக்களுக்கு எழுத்து அறிவிப்பதே கோடிப் புண்ணியமாகும் என்னும் கூற்றுக்கு அமைய பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்களின் கல்விப் பசிக்கு இலவசக் கல்வி நிலையங்கள் மூலம் சிறந்த கல்வியை சிவனருள் அமைப்பு ஊட்டிவருகின்றது.



சிவனருள் இலவசக் கனினி பயிற்சி நிலையம்- அக்கரைப்பற்று, அம்பாறை

அத்துடன் இப்பின்தங்கிய கிராம மக்களின் பசியைப் போக்கும் அன்னதான நிகழ்வுகளையும், சமய ஆன்மீக சிந்தனைகளை பாதுகாக்கும் விதத்தில் சிவ ஆலயங்களையும், இங்குள்ள ஏழை மக்களின் எழுத்தறிவினை மேம்படுத்தும் விதத்தில் கல்விச் செயற்பாடுகளையும், வாழ்வாதார நிலையில் பின்தங்கி வாழும் மக்களின் தேவைகளை உணர்ந்து அவர்களின் வாழ்வாதாரத்தினை ஊக்குவிக்கும் விதமாக சுயதொழில் வேலை வாய்ப்புக்கள் மற்றும் சுய தொழில் உற்பத்தி ஊக்குவிப்புக்களையும் சிவனருள் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும்.



சிவனருள் இளந்தளிர் கல்வி நிலையம்- நீலாக்கேணி, மூதூர், திருகோணமலை

கல்வியின் மூலம் ஒவ்வொரு தனி மனிதனும் பண்படுத்தப்படுகின்ற போது சமூகமும் சிறந்து விளங்கும் என்பதை உணர்ந்து சிவனருள் அமைப்பானது குறித்த பின்தங்கிய சமூகத்தினை மேன்மையடையச் செய்ய அறிவு, திறன், சிந்தனை, செயல் மற்றும் நல்ல மனப்பாங்கு போன்றவற்றை வழங்கி பண்பாடு, கலாசாரம் மற்றும் நடத்தை போன்றவற்றில் ஒரு முழுமையான ஆற்றலுடைய சமுதாயத்தை உருவாக்கும் அறப்பணியினை மேற்கொண்டு வருகின்றது. இவ் அறப்பணியில் தொடர்ந்து சிவனருள் முன்னின்று உழைத்து வருவதற்கு சிவபெருமான் என்றும் அருள் வழங்க வேண்டும் என்பது அனைத்து நல்லுள்ளங்களினதும் விருப்பமும் வேண்டதலுமாக உள்ளது.

**திரு.கு.பவளசிங்கம் வாணன்**
சிவனருள் கல்வி நிலையம்,
நிலாக்கேணி (மூதூர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

01) 2020ம் ஆண்டு நியூசிலாந்தின் பிரதமர் யார்
ஜெசிந்தா

02) 2020ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற திணைக்களம்
WHO திணைக்களம்

03) 2020ம் ஆண்டு ஒருநாள் பிரதமராக பதவி வகித்த 16 வயதுச் சிறுமி எந் நாட்டைச் சேர்ந்தவர்
பின்லாந்து

04) 2020ம் ஆண்டு ஒலிம்பிக் நடைபெற்ற நாடு எது
ஜப்பான்(டோக்கிவோ)

05) 2022ம் ஆண்டு உலக காற்பந்துபோட்டி நடைபெறவுள்ள நாடு
கட்டார்

06) 2020ம் ஆண்டு ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்ற முதல் இலங்கையர்
மதில்டா கார்ல்சன்

07) 2020ம் ஆண்டின் சிறந்த கராத்தே வெற்றியாளர்
தேசிந்தன் செவ்வி

08) இறுதியாக நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் கிண்ணம் வென்ற நாடு எது
இங்கிலாந்து

09) இந்தியன் பிறீமியர்லீக் போட்டியில் பங்குபற்றும் மொத்த அணிகள் எத்தனை
08

10) அண்மையில் ஓய்வுபெறவுள்ள விமான படைதளபதி
எயார் மார்சல சுமங்கள டயஸ்

11) கொரோனா வைரஸ் தோற்றம் பெற்ற சீன நகரம்
வுகான்

12) 2020ம் ஆண்டின் யூரோகிண்ணத்தை வென்ற நாடு
இத்தாலி

13) தற்போது இந்தியாவில் பரவியுள்ள கொரோணாவின் பெயர்
டெல்ரா

14) 2020ம் ஆண்டு அமெரிக்காவின் ஜனாதிபதி யார்
ஜோபைடன்

15) ரூஜித் என்ரிஜன் கொவிட் -19 பரிசோதனைக்கு அமைப்பு அங்கீகாரம் அளித்துள்ளது
உலக சுகாதார அமைப்பு

செல்வி யோகேஸ்வரன் ஜனனி
தரம் 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிழலின் நிஜம்

சேய் பறவைகள் தமது தாயுடன் தமது இல்லம் செல்லும் ஆவலுடன் அது போடும் கீச் என்னும் இன்னிசை கீதத்திலும், ஆலயத்திலிருந்து வரும் கமகம என்னும் நறுமணத்திலும், அவ்விடத்தில் சூழவிருக்கும் மரக்கிளைகளின் அழகிய நடனத்திலும், இவ் எழில் மிக்க தருணத்திலும் நிதுவின் மனம் அமைதியின்றி அல்லல் பட்டுக்கொண்டிருந்தது. ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் தன்னை மறந்து மூழ்கியிருந்தாள். தன் வாழ்வினை புரட்டிப் போட்ட சில சம்பவமே அவளின் மனம் அமைதியின்மைக்கு காரணமாக இருந்தது.

தேன் உண்பதற்கு தம் சிறகுகளை அடித்துக் கொண்டு வரும் பட்டாம்பூச்சிக் கூட்டங்களும் எங்கு பார்த்தாலும் பச்சைப்பசேலேன கண்ணைக் கவரும் வயல் தோட்டங்களும் வான் அளவு வளர்ந்து நிற்கும் தென்னந் தோட்டங்களும் சுற்றியுள்ள செழுமை மிக்க இடம் தனில் தான் நிதுவின் அழகிய வீடு. இவ் அமைதிமிக்க சூழலில் அவளும் நிதுவின் தாய் தந்தை அண்ணா இருவர் அக்கா என மிக சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள்.

இக்குடும்பத்தின் சந்தோஷம் யார் கண்ணில் பட்டதோ? அல்லது அது தான் விதியா? இல்லாவிடில் நிதுவின் துரதிஸ்ரமான பிறப்புத் தனோ? என்னமோ? அவர்களின் சந்தோஷமான வாழ்வினை சூனியம் ஆக்கியது நிதுவின் அம்மா நோய் காரணமாக அவள்பிறந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை. ஆனால் இறைவன் அவர்களின் உயிரை இரக்கம் இன்றி பறித்துவிட்டார்.

அது அவளின் அறியாத பருவம் என்றாலும் அவளின் தந்தை அண்ணா அக்காவிற்கு மிகப்பெரிய தாக்கமாக இருந்தது. இப்படியே சில நாட்கள் கடந்து கஷ்டங்கள் கவலைகளை மறந்து வாழத்தொடங்கினார்கள். நிதுவின் குடும்பம் இப்படியே அவளின் சிறு வயது தனில் சந்தோஷமாக கடந்து வளர்ந்து வந்தாள். இச்சந்தோஷமும் நீடிக்க போவதில்லை. இதிலும் இறைவன் தான் சதிச் செயலினை நிகழ்த்தப் போகிறார் என்று யாரும் அறியவில்லை.

அனைவரது சந்தோஷத்தையும் வாழ்வினையும் புரட்டி சிதைத்து விடுவதற்காக மிகப் பெரிய அரக்கர் கூட்டம் ஒன்று படை எடுத்து வந்தது. அவர்களின் கைகளில் சிக்கி திணறி ஏங்கித் தவிர்தனர். அங்கும் இங்கும் ஓடி தம்மை காப்பதற்காக அவர்களின் கைகளில் சிக்காமல் மறைந்திருந்தனர். சிலர் அமைதியில் திகழ்ந்த இடம் தனில் அழுகுரல்களும், மரண ஓலங்களும், சாபங்களுமே அவ்விடத்தினை ஆக்கிரமித்திருந்தது.

இதில் தான் தன் பிள்ளைகளை காப்பாற்ற வேண்டும் என நிதுவின் அப்பா அவர்களை பத்திரமாக இருக்க வைத்து விட்டு அவர்களுக்கு உணவு எடுத்த வர சென்றார். ஆனால் நான் இனி தன் பிள்ளைகளை பார்க்க மாட்டேன். அவர்களும் தங்கள் தந்தையினை காணமாட்டோம் என அவ் நான்கு பிஞ்சு உள்ளங்களும் நினைக்கவில்லை. அப்பொழுது அவர்களின் அம்மம்மா ஓடிவந்து அவ் இளசுகளை தன் கைகளால் இறுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி அணைத்து உங்கள் அப்பா இனி வரமாட்டார் என கூறினார். என்ன எது கூறினாலும் தன் தந்தை தங்களுக்கு உணவு எடுத்து வருவார் என அவ் வழியை பார்த்தபடி ஏங்கிக் கொண்டு சென்றாள் நிது. அவ் எதிர்பார்ப்பு கல் உள்ளத்தையும் கரைத்து விடும். ஆனால் அவ் இறைவனின் உள்ளம் கரையவே இல்லை.

இதுவும் இறைவனின் திருவிளையாடல்களில் ஒன்று என நினைத்தபடி அவர்களின் அம்மம்மா அவர்கள் நால்வரையும் அவ் அரக்கர்களிடம் சென்றார்கள். இப்படியே அவர்களின் கைகளில் சிக்கி சின்னா பின்னமாகி மீதமுள்ள குடும்பங்கள் அவர்களிடம் ஒருவருடம் கைதிகளாக வாழ்ந்து வந்தனர்.

அதன் பின் ஒருவருடம் கழித்து அனைவரையும் தமது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைப்பதாக தெரிவித்தது. அந்த கூட்டம் மீண்டும் நம் சொந்த ஊர்களுக்கு போக போகின்றோம் என்ற சந்தோஷ த்தில் அனைவரும் நினைத்திருந்தனர். அவர்கள் சொன்னபடி அவரவர் ஊர்களுக்கு அனுப்பி வைத்து விட்டார்கள்.

அப்பொழுது நிது வளர்ந்து நிலவரம் தெரியக்கூடிய வயதாகியது. அவளும் அவளது உறவுகளும் தமது ஊர்களுக்கு வந்து சேர்ந்தார்கள். இப்படியே சில வாரத்தில் அவ்வூரில் உள்ள தாய், தந்தை அற்ற பிள்ளைகளை படிப்பதற்காகவும் பராமரிப்பதற்காகவும் இல்லங்களில் சேர்ப்பதற்காக நிதுவையும் நிதுவின் அக்காவையும் தேர்ந்து எடுத்தார்கள். நிதுவிற்கு இவ்விடயம் தெரிந்ததும் மிகவும் வேதனைப்பட்டாள். வேதனைப்பட்டாலும் தான் படிப்பதற்கு தான் தங்களை அனுப்பி வைக்கின்றோம் என அவர்களின் அம்மம்மா கூறியவுடன் அவர்களின் மனதில் தன்னை படிப்பிப்பதற்கு தான் என புரிந்து கொண்டாள். அவர்கள் இல்லத்திற்கு செல்ல வேண்டிய நாளும் வந்தது. கன்று தன் பசுவை விட்டு பிரிந்து செல்வதைப் போல் நிதுவும் அவர்களின் உறவுகளை விட்டு பிரிந்து சென்றாள். அவளுடன் அவளுக்கு ஆறுதலாக அவளின் அக்காவும் அவ் இல்லத்தில் வந்து சேர்ந்தார்கள்.

அவ் இல்லத்திற்கு வந்தவுடன் நிதுவிற்கும், அவளின் அக்காவிற்கும் புது உறவுகள் கிடைத்ததைப் போல் உணர்ந்தார்கள். கவலைகள் மறந்து தன் படிப்பிலும், ஒழுக்கத்திலும் கவனத்தை திசைதிருப்பினாள். அப்படியே நாட்கள் வாரமாகின. வாரம் மாதமாகின. மாதம் வருடங்கள் ஆகின. அவளும் கா.பொ.த சாதாரண தர பரீட்சை எழுதி அதற்கான பெறுபேறுகளும் வெளிவந்தது. அதில் அவள் சித்தியடைந்திருந்தாள். அது அவளிற்கு சந்தோஷத்தை அளித்தாலும், அவள் மனம் வேதனைப்பட்டிருந்தது. காரணம் அவள் வகுப்பில் படிக்கின்ற சது என்னும் அவளுடைய வகுப்பு மாணவியையே அனைவரும் பாராட்டினார்கள். அவள்தான் அதிகூடிய சித்தியினை பெற்றிருந்தாள்.

அப்பொழுது அவள் மனதில் ஒரு சிந்தனை உதித்தது. நான் ஏன் இப்படி உள்ளேன். என்னாலும் எல்லோரது பாராட்டினையும் பெற்றுக்கொள்ளமுடியும் என்று சிந்தித்தாள். அத்தோடு அவள் மனதில் ஒரு இலட்சியம் ஒன்றும் வெளிவந்தது. அதாவது நமக்காக இங்கு எத்தனை உள்ளம் இரவு பகல் பாராது உழைக்கிறார்கள். அதிலும் தங்களுடைய ஐயா (இல்ல நிறுவினர்) என எல்லாவிதத்திலும் தன் மனதை சிந்திக்க தூண்டினாள். அதன் விளைவாக அவள் மனதில் தானும் படித்து பல்கலைக்கழகம் சென்றுவிட வேண்டும் என்ற எண்ணம் அவளது எண்ணத்தில் உதித்தது.

அதன் படியே அவள் கா.பொ.த உயர் படிப்பில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தாள். இரவு, பகல் பாராது தன்னை வருத்தியும் தியாகம் செய்தும் படிக்கத் தொடங்கினாள். தொடங்கியதும் அவளுக்கு ஒரு ஊன்றுகோலாக அவளின் தமிழ் பாட ஆசிரியர் ஒருவர் விளங்கினார். அவள் தன் வாழ்வில் அவரையே ஒரு முன்மாதிரியாக வைத்துக்கொண்டு படிப்பை தொடங்கினாள். நிது படித்துக் கொண்டிருக்கும் போதே பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அவற்றினையெல்லாம் சரியான முறையில் சமாளித்து தன் கல்வியைத் தொடர்ந்தாள். தனது இலட்சியத்தை நோக்கிப் படித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை காலமும் நெருங்கியது. அவள் மனதில் எவ்வித பயமும், பதட்டமும் இல்லை. எனவே அவள் வணங்கும் கடவுளின் ஆசிர்வாதம் தன்வசம் உள்ள தாக்கியதோ என்னமோ? அல்லது தான் படிக்கவேண்டியவற்றை சரிவர படித்ததோ? என்னவென்று தெரியவில்லை பரீட்சைக்காலம் வந்தது. இதன் விளைவாக அவள் வணங்கும் இறைவனின் ஆசியுடன் அப் பாடசாலையிலே உயர் பெறுபேற்றினை நிது தட்டிச்சென்றாள்.

நிது மனதில் ஏற்பட்ட சந்தோஷம். இவ்வுலகில் தன் பிள்ளை உருவாகிவிட்டவை என்று உணரும் பெற்றோர்களைப் போல் இருந்தது. அவருடைய மகிழ்ச்சி அப்பொழுது அவளின் மனதில் நன்றி உணர்வினை வெளிப்படுத்தும் வரையில் கடவுளையும் கடவுளை விட அவள் மேலாக நினைக்கும் அவளுடைய ஐயா (இல்ல நிறுவினர்) மற்றும் அவளின் ஊன்றுகோளாக விளங்கிய தமிழ் பாட ஆசிரியர் அதிபர் என்பனவர்கள் அத்துடன் சக மாணவர்கள் என்பனவற்றினை நினைவு கூர்ந்தாள்.

தான் தன்னுடைய இலக்கை அடைவதற்கு அடுத்த படியில் கால் பதிக்கப் போகின்றேன் என்று மிகவும் பூரிப்படைந்தாள். பல்கலைக்கழகம் தெரிவாகியுள்ளது ஒரு கனவினைப்போல் இருந்தது அப்பொழுது அவள் ஒரு தத்துவத்தை உணர்ந்தாள். அதாவது மாற்றம் என்பதை தவிர ஏனையவை அனைத்தும் மாற்றம் அடையும். அத்தோடு முயற்சி செய்தால் முடியாதது எதுவும் இல்லை. என்பதாகும் என பலவற்றினை சிந்தித்து அதில் மூழ்கியிருந்தாள்.

**செல்வி நா.சுஜித்தா**
சிவனருள் இல்ல மாணவி
யாழ் பல்கலைக்கழகம்



அழகைப் பற்றி கனவு
காணாதீர்கள்.
அது உங்கள்
கடமையைப் பாழாக்கி விடும்.
கடமையைப் பற்றி கனவு
காணுங்கள்.
அது உங்கள்
வாழ்க்கையை அழகாக்கும்.
–அப்துல் கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவுகளின் நிழல்களாக....!

"கல்வியும் கலையும்
கணனியும் கற்போம்
நாளைய உலகை
நாங்களே நெய்வோம்" என்னும்
மௌட வரிகள் தரித்த சிவனருள் இல்லமானது
இன்று நிமிர்வுடன் திகழ்கின்றது.

ஊரிழந்து உறவிழந்து
வாழ்வதற்கு வழியின்றி
அல்லல் பட்ட சிறார்களுக்கு
வாழ்வதற்கு வழி அமைத்துக் கொடுத்த
தன்னிகரில்லா தந்தையர்கள்
Dr.ஜெயேந்திரன் நமசிவாயம் ஐயா!
Dr.ஜெயசிங்கம் ஜெயமோகன் ஐயா!
இவர்களின் நாமம் என்றும் அழியாப்
புகழ்கொண்டு விளங்கிட வாழ்த்துகின்றேன்.
சிவனருள் சிறுவர் இல்லம் என்னும்
நாமத்தினை உலகெங்கும்
வியந்து பேசிட வைத்த உத்தமர்கள் இவர்கள்

நினைவுகளின் நிழல்களாக
வாழ்விற்கு மாற்றங்களைத் தந்து
வாழ்க்கைக்கு வழிகாட்டியாக
சிந்தை நிறைந்திட
சித்தம் கொண்டு
இறையருளோடு பயணிக்கும்
என் வாழ்விற்கு அருள் கொடுத்த
திருக்கேதீச்சரப் பெருமானின்
பாதம் தொட்டு வணங்குகின்றேன்

வேரிடை ஊறிய நீரென எங்களின்
வீடென ஆகிய சிவன் அருள் இல்லத்தில்
காலத்தின் மாற்றத்தால்
பணியினைத் தொடர்ந்திட
வாய்ப்பு தந்த – இல்லத்தின் பணிப்பாளர்
அன்பாளர், பண்பாளர், பொறுமையின் சிகரம்
உதவிடும் உள்ளம், அயராத உழைப்பின்
உத்தம சேவகன் என்னும் பண்புகளை
தன்னகத்தே கொண்ட
செல்வரஞ்சன் ஆசானின் பணி
மென்மேலும்சிறப்புற்றுவிளங்கிடவாழ்த்துகின்றேன்.

செல்வி லோ.சுதர்சினி
முகாமைத்துவ உதவியாளர்,
சிவனருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவனருள் இல்லத்தோடு இனிய நினைவுகளும் "திருக்கேதீச்சரம் ஒரு தேன் பொந்து" நாட்டிய நாடகமும்

சிவன் அருள் இல்லமானது 2005ல் ஆரம்பிக்கப்பட்டு இன்று 17 வருடங்களாகின்றது. இல்லம் பற்றிய செய்திகளைக் கேட்டதும் 2019ம் ஆண்டு இல்லத்தோடு உறவாடுகின்ற இனிய நாள் ஏற்பட்டது. இதை ஏற்படுத்தித் தந்தவர் சிவனருள் இல்லத் தலைவர் Dr.நமசிவாயம் ஐயா அவர்கள்.

திருக்கேதீச்சர நாதன் கௌரியம்பாள் சரித்திர வரலாற்றை நாட்டிய நாடகமாக உருவாக்கி அதனை திருக்கேதீச்சர கும்பாபிஷேக நிகழ்வின் போது அரங்கேற்றி உலகமறியச் செய்ய வேண்டும் என்பது நமசிவாயம் ஐயா அவர்களின் ஆசையாகும்.அதற்கமைய திருக்கேதீச்சர நாதனின் அருள் பெற்று விளங்கும சிவனருள் இல்லச் சிறார்களையும் இணைத்து எமது கல்லூரி மாணவர்களோடு இதனை அரங்கேற்ற வேண்டுமென ஐயா வேண்டுகோள் விடுத்தார். "திருக்கேதீச்சரம் ஒரு தேன் பொந்து" என்ற தலைப்பில் கலாநிதிதமிழ்மணி அகளங்கன் ஐயா நாமம் இட்டு நாட்டிய நாடக கருப் பொருளை அழகாக வடிவமைத்து வழங்கினார்.

மிகவும்உற்சாகமாகசிவனருள்இல்லத்தில்திருக்கேதீச்சரம்ஒருதேன்பொந்துபயிற்சிஆரம்பிக்கப்பட்டது இல்லத்தில் இருக்கும் மாணவர்கள் சகலரும் விரும்பி வந்தார்கள். ஆடல் கலைக்குரிய அடிப்படைப் பயிற்சி சிறப்பாக நடை பெற்றது. சிவனருள் இல்லத்தில் இருக்கும் ஆண்,பெண் மாணவர்கள் இணைந்து பயிற்சி பெற்றார்கள். நல்ல ஒழுக்க விழுமியங்களோடு சிவனருள் மாணவர்கள் வழிநடாத்தப்பட்டு வருவதைப் பார்த்து பல தடவை வியந்துள்ளேன். ஆளுமை மிக்க அறிவுள்ள மாணவர்களாக காணப்பட்டார்கள். இல்லத் தலைவராக விளங்கும் Dr. நமசிவாயம் ஐயா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு அவர்களது பணியை பார்த்து தலை வணங்குகின்றேன்.

இவ்வாறு பயிற்சி துரிதமாக நடைபெறுகின்ற வேளை கொடிய கொரோனா என்ற பரவல் நோயால் பயிற்சிகள் தடைப்பட்டு கும்பாபிஷேகமும் பிற்போடப்பட்டது. ஆனாலும் Dr. நமசிவாயம் ஐயா விடவில்லை. Zoom ஊடாக பயிற்சி நடவடிக்கை மேற்கொண்டார். சிலகாலம் இவ்வாறான பயிற்சி நடைபெற்றது.

கிட்டத்தட்ட ஒருவருட காலத்தின் பின் மீண்டும் நேரடியாகச் சென்று பயிற்சிகள் ஆரம்பித்தோம். நிறைந்த பொருளாதார போக்குவரத்து கடின நேரத்திலும் உரிய நேரத்திலும் ஒழுங்காக பயிற்சிகள் நடைபெற்று சிறப்பாக நாட்டிய நாடகம் அரங்கேற வேண்டும் என்ற அவாவினால் Dr. நமசிவாயம் ஐயா அவர்கள் தனிப்போக்குவரத்தை ஒழுங்கு செய்து தந்தார். பல தடைகளுக்கும் மத்தியிலும் கடினமான சூழ்நிலைகள் ஏற்பட்ட போதிலும் தளராத உற்சாகத்தையும் நம்பிக்கையையும் அடிககடி எமது எண்ணத்தில் வலுச் சேர்த்தவர் Dr. நமசிவாயம் ஐயா அவர்கள்.அவர் ஒரு சிவபக்தர்.

திருக்கேதீச்சரப் பெருமானின் அருள்மிகு வரலாற்றுப் பதிவுகள் நாட்டிய நாடகமாக்கப்பட்டு என்னால் நாட்டியமைப்பும், நெறியாள்கையும் செய்யப்படுகின்றது. இசையமைப்பு நுண்கலைமாணி பிரதீபன் சிவநாதன் தலைமையில் அவரது குரு இசைத்துறை, விரிவுரையாளர் நவரட்ணம் பரந்தாமன், இசைத்துறை, விரிவுரையாளர் பத்மநாதன் சிவமைந்தன் போன்றோர் இசையமைத்து வழங்கியுள்ளனர். உருக்கமான இசைப்பதிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலே பங்குபற்றும் சிவனருள் மாணவர்கள் நாட்டியத்துறையில் பூரணபயிற்சி பெற்றவர்கள் அல்ல. சிவனருளைச் சேர்ந்த 60 மாணவர்கள் இதிலே பங்கு பற்றுகின்றார்கள். அவர்களால் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் இலகுவான நாட்டிய அமைப்பு முறையில் இந் நாட்டிய நாடகம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கடினமான சில நாட்டிய அசைவுகளையும் உள்வேண்டிச் செய்யும் தன்மை கொண்ட மாணவர்கள்.

இப்படிப்பட்ட அரும்பெரும் பணியை திருக்கேதீச்சரப்பெருமானுக்கு என்னை அர்ப்பணித்து செய்ய உதவிய Dr. நமசிவாயம் ஐயாவை இருகரம் கூப்பி தாள் பணிந்து வணங்குகின்றேன். முற்பிறப்பில் செய்த புண்ணிய பலனே இப்பிறப்பில் "திருக்கேதீச்சரம் ஒரு தேன் பொந்து" என்ற இந்த ஆடலமைப்பை செய்ய அருள் கிடைக்கப்பெற்றது.

"திருக்தேீச்சரம் ஒரு தேன் பொந்து" என்ற ஆடற்கலையை எழுதி அர்ப்பணித்த அகளங்கன் ஐயா அவர்களுக்கும், இதிலே மண்டோதரியின் வாழ்க்கை வரலாற்றை துல்லியமாக எழுதி வழங்கிய பண்டிதர் பிரதீபன் ஐயாவிற்கும் எனது மனமார்ந்த நன்றியை இருகரம் கூப்பி தெரிவிக்கின்றேன்.

அத்தோடு இந்த நாட்டிய நாடகத்திற்கு பலவழிகளிலும் உதவி செய்த அனைத்து கலைஞர்கள், மாணவர்கள், இசைக்கலைஞர்கள், ஒப்பனைக் கலைஞர்கள், இதை வழிநடாத்திய சிவனருள் இல்லத்தலைவர் ஐயா இல்லத்தை நிர்வகிக்கும் மதிப்பிற்குரிய செல்வரஞ்சன் ஐயா மற்றும் சிவனருளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், அரங்க அமைப்பாளர்கள், ஒலி ஒளி அமைப்பாளர்கள் அனைவருக்கும் எனது இருகரம் கூப்பி இதயம் கனிந்த நன்றிகள்.

**இந்த நாட்டிய நாடக உள்ளடக்கம்**

| | |
|---|---|
| காட்சி 1 | காப்பு<br>திருக்கேதீச்சரத்தின் சிறப்புப்பாடல் |
| காட்சி 2 | மாதோட்டத்தின் சிறப்பு |
| காட்சி 3 | ஆதிசேடன் வாயுபகவான் மோதலால் மகா மேருமலையின் ஒரு பகுதியே மாதோட்டமாகிய வரலாறு. |
| காட்சி 4 | விஸ்வர்கமா ஆலயம் அமைத்தல். |
| காட்சி 5 | பலாவித்தீர்த்தச் சிறப்பு |
| காட்சி 6 | கேதுபகலான் வழிப்பட்டதால் திருக்கேதீச்சரச் சிறப்பு |
| காட்சி 7 | பாலாவித்தீர்த்தத்தில் தவளையாக மண்டோதரி மஜன் மனைவி வருகை.<br>இராவணன் மண்டோதரி திருமணம்<br>சிவன் குழந்தையாக மண்டோதரி முன் காட்சி கொடுத்தல். |
| காட்சி 8 | இராமர் தோஷம் நீங்க திருக்கேதீச்சரத்தில் சிவ பூசை |
| காட்சி 9 | திருக்கேதீச்சரத்தில் விஜயன் வருகை |
| காட்சி 10 | நாயன்மார்களின் அகத்திலே திருக்கேதீச்சர நாதனின் காட்சி. தேவாரம் திருவாசகம் |
| காட்சி 11 | ராஜராஜசோழன் வருகையும் திருக்கேதீச்சரமும் |
| காட்சி 12 | ஒல்லாந்தர் ஆலயத்தை சீர்குலைத்தல் |
| காட்சி 13 | மாதோட்டத்தில் ஒரு தேன் பொந்து ஆறுமுக நாவலர் அறைகூவல் |
| காட்சி 14 | மீண்டும் திருக்கேதீச்சரப் புணர்நிர்மாண வரலாறு |
| காட்சி 15 | யுத்த காலத்தில் சிவனருள் பிள்ளைகளின் திருப்பணி |
| காட்சி 16 | திருக்கேதீச்சரத்தில் சிவனருள் |
| காட்சி 17 | திருக்கேதீச்சர நாதர் தில்லானர் |
| காட்சி 18 | மங்களம் |

**திருமதி சூரியயாழினி வீரசிங்கம்**
அதிபர்,
நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி,
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவனருளால்

என்னவரும் எனை நீங்கி
ஈசனோடு இசைந்திடவே
என்ன செய்ய அறியாமல்
எண்ணங்களுள் சிறையிருந்தேன்.

கண்ணிரண்டு மணிகளாய்
கருவினிலே விளைந்த மக்கள்
அன்னை நான் இருக்கையிலே
அல்லலுற விடலாமோ

ஆழ்துடிக்கும் நெஞ்சத்தினை
அம்பலத்தான் ஆட்டுவித்தான்
ஆலகால விஷம் உண்டான்
அன்பு மழை பொழியானோ

சின்னஞ் சிறு பன்றிக்கும்
சிவனவனே பால் கொடுத்தான்
சிதறிய என் வாழ்க்கைக்கும்
சிவன் அருள் இல்லம் தான் கொடுத்தான்

இல்லம் வந்த நாள் முதலாய்
அல்லல் அற்று போய்விடவே
அருளாளன் தந்த இல்லம்
அரணாக அமைந்ததுவே

பணம் கண்டால் பிணம் கூட
வாய் திறக்கும் வையகத்தில்
பல்லோர்க்கும் பயனளிக்கும்
பருவதமே சிவன் அருள் இல்லம்

எலும் பணிந்தான் எண்குணத்தான்
பல்லுயிர்க்கும் பகைமையிலான்
விசும்புலகில் என்னவர்க்கும்
சிவன் அருள் இல்லம் தான் தருவான்.

அசையாத தன்னம்பிக்கையும்
வற்றாத கடமையுணர்வும்
வலுவான பேச்சும்
சிறப்பான நிர்வாகத்திறமையுடனும்
நிர்வகித்துக் கொண்டிருக்கின்ற
எமது சிவனருள் இல்லப்பணிப்பாளர்
திரு.செ.செல்வரஞ்சன் அதிபருக்கும்
எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்
கொள்கின்றேன்.

17ம் ஆண்டு நினைவின்
மகிழ்வினைக் கொண்டாகும் சிவனருள் குடும்பம்
இன்னும் பல மகிழ்வுகளின் நிறைவினைக்
காண வேண்டுமென இந் நாளில்
வாழ்த்துகின்றேன்
நன்றி

சி.பிரபாகினி M.A
முகாமைத்துவ உதவியாளர்
சிவனருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆறுமுக நாவலர்

01. ஆறுமுக நாவலர்
        அருந்தமிழன் காவலர்
    வீறு கொண்டு சைவத்தின்
        மேன்மைதந்த கோனவர்.

02. நல்லூரில் பிறந்தவர்
        நல்லறிவு நிறை ந்தவர்
    எல்லோருக்கும் இனி  வர்
        ஈசனையே பணிபவர்.

03. திருக்குறளை மிகமிகத்
        திருத்தமாகப் பதித்தவர்
    இருக்குமுதல் வேதங்கள்
        இயம்பும் நெறியை மதித்தவர்.

04. கந்தபுராணங் கற்றவர்
        கருணையுள்ளம் பெற்றவர்
    சிந்தைசெயலில் தூயவர்
        சித்தாந்தமே ஆய்பவர்.

05. பேச்சில் மிகவும் வல்லவர்
        பிறர்மதத்தை வெல்பவர்
    மூச்சும் தமிழுக்காய் விட்டவர்
        மும்மலத்தைச் சுட்டவர்.

06. தென்னாட்டிலும் ஈழத்தின்
        சிறப்பைநாட்டி வைத்தவர்
    பொன்னாட்டினும் புரவலன்
        போற்றுமெங்கள் நாவலன்.

**செல்வன் க.தனுஜன்**
தரம் - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செல்வி P. அமுதா
தரம் – 11
சிவனருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொட்டுக்கள் மலர

ஓடும் ரயிலில் ஒரு அழகான மழலையுடன் தாய் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கிறாள். அதன் எதிர் இருக்கையில் நான் இருந்து இயற்கை அழகுகளை ரசித்த வண்ணம் இருக்கிறேன். என்ன அழகு! எத்தனை அழகு! பச்சைப்பசேலென பரந்துவிரிந்து கிடக்கும் புல்வெளியில் அழகான சிறுவர் கூட்டம். இன்றைய மொட்டுக்கள் நாளைய அழகிய மழலை மலர் கூட்டம். துள்ளித் திரிந்து விளையாடும் விதமான காட்சிகளை கண்ட வண்ணம் ரயில் தரிப்பிடம் வருகிறது. அப்பப்பா! உலகின் எத்தனை விதமான அழகிய இயற்கையை படைத்த இறைவனே, எத்தனை விதமான மனிதர்களையும் படைத்திருக்கிறான்.

அப்பல வர்க்க மனிதரில் ஒரு சில வர்க்கம் தானும், தன்னுடைய குடும்பமும், தன்னுடைய உடமையும் என பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். உள்ளமே வலிக்கிறதே! என்ன மனிதர்கள்! என்ன உலகம்! ஒருவர் வீழ்ந்து போனால் கைகொடுக்க மனிதரே இல்லையா? "உயர்ந்திருந்தால் நம்மைச் சுற்றி வரும், ஏழ்மையிலே எட்டப்போகும்" கொடுமை மாறாதா? எனக்குள்ளேயே குமுறிக்கொண்டிருக்கிறேன். பயணத்தில் நல்லவர்கள் எவரையுமே இதுவரை நான் கண்டதில்லை. அப்படி ஒருவர் என் கண்களில் படமாட்டாரா? என நினைத்தவாறே பயணித்துக் கொண்டிருக்கிறேன்.

இவ்வாறு செல்கையிலே ரயில் நிலையம் வந்தது. அங்கே இறங்கி யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸிற்காக காத்துக் கொண்டிருக்கிறேன். அவ்வேளை என் கண்களுக்கு புலப்படும் தொலைதூரத்தில் ஓர் கூட்டத்திலே ஓர் சிறுமி மட்டுமே என் கண்களுக்குப் புலப்படுகிறாள். இப்போது அச் சிறுமி மெல்ல மெல்ல நான் இருக்கும் திசைநோக்கி வந்து கொண்டிருக்கிறாள்கள். வீதியில் ஒரே சனக்கூட்டம் பயணிகள் தத்தமது பேரூந்து வண்டிகளிற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். பணம் படைத்த செல்வந்தர்கள் கார், ஓட்டோ என பயணிகள் நடமாடிய வண்ணம் இருக்கிறார்கள்.

அக்கூட்டத்தில் வந்த சிறுமியை என் இரு கண்களால் தேடினேன். அச்சிறுமி என் கண்களுக்குள் சிக்கிக் கொண்டாள். அவளை கண்டதும் பரிதாப நிலையில் காணப்பட்டாள். யாதெனில் ஒரு வாரமாக சீவப்படாத தன் தலையை தன் கையால் சொறிந்த படியும், மற்றொரு கையால் ஓர் பாத்திரமும் கொண்டு ஒவ்வொரு நபரையும் தொட்டுத் தொட்டு பிச்சை கேட்கிறாள். அது அவளுக்குப் பழக்கப்பட்ட ஒன்றுதான். அவள் ஒரு பாவமும் அறியாத பச்சைப் பாலராய் இருக்கும் போதே அனாதை ஆக்கப்பட்ட அந்த பெண்ணுக்கு அது புதிதல்ல.

ஐயா! ஐயா! சார்! ஏதாவது கொடுங்க சார் என்று ஒரு ஆசாமியின் புஜங்களைத் தொட்டு கேட்கவும் அவர் ஆவேசமடைந்து சண்டைக்கு வந்துவிட்டார். "பிச்சைக்காரநாயே போ அப்பாலே" எனக் கூறினார். எனக்கோ தாங்க முடியவில்லை. பாவமென எண்ணிக்கண் கலங்கி நின்றேன் ஆனால் அச்சிறுமியோ இது போல எத்தனை பேரைக் கண்டிருப்பாள் அதனை பொருட்படுத்தாமல் அடுத்த நபர்களிடம் சென்று பிச்சை கேட்ட வண்ணம் செல்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக் கடவுளே! என்னப்பா மனிதர்கள் அந்தப் பெண்ணை ஆதரிக்க யாரும் இல்லையா? என்னாலும் முடியாத நிலை நானும்இன்னொரு நபரையே தங்கி வாழ்கின்றேன். இந்த நிலையில் இச் சிறுமியை கூட்டிச் சென்றால் என்ன நடைபெறுமோ? சரி பரவாயில்லை. இச்சிறுமியையும் வீட்டுக்கு கூட்டிச்சென்று நம் சகோதரர்களில் ஒருவராக இருக்கட்டும் என சிந்தித்தபடி அச் சிறுமியிடம் செல்ல முற்படும் போதும் அச்சிறுமி யாரோ ஒருவரிடம் ஏதோ கேட்கிறாள் அவரும் ஏதோ கதைக்கிறார். அச் சிறுமி கும்பிடுகிறாள். பின்பு அவருடன் அவருடைய வாகனத்தில் ஏறிச் செல்கிறாள். எனக்கு ஒரே கலக்கம் பாவம் இந்தப் பெண் பிள்ளை என்ன ஆகப்போகுறதோ...?

கடவுளே! ஏன்தான் அந்தச் சிறுமிக்கு கஷ்ரத்தின் மேல் கஷ்ரத்தைக் கொடுக்கிறாய் என அந்தப் சிறுமியை மீண்டும் காணும் வரை அதே நினைவுதான் இப்போ நாட்டில் நிலவும் அசம்பாவிதங்களை நினைக்க அந்த சிறுமியை மீண்டும் இக்கோலத்தில் காண்பேனா? என நினைத்த வண்ணம் இருக்கையில் யாழ்ப்பாணத்திற்கு செல்லும் பஸ் வந்துவிட்டது ஏறி இருக்கையில் அமர்ந்தேன். அச்சிறுமியே என் கண்களுக்குள் தோன்றித்தோன்றி மறைகிறாள்.

சில வருடங்களின் பின் எனக்கு வேலை கிடைத்தது. ஒரு பாடசாலையில் அலுவலகப் பணியாளராகச் சென்றேன். அங்கு அந்த சிறுமி. அதே முகம். அதே செந்தளிப்பு. அந்தப் பாடசாலையில் அவள்தான் விளையாட்டுப் போட்டியில் ஓட்ட வீராங்கனையாகவும், மாகாணமட்டத்தில் சம்பியன் எடுத்தது மட்டுமா? தேசிய மட்டத்திலும் தங்கப்பதக்கம் பெற்று பரிசுப் பொருட்களுடன் என் கண்முன் காட்சி தந்தாள். முன்பு இருந்ததை விட மிகவும் மாற்றம் புன்முறுவல் ததும்பிய முகம் யாரைக்கேட்பேன். என் சந்தேகத்தை எப்படிப் போக்குவேன். அந்தப் பெண் எப்படி இங்கே? என குழம்பியபடி என் பணிகளைச் செய்தேன்.

அதன் மறுநாள் அங்கு கௌரவிப்பு விழாவிற்காக பெற்றோர்கள், மதகுருமார்கள், பெரியோர்கள் மற்றும் கொடையாளர்கள் என பல பெரியார்களும் அழைக்கப்பட்டிருந்தனர். அதில் ஒருவர் என் கண்களுக்குப் புலப்பட்டார். அப்போதுதான் எனக்கு ஐயம் தீர்ந்தது. அன்றைய தினம் அந்தச் சிறுமியை அழைத்துச் சென்றது. வேறு யாரும் அல்ல அப் பாடசாலை சமூகப் பெரியவர் ஒருவரே. அச் சிறுமியை விடுதி ஒன்றில் சேர்த்து கல்வி மற்றும் சகலவிதமான ஆதரவுகளையும் வழங்கியிருக்கிறார்.

இப்போது புரிந்து கொண்டேன் உலகில் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள் என அச்சிறுமியின் உயர்வைக் கண்டு திருப்தி அடைந்தேன் என் கண்களிலிருந்து நீர் கொட்டுகிறது. இச்சிறுமியின் தன் கஷ்ரத்தை உணர்ந்து கற்று மலர்வது மட்டுமின்றி அவளைப் போல் பல மொட்டுக் களையும் மலரச் செய்வாள் என நினைத்தபடி எனது பணிகளைத் தொடர்ந்தேன்.

**செல்வி S.மங்கலச் செல்வி**
சிவனருள் இல்லப் பணியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிப் படி

தடைகள் பல வரலாம்...!
தட்டிப் பறிக்க கூட்டமும் பின் வரலாம்...!
எதையும் கண்டு அஞ்சாது துணிந்து நில்...!
முன் வைத்த காலை பின் வைக்காதே...!
நீ எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும்...!
வெற்றியின் படிகள் தான்...!

உன்னால் முடியும்
தனித்திருந்தாலும் தன்னம்பிக்கையோடு இரு
அடுத்தவர் தயவை எதிர் பாத்திராதே
இலக்கினை தொடும் வரை இடர் முறிந்து
இலட்சியத்தோடு போராடு.

உண்மை ஒரு நாள் வெல்லும்
உன் வெற்றி அதை உலகுக்குச் சொல்லும்
வெற்றி உனக்கே சொந்தம்
வேண்டாம் உனக்கு வேறு எண்ணம்.

உன்னால் முடியும் என்பதே உன் தெம்பு
அதை நீ நம்பு
இனிவரும் உனக்கு இன்பம்
இனித்திடும் உன் உலகம்.

முயற்சி ஊக்கமும்
உன்னோடு பிறந்ததை உணர்திடும்
உயரத்தை அடைய
உண்மையாய் உழைத்திடு
உன் தடைகள் படைகளாயினும்
பக்குவமாய் வென்றிடு.

உன் எதிர் காலத்தை எண்ணி
நிகழ் காலத்தைத்
தொலைத்து விடாதே
நேற்றய எதிர்காலம் தான்
இன்றைய நிகழ்காலம்.

**செல்வன் T.சமீஷன்**
தரம் – 10
சிவனருள் இல்லம்




**செல்வி P.நோபிகா**
A/L 2022
சிவனருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு அழகியற் பாடல்களின் அவசியம்

இயற்கையிலும் செயற்கையிலும் உள்ள அழகினைக் கண்டு களிப்பதற்கு அழகியற் கல்வி மாணவர்களைத் தூண்டுகின்றது. காணல் கேட்டல் ஆகிய செயற்பாடுகளினால் உளத் தொழிற்பாட்டில் திருப்தி ஏற்படுகின்றது. இயற்கையை இரசித்தலின் மூலமாக இன்ப உணர்ச்சியை மனிதன் பெறுகின்றான். இரசனை அனுபவம் மூலம் மாணவர்களிடையே அறிவுத்திறனை விருத்தி செய்ய முடியும். நல்லதொரு அழகியல் இரசனையைப் பெற்ற குழந்தை சமூகத்திலே நல்ல ஒழுக்க விழுமியங்களை பேணுபவனாகவும் உளச்சமனிலையைப் பெற்றவனாகவும் வளர்ச்சி பெறுகின்றான். அழகியல் உணர்வுகள் ஊட்டப் பெறாத குழந்தைகள் மனிதாபிமானம் அற்றவர்களாகவும் இராட்சத மனிதர்களாகவும் வளர்ச்சி பெறுகின்றார்கள்.

இவ்வாறான கருத்துக்களை உளவியலாளர்கள், தத்துவியலாளர்கள் முன்வைத்துள்ளார்கள். பிளோட்டோ சிந்தனையானது மூன்று ஆன்மீகப் பெறுமானங்களை கொண்டது.

01. உண்மை
02. அழகு
03. நன்மை

உண்மையென்பது புத்திக்கூர்மை. நன்மையென்பது ஒழுக்கம். அழகு என்பது கவின்கலை ஆகும் என்றும் கூறுகின்றார். இம்மூன்று பெறுமானங்களும் அரசுடன் இணையவேண்டும். அப்போது தான் அந்த நாடு வளம் பெறும். எனவே உண்மை, அழகு, நன்மை மூன்றையும் கல்வி வளர்க்க வேண்டும் என்று கூறுகின்றார். அத்தோடு முன்பள்ளி ஆரம்பக்கல்வியில் "இசையும் அசைவும்" இணைந்த உடற் தொழிற்பாடுகளை உள்ளடக்கிய உடல்வளர்ச்சி பற்றிய கருத்தூன்றிய கல்வி முன்வைக்கப்படுகின்றது. சந்தங்களினூடாக எழும் இசை இயல்பாக குழந்தைகளின் உடலசைவிற்கு தூண்டுகின்றது. ஆடல்பாடல் மனதையும் உடலையும் நன்கு பேணி வளர்க்கிறது.

இசையும் நடனமும் – ஆன்மாவாகிய உள்ளத்தின் வளர்ச்சிக்கு ஏதுவாகின்றது.
உடற்பயிற்சி – உடல் வளர்ச்சிக்கு ஏதுவாகின்றது.

இவ்வாறாக இசை, ஓவியம், நடன, நாடகம் ஆகியவற்றை உள்ளடக்கிய நுண்கலைக்கல்வியின் முக்கியத்துவம் பற்றி பிளேட்டோ தெளிவுபடுத்துகின்றார்.

அதேபோல இயற்கைவாத சிந்தனையாளர் ரூஷோ பிள்ளை மையக் கல்வி முறையில் அழகியல் செயற்பாடுகளை தெளிவுப்படுத்தியுள்ளார். பிள்ளைப் பருவ கல்வி விருத்தி பற்றி கூறுகையில் உடற் செயற்பாடுகளின் மூலமும் உளச் செயற்பாடுகளின் மூலமும் குழந்தைகளின் சிந்தனை தூண்டப்பட வேண்டும். கேட்டல், பார்த்தல், இரசித்தல், நயத்தல், ஆடுதல், பாடுதல் போன்ற திறன்கள் மூலம் குழந்தைகளின் கல்வி முன்னெடுக்கப்பட வேண்டும். செய்து காட்டல, செய்து கற்றல் போன்ற நேரடி அனுபவங்கள் மூலம் கல்வியைத் தூண்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொற்களை கூறும் முன் பொருட்களைக் காட்டி கற்பிக்க வேண்டும் என்கின்றார்." விளையாட்டுத்திறன், ஆக்கச் செயற்பாடு ஆடல் பாடல் என்பவை குழந்தைகளுக்கு மகிழ்ச்சியை கொடுக்கக் கூடியவை. மகிழ்ச்சியான கற்றல் மூலம் நெகிழ்ச்சியான கல்விமுறையை குழந்தைகளிடையே ஏற்படுத்த வேண்டும் என்று ரூஸோ கூறுகின்றார். அடுத்து மகாத்மா காந்தி அவர்கள் பின்வறுமாறு கூறுகின்றார்.

மனிதனின் உடல் உள்ளம் ஆன்மா, இருதயம் என்பவற்றை ஒருமித்த வகையில் விருத்தி செய்து ஆளுமையடையச் செய்வதே கல்வியின் பயனாகும்" குழந்தைகளிடத்தே உடல் உள்ளம் சார்ந்த செயற்பாடுகளைத் தூண்டவேண்டும். ஆடல்பாடல் உள்ளத்தை தூண்டும் சக்தியாகும். உடல், விருத்தி, உளவிருத்தி என்பன வளர்ச்சியடைவதாக காந்தியடிகள் கூறுகின்றார்."

அத்தோடு பாரதியார் குழந்தைக் கல்வி முறையில்

"ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா நீ ஒரு குழந்தையை வையாதே பாப்பா.
காலை எழுந்தவுடன் படிப்பு – பின்னர்
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு – என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா"

என்று தனது கல்விச் சிந்தனையை பாரதியார் முன்வைக்கின்றார்.

அடுத்து தேசிய விநாயகம்பிள்ளை அவர்கள் தனது கல்விச் சிந்தனையில் ஒரு முறை ஒரு குறிப்பிட்ட இசையொலியில் ஈடுபட்டு இன்புறும் குழந்தையின் உள்ளம் மீண்டும் அந்த இசையை நாடிச் செல்லும் என்கின்றார். அதேபோல அழகர்வள்ளியப்பா குழந்தைகளுக்கான கற்பித்தலில் இசையும் அசையும் என்ற உடல் உள இயக்க தேவைப்பாட்டினை முன்மொழிகின்றார். சோமசுந்தரப் புலவர் தனது சிந்தனையில் அன்பு, மகிழ்ச்சி, உணர்வுகள் சிறார்களிடத்தே ஊடுருவியிருத்தல் வேண்டும் என்கின்றார். இவ்வாறான குழந்தைக் கல்விச் சிந்தனையில் அழகியற் செயற்பாடுகள் மறுக்கப்படும் போது எவ்விதமான தாக்கங்கள் நிகழ்கின்றன என்பதையும் உளவியலாளர்கள் எடுத்துக் காட்டுகின்றார்கள்.

குழந்தைகளிடையே பதகளிப்பு, பொறாமை, வன்செயல்கள், நெறிபிறழ்வு, கோபம், அடம்பிடித்தல் போன்ற உணர்வுகள் மேலோங்கும் அல்லது அதிகரிக்கும். உள்ளத்தை தூய்மைப்படுத்தாத கல்வியால் குழந்தை குமரனாக வளர்ந்த பின்பு நெறிபிறழ்வின் தாக்கம் அதிகரிக்கும். அனேகமான பெற்றோர்கள் இன்று அழகியற்கல்வியை புறந்தள்ளுகின்றார்கள். குழந்தைகளிடத்தே உள்ளத்தை மென்படுத்தும் திறன்களை விடுவித்து மன அழுத்தத்தைத் தரும் பொறிமுறைக் கல்வியை மூன்று, நான்கு வயதிலேயே உட்புகுத்துகிறார்கள். எழுதுதல், வாசித்தல், மனனம் செய்தல் என்ற செயற்பாடுகளுக்கான பல்வேறு கல்விக் கூடங்களுக்கு அனுப்புகின்றார்கள். இத்தகைய கல்வி முறையை உளவியலாளர்கள் கல்விச் சிந்தனையாளர்கள் கண்டிக்கின்றார்கள்.

சிறுவயதிலேயே அழுத்தம் கொடுப்பதால் குழந்தை உளச் சமநிலையை இழக்கின்றது. இதுவே வளர்ந்தபின் குழந்தையின் நெறிபிறழ்வு நடவடிக்கைகளைத் தூண்டுகின்றது. இன்றைய காலகட்டத்தில் எமது இளைஞர்கள் நெறிபிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அழகியற்கலையை பெற்றோர் நாட்டம் செலுத்தாததும் காரணமாகலாம். அழகியற் கலை மூலமே ஒழுக்கவிழுமியம் பேணப்படுகின்றது.

அழகியற் கல்வி மூலம் ஆடல் பாடல்கள் மூலம் குழந்தைகளிடையே பின்வரும் பண்புகள் வளர்க்கப்படுகின்றன. அன்பு செலுத்துதல், பெரியவர்களை மதித்தல், குருபக்தி பொறுமை, பிறருக்கு உதவுதல், பகிர்ந்து உண்ணுதல், கூட்டுறவாக நடத்தல், ஒற்றுமையுடன் செயற்படுதல், கடவுள் பக்தி, சுத்தம் பேணல், கவிநிலை பேணுதல், மற்றவர்களுக்கு கட்டுப்படுதல், வார்த்தைகளில் கனிவு, முகமலர்ச்சி, தன்னைப் போல மற்றவர்களையும் நினைத்து மதித்தல், சமத்துவம் பேணல், சகோதர உறவு பேணுதல், உண்மைத் தன்மையை உணருதலும், உண்மை பேசுதலும், எந்நேரமும் சுறுசுறுப்பாகவும் உற்சாகமாகவும் செயல்களில் ஈடுபடுதல் இவ்வாறான பண்புகள் குழந்தையின் உள்ளத்தில் சிறு வயதிலேயே அழகியல் ஊடாக விதைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐந்தில் வளையாதது ஐம்பதில்வளையுமா?" என்ற கேள்வியை பெற்றோர்கள் தம் உள்ளத்திலே பல தடவைகள் கேட்க வேண்டும்.

**முன்பள்ளி ஆசிரியர்களின் அழகியற் செயற்பாடுகள்**

முன்பள்ளி ஆசிரியர்கள் குழந்தைகளோடு குழந்தைகளாக இணைந்து கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். குழந்தைகளின் இரண்டாவது பெற்றோராக செற்படுபவர் ஆசிரியர். வீட்டிலிருந்து முதன் முதலாக வெளி உலகிற்கு காலடி எடுத்து வைக்கும் பருவமே முன்பள்ளிப்பருவம். கள்ளம் கபடமற்ற குழந்தைகளின் மனதிலே ஆசிரியரின் முகத்தோற்றமே முதன்முதலில் கற்றலைத்தூண்டுகிறது. எனவே முன்பள்ளி ஆசிரியர் பின்வரும் விடயங்களில் தன்னை தயார்படுத்த வேண்டும்.

01. முகத்திலே புன்சிரிப்போடும் மலர்ந்த முகத்தோடும் கனிவான பேச்சோடும் குழந்தைகளை நாடுதல்.
02. சுத்தமான தூய்மையான உடலமைப்போடு எந்நேரமும் காட்சி கொடுத்தல்.
(கை, கால், தலை, பற்கள் போன்ற அங்கங்களை மிகவும் சுத்தமாக வைத்திருத்தல்.)
03. அழகாக தன்னை அலங்கரித்து குழந்தைகளை அணுகுதல்.
(அழகு குழந்தைகளைக்கவரும்)

**அடுத்து குழந்தைகளுக்கான கற்பித்தல் முறைகள்**

1. பிள்ளையை விளங்கி கல்வியைத் திட்டமிடுதல்.
2. பிள்ளையின் இயல்பான வளர்ச்சிப் பாங்குக்கு ஏற்றவாறு கற்பித்தலை முன்னெடுத்தல்.
3. இயற்கையோடு இணைத்து இயற்கைச் சூழலில் கல்வியை ஆரம்பித்தல், கற்பித்தல்.
4. புலக்காட்சிகளுக்கான பொருட்களை முன்வைத்து பாடங்களை ஆரம்பித்தல்.
5. பிள்ளைகளுக்கு புதிய புதிய அனுபவங்களைப் பெற திட்டமிடுதல் வேண்டும்.
6. மூடப்பட்ட அல்லது நாலுசுவர்கள் அடைக்கப்பட்ட கட்டிடத்திற்குள் வைத்து கற்றலில் ஈடுபடுத்துவதை தவிர்த்தல்.
7. கற்றல் முன்னெடுக்கும் வகுப்பறைச் சூழலை அழகாகவும், காட்சிப் பொருள் நிறைந்ததாகவும் மாற்றியமைத்தல்.
8. குழந்தை ஓடி ஆடி விளையாடி சுதந்திரமாக செயற்படக் கூடிய முறையில் கற்பித்தலை முன்னெடுத்தல்.

**அழகியல் கற்பித்தலின் நுட்ப முறைகள்**

முதலில் சிறிய சிறிய அபிநயங்களை, இசை ஒலிகளை, இயற்கையோடும் பொருளோடும் சொல்லிக் கொடுக்க வேண்டும். இவ்வாறு சொல்லிக்கொடுக்கும் போது ஆசிரியர் தானும் குழந்தையாக, குழந்தைகளின் சகபாடியாக மாற வேண்டும். "செய்து காட்டல்" மிகமிக அவசியமானது. புன்சிரிப்போடும், உற்சாகமாகவும் குழந்தைகளை உற்சாகப்படுத்தி நல்ல ஊக்கங்களை வழங்க வேண்டும்.

1. பூவிரிதல், மரம் அசைதல், மரம், பறவை, பூனை, நாய், பசு போன்ற சிறிய அபிநயங்களை இரசனையோடு கற்பித்தல்.
2. துள்ளுதல், ஓடுதல், பாய்தல், கைதட்டல், சிரித்தல், இருத்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்தல்.
3. கூவுதல், கத்துதல், குரைத்தல் போன்ற வாய் மூலம் எழுப்புதல்.

இவற்றையெல்லாம் ஆசிரியர் தானும் செய்து பிள்ளைகளையும் செய்ய விட வேண்டும். இதன் பின்பு மெல்லிய சந்தங்களுக்கமைவாக சிறிய அசைவுகளை சொல்லிக்கொடுத்தல்.

1. மான் துள்ளுதல்
2. மயில் அசைதல்
3. வாத்து நடத்தல்
4. முயல் பாய்தல்
5. குரங்கு தாவுதல்.

கூடுதலாக மகிழ்ச்சிப்படுத்தும் உற்சாகப்படுத்தும் செயற்பாடுகளை ஆசிரியர் முன்னெடுக்க வேண்டும். கூட்டாக இயங்கும் அழகியல் செயற்பாடுகளின் மூலம் குழந்தைகளிடையே ஒற்றுமை, சமூகமயம், கூட்டுறவு, மகிழ்ச்சி என்பவற்றை ஏற்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கைகளை கோர்த்து வட்டம் சுற்றுதல்.
2. கைகளைக் கோர்த்த படி கால்களை தூக்கி அசைத்தல்
3. மாறி மாறி கைகளைத் தட்டுதல்
4. தோள்களில் கைவைத்து புகைவண்டி ஒலியெழுப்பி (சுக்குபக்கு) சுற்றி வருதல்.

இவ்வாறான ஆரம்ப அழகியற் செயற்பாடுகளை எல்லாம் ஆரம்பத்தில் முன்னெடுக்க வேண்டும். இதன் பின்பே சிறிய சிறிய அபிநயப்பாடல்களை இசையோடும் சந்தத்தோடும் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

உதாரணம் - 1

ஒன்று இரண்டு சொல்லுவோம்
ஓடி விளையாடுவோம்

உதாரணம் - 2

புள்ளிப் புள்ளி மானே
துள்ளித் துள்ளி ஓடிவா

உதாரணம் -3

வண்ணத்துப்பூச்சி வண்ணத்துப்பூச்சி
பறக்குது பார் பறக்குது பார்

இவ்வாறான சிறிய பாடல்களுக்கு அபிநயத்தோடும் சந்தத்தோடும் கற்பிக்கப்பட வேண்டும். இலகுவான சிறிய அசைவுகளில் இருந்து படிப்படியாக அசைவுகளை விஸ்தரித்துச் செல்லலாம். குழந்தைகளை கட்டாயப்படுத்தி கற்பிக்கக் கூடாது. தானாக சுதந்திரமாக கற்றலுக்கு வரும் வரை ஆசிரியர் பொறுமையாக தன் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். கற்றல் தூண்டிகளை மாணவர்களிடத்தே ஏற்படுத்த வேண்டும். அபிநயங்களைக் கற்கும் போது,

1. கண்ணசைவு, காலசைவு, கழுத்தசைவு போன்ற உடல் மூலம் கருத்துக்களை வெளிப்படுத்தும் திறனை ஏற்படுத்தலாம்.

2. அழுதல், சிரித்தல், மகிழ்ச்சி, உண்ணுதல், அழைத்தல், கோபம், பயம், வெறுப்பு, நித்திரை செய்தல், உற்சாகம் போன்ற சிறிய சிறிய சொற்களை சொல்லி முகபாவங்களினூடாகவும் வெளிப்படுத்திச் செய்யலாம்.

இவ்வாறான கற்பிக்கும் முன்பள்ளி ஆசிரியர்கள் பொறுமை, தியாகம், சகிப்புத்தன்மை போன்றவற்றை கடைப்பிடிக்க வேண்டும். எந்நேரமும்தன் கவலைகளை மறந்து முகமலர்ச்சியோடும் கனிவான அன்பான வார்த்தைப் பிரயோகங்களை உதிர்ப்பவராகவும் குழந்தைகள் மேல் அன்பு காட்டுபவராகவும் இருத்தல் அவசியம்.

நன்றி

**திருமதி சூரியயாழினி விரசிங்கம்** (PGDE), (MF.A Dance)
அதிபர், நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேர் விட்ட வரிசைகள்

தெருவோர மரங்களாவே
மனிதர்கள்
நடப்பட்டிருக்கின்றார்கள்
மண்ணெண்ணெய் வரிசையாக

ஒரு லீட்டராவது
கிடைக்குமா? என்ற
ஆதங்கத்தின் வேர்கள்தான்
இந்த மரங்களை
நாட்கணக்கில் வாரக்கணக்கில்
நிற்பாட்டிவைக்கின்றது.

இவர்களின்
கால் இடுப்பு
முதுகுக்கிளைகளின்
வலியின்
வேதனைக் காற்றின்
முறையீடுகள்
மாதங்களின் மேசையில்
புறக்கணிக்கப்பட்டே
கிடக்கின்றன.

சிலமரங்கள்
கைக் குழந்தைகளை
தூக்கி வைத்தபடி
காய்ந்தும் இருக்கின்றன
முதுமைவயதடைந்து போய்
முறிந்தும் விழுகின்றன
பகலின் வெயிலும்
இரவின் பனித்துளிகளுமே
இந்த மரங்களுக்கு
பசளைகளாகின்றன

இங்கே
இனமத மொழிபேதமற்ற
மனிதர்கள் சிலர் வந்த
இந்த மரங்களின்
தாகத்தின் அடியில்
இலவசமாக
போத்தல் தண்ணீரை ஊற்றுவதை
தேசத்தின்
முழுமையான நிலப்பரப்பும்
எப்போது பருகும்?

ரூபாய்களான
இந்த மனித மரங்கள்
டொலர்களாக துளிர்க்கும் வரை
அடிப்படி நிலங்களில்
குந்தியிருக்கின்றது
காத்திருப்பு விதைகள்
வேர்கள் தேடி!

**M.நவீன்ராஜ்**
12, கணிதப்பிரிவு
சிவனருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிகளின் பார்வை

வானத்தில் உதித்தெழும்
விண்மீனை போன்ற
அவனது பார்வை நிலவின்
ஒளியை ஒத்தது.

உண்மையை பேசும் இவ்
கூர்மையான விழியிலே
என் வாழ்க்கையின்
அர்த்தத்தை உணர்கின்றேன்.

மயிலின் அழகை ஒத்த
இவன் விழி இயற்கையினுடைய
படைப்பின் நோக்கத்தை
செவ்வழி புகட்டுகின்றது.

அன்பை கொடுக்கும்
இவன் விழியிலே
கண்ணிமையாய் போனால் என்ன
என்று மனம் ஏங்கும்.

இருளிலும் ஒளிவீசும்
அவனது கருவிழி பார்வை
என் வெற்றிக்கு
ஆதாரமாய் திகழ்ந்தது.

ஊமையாய் பிறக்காவிடினும்
இவன் பார்வையில்
என் உடலை சிதைத்து
ஊமையாயே வாழ்கிறேன்.

**பா.யுசிக்கா**
A/L (2022)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செல்வன் R.யுனோஜன்
A/L
சிவனருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கல்விப் பயணம் (மலையகத்திலிருந்து பாலாவி வரை)

### சிவனருள் இல்லத்தில் எனது கல்வி பயணம்

எனது பெயர் துசான். என்து ஊர் மலையகத்தில் பண்டாரவளையில் கல்கந்த என்ற தோட்டக்காடு. எனக்கு அப்பா இல்ல. எல்லாமே அம்மாதான். அம்மா தோட்ட வேலை.

### எனது வீட்டு கல்வி பயணம்.

எனது சிறுபராய கல்விப் பயணத்தில் தடைகளே அதிகம். அப்போது எல்லாம் எனக்கு கல்வி என்றாலே விருப்பமில்லாமல் போனது. என்னவோ அம்மா படிக்க அனுப்பினதால் போய் ஏதோ படிச்சன்.(1-5) தரம் வரை ஏதோ ஏச்சு வாங்கி பேச்சு வாங்கி மற்றும் சில அடிகளும் வாங்கி படித்து சென்று விட்டேன்.

எனது 6ம் தர வாழ்க்கைப் பயணம் வீட்டிலிருந்து 3Km தூரத்தில் இருந்தது.ஏதோ 6ம் தரம் நல்ல பாடசாலையில் படிக்கப்போறோம் என்ற ஆசையில் இருந்த எனக்கு எனது அம்மா என்னை அவ் பாடசாலைக்கு பதிவு சேர்க்க கூட்டி சென்ற போது அவ் பாடசாலையில் கல்வி கற்று கொண்டிருந்த மாணவன் ஒருவனுக்கு கணித பாட சேர் அடித்த அடியுடன் இங்கயாடா படிக்க வந்தோம் என யோசிக்க வச்சுட்டாங்க.

சரி நம்ம வசமா மாட்டிட்டோ நினைச்சா. என்ட பிரண்ட்சும் வந்து அந்த School ல மாட்டிட்டாங்க. எனக்கு ஒரு வகையில சந்தோசமா இருந்தது. ஏன்டா நம்ம பிரண்ட்சும் நம்ம கூடதானே இருக்காங்கண்டு.

அப்படியே 6ம் தரம் ஓடியது 6ம் தரத்துல வந்து படிச்சி கொடுத்தத வீட்ட வந்து திருப்பியே பாக்குறது இல்ல. ஆன எப்படியாவது கடைசியில இருந்து ஒரு 5நிலை தள்ளி வந்திருவன். அதால நா சந்தோசப்படுவன் ஆனா என்ட அம்மா பேசுவாங்க பேச்சு எனக்கு தாங்க முடியாது. என்ன செய்ய வாங்கி தானே ஆகனும் என்டு வாங்குவன்.

என்ட 7,8 தரத்திலையும் மேல சொன்ன மாரியே தா போனது ஆனா அதுல கொஞ்ச முக்கியமான நிகழ்வுகள் நடந்தது. நா School சேந்தப்ப அடிச்ச கணித வாத்தி எங்களுக்கு பாடம் எடுக்க வந்திட்டாரு சரி நம்ப செத்தோமுனு நினச்சன அதே மாரி நல்லா முதுகு வீங்க அடி வாங்கினன் நிறைய தடவை வாங்கினன் அப்பையும் படிக்கிறதே இல்ல.

இன்னொரு விசயமும் நடந்தது என்னையை எல்லா வகுப்பு தலைவராக போட்டுட்டாங்க என்ன செய்ய வகுப்பு தலைவரா போட்டாங்க என்ட நிலையும் தலைவரவிட மோசமா பொய்ட்டு பின்னால இருந்து 2வது நிலைக்கு வந்துட்டன்.

பிறகு என்ன அம்மாட்ட ஏச்சும் அண்ணாட்ட அடியும் வாங்குனே" என்ட அண்ணா 11தரம் முடிக்கும் வர சத்தம் காட்டம இருந்தாரு 11ம் தரம் முடித்ததும் அவரால எனக்கு சத்தம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7உம் 8ம் அப்படியே ஓடீட்டு என்ட வாழ்க்கைய Danger பாதாளத்துக்கு கொண்டு போனதே இந்த தரம் 9 தான். தரம் 9ம் இல் முத இரண்டு தவணையும் நல்லாதா போனது. இரண்டாம் தவணை லீவ் விட்டது School ல லீவுக்கு கிளாஸ் வச்சாங்க ஒரு கிளாஸ்சுக்குமே போகல School 2ம் தவணை லீவ் முடிஞ்சு School போனோ School க்கு வராதவுங்களா அதிபர்ட போக சொன்னாங்க போனதும் வீட்ட போய் அம்மாவ கூட்டிட்டு வர சொன்னாங்க சரிண்டு அம்மாவும் வந்தாங்க ஆனா அதிபர் பதிவ வாங்கிட்டு போய் வேற School ல சேர சொல்லிட்டாரு.

சரி அடுத்தநாள பதிவு வாங்க போனா இதா கடைசி நாள் சந்தர்ப்பம்னு சொல்லி விரும்பவும் ஞஉாழுட ல சேத்து கிட்டாங்க சரி அறைய நாள் மட்டும் School போனே. பிறகு போகல படிக்க படிக்கலனு அம்மாட்ட சொல்லிட்டு வீட்டயேநின்னே அம்மா கெஞ்சாத குறையாக கெஞ்சினாங்க பிறகு வீட்ட பெரிய சண்டையே வந்துட்டு அந்த சண்டையில நா தனியா சமச்சு தனியா சாப்பிட்டே . என்னமோ சமச்சே இது ஒரு நாள் மட்டுந்தா நீடிச்சது அடுத்த நாள் பானையில சோறு போட்ட போட்டு வெளியே பொயிட்டு வந்தா சோத்து பான ஆகாயத்துல பறந்தது.

சரி பிறகு என்ன சண்டை ஆக பெருசா ஆரம்பிச்சது! சர நானு என்ட அம்மாவு ரொம்ப ஏசிட்டு சொந்த கார அண்ணா வீட்ட பொய்ட்டே “அப்போ எனது அம்மா நிலைமை எத பத்தியும் யோசிக்கவே இல்ல” ஒருகிழமை அப்படியே போனது .

பிறகு பெரிய மீடிங் நடந்தது என்ட அம்மா, என்ட அண்ணா, என்ட சொந்தக்கார அண்ணா எல்லா அந்த மீடிங்ள பங்கு பற்றினாங்க ஆனா முக்கியமான ஆளான நா போகல. என்னமோ கதச்சாங்க ஒன்னு தெரியல கடைசில சொந்தக்கார அண்ணா என்ன ஏசுனாறு வாங்குனே பிறகு ஒரு கேள்வி கேட்டாரு அத்தோட அவருக்கு நா அடிமையா ஆகிட்டே. என்ன கேள்வினா உனக்கு என்ன வபங்கி தந்தா படிப்பனு நா எனக்கு Cycle வேனுண்டு சொன்னது வாங்கி தந்நாங்க

நா ரொம்ப சந்தோசத்துல்ல துள்ளளானு நினச்சா படிக்க சொல்லிக்க சொல்லிட்டாங்க சந்தோசம் கவுந்துட்டு என்ன செய்ய Cycle வாங்கி தந்துட்டாங்கலே படிச்சு தானே ஆகனும் திரும்பி School போக ஆரம்பிச்சே பொய்கிட்டே இருந்தே School போனே ஆன வீட்ட சண்டை முடியல . திருக்கேதீச்சரம் சிவனருள் இல்லத்தில் எப்படியோ என்ன சேர்த்திட்டாங்க அப்பறம் பிறகுதா என்ட இல்ல வாழ்க்கை ஆரம்பிச்சது. இந்த இல்லம் எப்படி எதுவும் என்று எனக்கு தெரியாது என்னமோ ஆசையில வந்துட்டே. வரும் போது என்ட அம்மா என்னோட வந்தாங்க போகும் போதும் என்ட சொல்லிட்டு பொய்டாங்க சரி போகட்டு இனி சரி சந்தோசமா இருப்பேனு நினைச்சன் ஆனா முடியல அந்த சந்தோசம் 2 நாள் மட்டுமே நிலைச்சது பிறகு என்ட அம்மாட ஞாபகம் திறத்தியது என்ட அம்மாவ நினைச்சு 2 கிழமை அழுதன் அம்மாட்ட நா போறன் போறன் என்று கத்துனன், கதறுனேன் ஆனா வீட்ட அனுப்பல “அப்பதா என்ட அம்மாட அருமை நிலையை புரிஞ்சது அப்பைல இருந்து எனகது எல்லாமே என்ட அம்மானு புரிஞ்சிக்கிட்டே ” என்ட அம்மாவ புரிஞ்சிக்க வைச்சது இந்த இல்லமே. ரொம்ப கடமை பட்ருக்கன் இந்த இல்லத்துக்கு என்ட வாழ்க்கைய மாத்துனதே இந்த இல்லம் தா.

சரி ரொம்ப அலட்டிட்டே இனி என்ட இல்லத்து கல்விய பத்தி சொல்றே “sorry மேல ஒன்டு சொல்ல மறந்துட்டே அந்த 3Km School போறப்ப நிறைய தடவ வழுக்கி வழுக்கி விழுந்துருக்கன் விழுந்ததும் பட்டுனு எழும்பிருவே ஏனா பிரண்ட்ஸ் சிரிப்பாங்களே அதா அதோட பொம்பல புள்ளங்க முன்ன விழுந்தா எப்படி இருக்கும்?

முதல் நாள் School இல்லத்துல இருந்து லண்டன் ஐயா வேனில் கூட்டிட்டு போனாறு இப்பயும் ஞாபகம் இருக்கு என்ட அண்ணாவோட சேட்டையும் எனக்கு என்ட அம்மா வாங்கி கொடுத்த ஜீன்சையும் போட்டு போனே School பாக்க சின்னதா இருந்தது சரி உள்ள பொய்ட்டு படிக்கிறத பாக்கலானு போனா ஒரு புள்ள என்ன பாத்தா நா பாத்தே அப்பையும் எனக்கு படிப்பு மேல அக்கர வல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2வது நாள் School இல்லத்துல இருந்து நடந்து போனோம் "நானும் இல்லத்து பொடியங்கலும்" என்னப்பா 1வது நாள் வேன்ல போனோம். 2வது நாள் நடக்க வச்சிட்டாங்கனு அப்படியே யோசிச்சிட்டே School போயாச்சு.

சொல்ல மறந்துட்டே நா இல்லத்துக்கு 10ம் தரம் வந்து சேந்தன! சரி அப்பையு இங்கவந்தாவது படிப்போனு நினைச்சா படிக்கல கொஞ்ச காலம் போனது 1ம் தவணை பரிட்சை சரி என்னவோ டீச்சரஸ் படிப்பிச்சத வச்சி எழுதுனே என்ன அறியாமலே 8ம் நிலை எடுத்தே மொத்தம் 18 பிள்ளைகள் முன்னுக்க இருந்து 8ம் நிலை பின்னால இருந்து இல்ல புரல"ள

பிறகு தா என்னாலையும் முடியும் என்று நா நினைச்சன் என்ன டீச்சர்சும் ஆர்வபடுத்தினாங்க இனி என்னப்பா படிக்க ஆரம்பிச்சிட்டே ஆனா அந்த கணக்கும் விஞ்ஞானமும் மண்டைக்கே ஏற மாட்டேண்டு ஆனா ரொம்ப பிடிச்ச பாடம் நா I.C.T அதுக்கு முக்கிய காரணம் விஜய் அண்ணா அவர் நா செஞ்ச தப்பால என்னோட நெருக்கமா பழகுனத விட்டுட்டாரு அவரதா நா ரொம்ப மிஸ் பண்றன்.

அவர்ட நா sorry கேட்டன் அவர் மன்னிக்கல நா அந்த தப்பு செய்ய முன்னால் அவர் எனக்கு ஐ.ஊ.வு நல்லா படிச்சி கொடுத்தார். அவர் நாலதா O/L I.C.T பாடத்துல B எடுத்தன். அந்த அண்ணாவ ரொம்ப பிடிச்சதால அவரபத்தி சொன்னன். பிறகு அவர் தொடர்ந்து I.C.T பாடம் படிப்பிச்சார் நானு படிச்சன் பிறகு தா எனக்கு போட்டி வந்தது. 2ம் தவணை பரீட்சை வந்தது 8ம் நிலையில் இருந்த நான் 5ம் நிலைக்கு மாறினேன். 3ம் தவணையும் அதே போல 5ம் நிலையை தக்க வைத்துக் கொண்டேன்.

எல்லாம் முடிந்து 11ம் தரத்தில் கால் எடுத்து வைத்தேன். வைச்சது தான் தெரியும் படிப்பு பிரேக் படிச்சிட்டு காதல் ஓடியது என்ன காதலிக்கவும் ஆரம்பிச்சிட்டே (10ம் தரத்திலே ஆரம்பிச்சிட்டு) அத பத்தி அதாவது காதல பத்தி கதைக்க விரும்பல ஏனா அந்த காதல் காணாம பொய்ட்டு

நா உண்மையா தாண்டா பாத்தே அந்த புள்ள ஏமாத்திட்டு இந்த விஷயம் ஒரு நாள் டீச்சருக்கு அதாவது வகுப்பு டீச்சருக்கு தெரிஞ்சிட்டு சரி நா வேற கொஞ்சம் படிக்கிற பொடியனா அதால வகுப்பு டீச்சர் என்ன தனியா கூப்பிட்டு கதச்சு என்ன படிக்க வச்சாங்க நா படிக்க ஆரம்பிச்சிட்டம். அப்பறம் எண்ட படிப்பு சிவப்பு பல்புல இருந்து பச்ச லைட்டுக்கு மாறிட்டு.

நானு படிச்சே ஆனா கணக்கு, விஞ்ஞானம் 35 மாக்ஸ் தாண்டவே இல்ல அப்ப தான் எனக்கு தெய்வம் போல ஒரால் வந்தாரு யாருனா கணக்கு வாத்தியார் இல்லத்துக்கு பணியாளரா வந்தார். இனி சரி கணக்கு பாடம் 35 மாக்ஸ் தாண்டு னு நினச்சு அவர்ட எந்த நாள் இரவும் 6-8.30 வரையும் கணக்கு படிப்பன் அவர் நான் நிறைய கொட்டு வா..கிதான் படிச்சிருக்கன். அது வேற விஷயம் கடைசி

O/L பரீட்சையில் கணக்குல B pasals எடுக்க வச்சிட்டாரு ரொம்ப நன்றி கணக்கு வாத்தியர் பிறகு O/L காலத்துரு இன்னும் கூட படிச்சு 3ம் நிலைக்கு வந்தன் O/L Schooly முடியும் வரை அந்த 3ம் நிலையை தக்க வைத்து கொண்டேன்.

அப்படியே நாட்கலும் கடந்து சென்றது O/L பரீட்சை காலம் நெருங்கியது. அப்போது எங்களது இல்லத்திற்கு தெய்வம் போல புதிய பணிப்பாளர் வந்தார். அவரை போன்று நான் வேறு யாரையும் கண்டதில்லை. எல்லா பிள்ளைகலுடனும் சந்தோசமாக கலந்துரையாடுவார். எந்த பிரச்சினைக்கும் இலகுவாக தீர்வை நாடுவார். எங்களது O/L காலத்தில் அவரது முழு ஒத்துழைப்பையும் வழங்கினார். அவர் ஓய்வு பெற்ற அதிபர் ஆனால் அவர் இன்னும் இளமை போலவே காட்சி அழிப்பார். அப்படியே ழுஃடு பரீட்சை வந்தது

O/L பரீட்சையும் நான் எதிர் கொண்டேன் எதிர் கொண்டு A, 4B, 2C, 2S என்ற சித்தியை பெற்றேன் இப்போதும் சொல்லுவேன் இந்த இல்லம் இல்லை என்றால் எனது O/L சித்தி 9W என்னை இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்திற்கு இலவசமாக கூட்டி வந்து சாப்பிடவதற்கு சாப்பாடு ரொம்ப பெருசா இலுக்க விரும்பல சிம்பிலா சொன்னா உணவு, உடை, உறையுள் என்பவற்றை தந்து என்னை மனிதனாக மாற்றிய லண்டன் ஐயா விற்கு இந் நேரத்தில் அடிபணிகின்றேன்.

O/L முடிவடைந்தது அந்த சந்தோசம் முடிந்தது பிறகு என்ன A/L தான் சரி படிக்க தானே வேண்டும் சரி Art's படிப்பம் என்று முடிவெடுத்து புதிய பணிப்பாளரிடம் சொல்லிவிட்டேன். அவர் திடீர்! என்று கேட்டார் உனக்கு பைத்தியமா என்று ஏன் என்று வினவினால் அவர் சொன்ன வார்த்தை என நெஞ்சை கில்லி சென்றது என்ன வென்றால் இவ்வளவு நல் Resalt எடுத்து Art's படிக்க போரியா என்று கேட்டார் நானும் ஓம் என்று சொன்னன் 5 தடவை Art's என்றே சொன்னேன் பிறகு Art's படிப்பதால் என்ன கிடைக்கும் என்றும் யோசித்தேன் ஒன்றும் நடக்க போவதில்லை என உணர்ந்தேன். பிறகு நான் A/Lல் பொறியல் தொழிநுட்ப துறையில் (E-tec) என் திறமையை காட்ட வேண்டி நேர்ந்தது நான் E-tec துறையில் சேர்ந்து என் திறமையை வளர்த்து கொண்டிருக்கிறேன் என்னை இவ் பாடத்தை எடுக்க சொன்ன பணிப்பாளருக்கு நன்றியை தெரிவிக்கின்றேன். அதுமட்டுமல்ல என்னை அவரது சொந்த வீட்டில் வைத்து உணவு, உடை, உறையுள் தந்து தனது சொந்த மகன் போன்று என்று அரவணைத்து, நான் செய்யும் தப்புகளை அல்லது தவறுகளை திருத்தி எனது வாழ்க்கை பயணத்தில் என்னோடு வருகின்றார். அவருக்கு நான் எப்போதும் அடிப்பணிகிறேன். நான் இந்த E-tec பாடத்தை தெரிவு செய்த தால் எனக்கு தெரியாத விடயங்களை கற்றுக் கொண்டேன். இந்த பாடம் எல்லோருடைய வாழ்க்கைக்கும் தேவையானது நான் இந்த பாடத்தை கற்று சிறந்த பெறுபேறை பெற்று பல்கலைக்கழகம் செல்வேன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நான் என்றும் இவ் இல்லத்தை மறவேன். எதிர்காலத்தில் என்னாலான உதவிகளை இந்த இல்லத்திற்கு செய்து எனது நன்றியைத் தெரிவிப்பேன்

**செல்வன் R.துஷாந்த்**
A/L 2022
சிவனருள் இல்லம்

தன்னம்பிக்கை என்னும்
ஒளியோடு இருப்பவர்கள்
வாழ்க்கைப் பாதையில்
வெற்றிநடை போடுவார்கள்.

- ரவீந்திரநாத் தாகூர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செல்வி A.அனுஷியா
O/L 2021
சிவனருள் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேடலுடன் திடல்

மாஞ்சோலைகளும், பூஞ்சோலைகளும் நிறைந்த இடம் காண்க எங்க ஊரு. அங்கு வரும் பக்தர்களுக்கு அருளை அள்ளித் தரும் திருக்கேதீச்சரப் பெருமான் கௌரியம்பாள் உறை இருக்கின்ற திருக்கேதீச்சரம். அதன் அடிவாரத்தில் அமைந்திருக்கும் சிவன் அருள் இல்லத்தில் இருந்து சிறு வயது படிப்பு முடிந்து உயர் பட்டப் படிப்புக்காக சப்ரகமுவ பல்கலைகழகத்தில் படித்துக்கொண்டிருக்கின்றேன். என்னும் கொஞ்சம் விரிவாக சொல்லுகிறேன் கேளுங்க. கதையின் முன் சொன்ன ஊரு தான் இப்ப இருக்கின்ற ஊரு. என் செல்வந்த ஊரு. நான் பிறந்த ஊருங்க கிழக்கு கடற்கறையோரம். சூரிய ஒளிக் கதிர்கள் அள்ளி வீசும். மீன்கள் துள்ளித்திரியும் அழகிய தோற்றத்தையும் தரும் முருகன் ஆலயம். அங்கு மரங்களை மிஞ்சி இருக்கும் தேவாலயங்கள். ஆக மொத்தம் அழகிய மாவட்டம் தாங்க முல்லைத்தீவு எனது இடம். எனது குடும்பத்தில் மூன்று சகோதரர்கள். மகிழ்ச்சி பொங்கி வழியும். அம்மா பெயர் கல்யாணி. அப்பா பெயர் செந்தில்ராசா. அப்பா கூலி வேலை. அம்மா கடற்கரையில் மீன் கட்டுதல்.

இன்னும் கதைக்குள் போகயில்லையே என்று நினைக்காதீங்க. இனிதான், அன்று மாலை 6.00மணி நான் வீட்டுக்குள் போய் வானொலி பெட்டிய எடுத்துகிட்டு வந்து போட்டன். ஆஹா..... என்ன பாடல் காசே தான் கடவுளடா...... என்று பாடல் போய் கொண்டிருந்திச்சி. அம்மா வேலை முடித்து வந்து அறைக்குள் போனாங்க. டேய் சரத் என்னடா செய்ற. நானா அம்மா பாட்டுக் கேக்கிறன். பாட்டா கேக்கிறா. இஞ்சவாடா தம்பி, தங்கைய கூட்டிக் கொண்டு படிடா. என்னம்மா படிக்கிறதா. ஊம் படி. போம்மா நான் கொஞ்சம் நேரம் பாட்டு கேக்கிறன் பொரு வாரன் என்று சொல்லி கொண்டு தடியுடன் வந்தது அம்மா. போறன். நானும் எனது தம்பி, தங்கச்சியும் படிக்க கூட்டி வந்து உள்ள இருக்கிற தகரலாம்பை எடுத்து பத்த வச்சம் பிரகாசமா மஞ்சள் ஒளி எனது அறைக்குள் பரவியது. எனது புத்தகங்களை திறந்து வைச்சன் என்ன ஆச்சரியம் எனது புத்தகம் எல்லாம் தங்க கலராக இருந்தது. எழுத்தெல்லாம் நல்ல தெளிவாக இருந்தது. கொஞ்ச நேரம் படிப்போம் என்று புத்தகத்தில் உள்ள பாடங்களை பார்த்துக் கொண்டே இருந்தேன். அண்ணா தண்ணீர் குடிக்க போறன் என்னடா ரவி ஊம் போய் வாய்டா என்னாங்கா என்னாட்ட சொல்லுறான் என்று நினைக்கிறிங்களா. நான் தான் எங்கட குடும்பத்தில் மூத்த பிள்ளை நான் கொஞ்சம் மரியாத. சரி வாங்க அம்மா சாப்பிட கூப்பிரா வாங்க சாப்பிடுவாம் இரவு 8.30 மணி அம்மா சாப்பாடு கொண்டு வாரா என்று அவா செய்த உணவின் வாசம் பரவி வருது எனது மூக்கில் முட்டியது ம்ம்ம் இன்று நல்ல பிடிதான் என்று சாப்பிட இருந்தோம். அம்மா எல்லோரையும் பார்த்து என்னையும் பார்த்து சாப்பாடு போட்டாங்க அப்பதான் என்ற அம்மாவின கையை பார்த்தேன் கையெல்லாம் சின்ன சின்ன காயம் உள்ளங்கை மறுத்து போய் இருந்திச்சி. அம்மா என்று கூப்பிட்டம் அம்மா முகத்தில் சூரிய ஒளியின்ட பிரகாசத்த போல சிரிச்சிக்கிட்டே திரும்பினா. நான் அப்பதான் புரிஞ்சிகிட்டேன் எவ்வளவு கஸ்டங்கள் வந்தாரும் பிள்ளைகளுக்கு காட்டிக் கொள்வதில்லை என்று கோழிக் குஞ்சிகளை பருந்துகிட்ட இருந்து தாய் கோழி தனது சிறகுக்குள்ள வைச்சிருக்கின்ற மாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் கைக்குள் எல்லோரும் தூங்குறோம். வானொலியில் மெல்லிய இசையில் ஒலி பாட்டு போகுது 'அம்மான்னா சும்மா இல்லடா அவ இல்லன்னா யாருமில்லடா"மெல்ல மெல்ல நான் கண்ண மூடினேன் மெல்ல ஒலி என் காதில் கேட்கிறது அம்மா அழைக்கிறா தம்பி தங்கை, அண்ணா அண்ணா என்று அழைக்கிறாள். ஆனா எனது மனதில் என் அம்மாவ நல்லா பாத்து கொள்ளனும் எனும் சகோதரங்களை நல்ல பாசத்துடன் வளர்க்கனும் எனும் எண்ணம் எனக்குள் வளர்ந்தது அன்று 2004.12.26 எல்லோரும் நத்தார் பண்டிகையில் மூழ்கி இருந்தனர். எனது குடும்பம் மட்டும் இல்ல உலகமே வளமை போல் எனது அம்மா கடலுக்கு வெளிக்கிட்டு கொண்டு இருந்தாங்க நானும் தம்பி தங்கையும் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்பாவும் அன்று கடலுக்கு வேலைக்கு செல்லனும் என்று அம்மாட்ட சொன்னார் ம்ம்ம் வாங்க நேரம் ஆகுது. என்று சொல்லிக் கொண்டு சரத் இங்கு வாடா தம்பியையும் தங்கையையும் நல்லா பாத்துக் கோ நாங்க வேலை முடிச்சிட்டு வர நேரம் செல்லும் என்று சொல்லிக்கொண்டு வெளிகதவ திறந்து சென்றார்கள்.

நாங்கள் மூவரும் விளையாட்டில் கலைச்சு போனோம் திடீர் என்று நேரத்த பாத்தா ஒருமணி அண்ணா பசிக்குதண்ணா ம்ம்ம் வாங்க அம்மா சமைச்சி வச்சிட்டுதான் போனாங்க இரண்டு பேருக்கும் உணவு குடுத்துட்டு இருக்க அண்ணா அம்மா எப்ப வருவாங்க தெரியலடா செல்லம் ஆனா இரவுக்கிடையில் வந்திருவாங்க ம்ம்ம் அண்ணா சாப்பாடுகள் முடித்து விட்டு திரும்பவும் வானொலி நேரங்கள் ஓடி உருண்டது மாலை நேரமும் நெருங்கியது ஆனா அம்மாவும் அப்பாவும் வரல தம்பியும் தங்கையும் கேட்டபடி எப்ப வருவாங்க என்று ஆனால் நான் பதில் இல்லாமல் நின்றன் என்ன செய்வது என்று புரியாமல் போனது நேரம் ஆகஆக அம்மாவை கண்கள் தேடியது. மாலை ஆறுமணி தம்பி உள்ள தகரலாம்பு எடுத்து வா ம்ம்ம் அண்ணா எங்க லாம்பு எல்லா இடமும் தேடினேனே ஆனா லாம்ப காணோம். இரு நான் வாரன் பரனிலா வைச்சிறுக்கா அம்மா தகரலாம்ப பாத்த மூன்று நாள் அழுது வடிந்த முகம் மாதிரி எண்ணெய் எல்லாம் லாம்பில வடிந்திருந்தது மெதுவாக லாம்பு சிமிலியை மெல்லமாக கலட்டி அதனை மெல்ல துடைச்சிட்டு யாக்கிரதையாக கழட்டி அதனை தம்பியின் கண்களில் படாமல் ஒதுக்குப் புறமாக வைச்சிட்டு லாம்ப துடைச்சன் தம்பியின் கைகளில் பட்டால் கையில எடுத்து விளையாண்ட உடைச்சா அம்மாகிட்ட நான் செத்தன் ஏன் என்றா நான்தான் மூத்த பிள்ளை. தம்பி தங்கை செய்யும் எல்லா பிழைகளுக்குக்கும் திட்டு, அடிவாங்கிறது. மூத்த பிள்ளை தானே. சரி கதைக்குள்ள வாங்க தகரலாம்பு மெல்லமாக துடைச்சிட்டு தீப்பெட்டியிலா முடிச்சி தீப்பெட்டியை தட்டினேன். இருட்ட இருந்த மஞ்சள் ஒளி எல்லாமாக நிறைந்து. பிரகாசமாக இருந்தது. நேரம் உருண்டு ஓடியது. ஆனா அம்மா அப்பாவும் வரல போய் கதவ பாக்கிறது வாரது அம்மா அப்பா வ நவாங்க என்று காத்திருந்தேன் வானொலியில் நேரம் சொன்னாங்க 7.30 நிமிடங்கள் தம்பியாக்களுக்கு படிப்புச் சொல்லி குடுப்பம் என்று புத்தகத்த திறந்தன். அம்மா அப்பாவ பாக்கனுனு ஆசை இன்னொரு பக்கம். அப்பதான் நேற்று இரவு அம்மா சொன்னது ஞாபகம் வந்தது. சரத் நல்லா படிக்கனும் தம்பி தங்கை இருக்காங்க அவங்களை நல்லா பாத்து கொள்ளனும் என்று அம்மா சொன்னாங்க ஆனா எனக்கு படிக்கவராது ஆனா நல்லா விளையாடுவன் ஆனா அம்மா சொன்னது மனதில் பதிந்தது திடீர் என்று அண்ணா ஓய் சொல்லுங்க பாடம் சொல்லித்தாங்க ம்ம்ம் சொல்லித்தாரன்டா இப்படியே நேரம் மறைந்தது கொண்டு சென்றது. அண்ணா இருட்டு வந்ததும் அம்மாவும் அப்பாவும் வந்திருவாங்க என்டு சொன்னீங்க இன்னும் வரல குட்டிப்பயலே வந்திருவாங்கடே தங்கச்சியை பாரு சொல்லி சிரிச்சிக்கிட்டு இருந்தோம். நேரம் செல்ல செல்ல பசியுடன் மெல்ல மெல்ல உணர்வு காட்டியது அண்ணா பசிக்குது பொறுங்க அம்மா வந்திருவாங்க இவ்வளவு நேரமாகிட்டே அண்ணா பசிக்குது பொறுங்க ரெண்டும் பேரும் அடுப்பங்கரைக்கு சென்றேன். பூனை படுத்திருந்தது. சூய் சூய் என்று கலைத்தேன். பூனை ஓட அடுப்பில் விறக வைச்சு அடுப்ப மூட்டினேன். அப்புறம் என்னால் முடிந்தது ரொட்டி சுட்டு கொடுத்தேன். அடுப்பில் இருக்கும் போது எனது மனதில் சில எண்ணங்கள் சமையல் போது எனது அம்மா எவ்வளவு கஷ்டங்கள் பட்டு எங்களுக்கு உணவு தாராங்க புகை, வெட்கை, கண்எரிவு அன்று தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துகொண்டேன். என் காலத்தில் என் அம்மாவ நல்லாபாக்கனும் என்று நினைத்தேன். உணவு செய்து கொடுத்துவிட்டு அவர்களை தூங்க அழைத்துக்கொண்டு அறைக்குள் சென்றேன். தங்கை அண்ணா அம்மா வரமாட்டாங்களா அண்ணா வந்திருவாங்கம்மா நீங்க இப்ப தூங்குங்கடா ஆஆஆ அம்மா வந்தாதான் தூங்குவன் ம்ம்ம் அவங்க வருவாங்க அண்ணாவோட தூங்குங்க வானொலியில் பாட்டுப் போட்டன் பாட்டுக் கேட்டுக் கொண்டே இரண்டு பேரும் தூங்கிட்டாங்க. ஆனா என்னால தூங்க முடியல எங்கு பார்த்தாலும் நிசப்த்தம் எங்கேயோ தூரத்தில நாய் ஊளையிடுகின்றது இரவு பூச்சிகள் கத்துகின்ற சத்தம் கேட்கிறது அந்நேரத்தில் அம்மாவின் வருகைக்காக காத்திருக்கிறேன் என் கண்களில் இருந்து மெல்ல மெல்ல தண்ணீர் ஊற்று எடுப்பது போல கண்ணீர் ஊற்றெடுத்தது. கண்களை துடைத்து விட்டு அறைக்குள் சென்று தம்பி தங்கைக்கு குளிராமல் வைசீற் போத்திவிட்டு வந்து திண்ணையில் அமர்ந்தேன். கண்கள் வெளிகதவ பார்த்து கொண்டு இருந்தது. நேரம் செல்ல செல்ல கண்களும் மெல்ல மெல்ல மூடத்தொடங்கியது. திடீர் என்று கண்களை முழித்துப்பார்த்தேன். காலை 4.00மணி வானொலியை போட்டேன். பரபரப்பான செய்திகளைக் கூறினார்கள். இரவு 12.00 மணியளவில் சுமத்திரா தீவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் இலங்கையின் கரையோரப்பிரதேசத்தில் சுனாமி வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டது. முல்லைதீவு. திருகோணமலை கொழும்பு, மட்டக்களப்பு போன்ற கடற்கரைப் பிரதேசங்கள் என்று வானொலியில் செய்தி சொன்னார்கள். பச்சை மரத்தில் இடிவிழுந்தது போல எனது உள்ளம் உடைந்தது உள்ளே ஓடி போய் அறைக்குள் தூங்கி கொண்டு இருந்த தம்பி தங்கையை தூக்கி கொண்டு கடலை நோக்கி கண்ணீர் காற்றில் கரைந்தது. பரக்க பரக்க ஓடிச் சென்றேன். எங்கு பார்த்தாலும் அழுகுரலும் பிணக் காடுகளாக இருந்தது. அங்க இருக்கிற அண்ணாட்ட போய் கேட்டன் என்கட அம்மா அப்பாவ பார்த்தீங்களா என்று கேட்டன் இங்கப் பார்க்கல அப்படியே அழைந்து திரிஞ்சு பார்த்தேன் சூரிய வெப்பம் ஈரமண்ணில் வெப்பமாகியது கால்கள் சுட ஆரம்பித்தது கால்களில் செருப்பும் இல்லாமல் சாட்டினன் வலிகளுடன் அம்மா அப்பாவையும் தேடினேன் எங்கும் தேடி கிடைக்கல சரத் டேய் என்ற குரல் கேட்டது அம்மா கூப்பிடுறானு நெனச்சு திரும்பினன். ஆனா அம்மா வேற ஒருவர் சொன்னாங்க உங்க அம்மா அப்பாவ ஹொஸ்பிடலுக்கு கொண்டு போய்ட்டாங்க எந்த ஹொஸ்பிடல் முல்லைத் தீவு தம்பி ஒரு கையில தங்கைச்சி இடுப்பில கொண்டு அழுது கொண்டு ஹொஸ்பிடல் நோக்கி ஓடினேன்

வைத்தியசாலையில் பிணங்கள் நிறைந்து போனது கால், கை, உடம்பு காயங்களுடன் சிறு பிள்ளைகள் தொடக்கம் முதியவர் வரை கொண்டிருந்தனர். என்னால் பார்க்க முடியவில்லை பார்க்க பார்க்க கண்ணீர் சாரை சாரையாக கொட்டியது. அங்கு தாதியர் ஒருவர் பெயர்கள் வைத்த புத்தகத்துடன் வந்தார் அண்ணா கல்யாணி செந்தில்ராசா என்ற பெயரில் இருக்கா என்றேன் பொறு தம்பி பாத்து சொல்றன் என்டா தம்பி இருக்கப்பா இறந்துட்டாங்க நெஞ்சில் ஆணி அறைந்தது போல இருந்தது தம்பி தங்கை நான் கத்திய சத்தம் வைத்தியசாலை எங்கும் கேட்டது. அம்மா அப்பா இரண்டும் பேரும் நம்முடன் இருக்கும் போது அவங்கள நல்லாப்பாத்துக் கொள்ளனும். எங்க அண்ணா அந்த மூடி இருந்தத போய் பாருடா கிட்ட போய் மெல்ல மெல்ல திறந்தேன். சரத்து என்னடா நல்லதூக்கமா இந்த டீயை குடிச்சிட்டு ஸ்கூலுக்கு வெளிக்கிடு. அம்மா என்று அழுது கொண்டு படுக்கையை விட்டு எழுந்து அம்மாவைக் கட்டிப்பிடிச்சன் ஓடி போய் அப்பாவையும் கட்டி அனைத்து பாடசாலை வெளிக்கிட்டேன் அவன் கனவில் வந்த தாதியர் கூறிய விடயம் ஞாபகம் வந்தது. அம்மா அப்பா இரண்டு பேரும் இப்ப எங்களுக்கு அடிக்கிறது பேசுறது எல்லாம் நாங்க அவங்க போல கஷ்டப்படாமல் படிச்சு நல்ல வேலைக்கு போய் நல்லா இருக்கனும் என்று அவங்களை எப்போது நல்லாப் பார்த்துக் கொள்ளனும் என்று கூறினார்.இனி நான் நல்லா படிப்பேன் பாடசாலை திரும்பி வீட்டுக்கு வந்தேன் கால், முகம் கழுவி சாப்பிட போனேன் அம்மா அருகில் வந்து தம்பி உன்னை இல்லத்தில் சேர்க்கட்டா நல்ல படிப்பு நல்ல சாப்பாடு நல்லா பாத்துக்குவாங்க படிக்றீயா தம்பி நானும் மறுவார்த்தை இல்லாமல் நானும் ஓம் என்று சொன்னேன். என்ன காரணமென்று புரிந்த பின் இல்லம் வந்தேன் அதுவரை இல்லத்தின்ட பெயர் தெரியாது பிறகு மெல்ல மெல்ல தெரிய வந்திச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீஸ்வர அடிவாரத்தில் உள்ள சிவன் அருன் இல்லம் சரியம்மா தம்பி தங்கை பாத்து கொள்ளுங்க என்டு சொல்லிட்டு அம்மாவின் கஷ்டடத்தை இல்லாது ஒழிக்க எனது இலட்சியத்தை நோக்கிய பாதையில் கால்வைத்தேன். இல்லத்தில் புதிய நண்பர்கள் கிடைத்தார்கள். தரம் 7ம் வகுப்பில் இல்லத்தில் கால் வைத்தேன் படிப்பு என்றால் பிடிக்காது என்று உணர்ந்த எனக்கு படித்தால் தான் நல்ல கல்விமான் ஆகலாம் என்ற சிந்தனையை எனக்குள் விளைந்தது. இச் சிவன் அருள் இல்லத்தில் காலங்கள் உருண்டு ஓடியது வயதும் ஓடியது தரம் 10க்கு வந்தேன். எல்லோருடன் நல்லா சந்தோசமாக போனது தரம் 10இல் புதிய மாணவர்கள் மாணவிகள் சேர்ந்தாங்க. சரியான மகிழ்ச்சி ஆனால் வயதும் ஓடியது மன்மதன் என்ன செய்தானோ தெரியல என் மீது காதல் அம்பை ஈர்த்தான். எனது கிளாசில் அம்மு என்ற பிள்ளையை காதல் கொண்டேன். நானும் நோக்க அவளும் நோக்கினால் என்ன எனக்கு கொஞ்சம் கெத்து இப்படியே பாடசாலை விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. விளையாட்டில் ஆர்வம் நிறைய இருக்கு பாடசாலை மட்டம், கோட்டம், வலயம், மாகாணம், தேசிய மட்டம் வரை சென்றேன். இப்படியே காலங்கள் உருண்டு போனது நானும் O/L வந்திச்சி ஓ..சொறி என்ன மறந்திட்டன் இந்த காதல் இல்லத்தில் தெரிஞ்சி பிரச்சனை என் மனதில் சிறு வேதனை என்னால் அம்முக்கு பிரச்சனை வந்திட்டு இப்படியே எனது எண்ணத்தில் அம்மாவின் ஆசைகளும் என்னுடைய ஆசைகளை சுமந்து O/L எழுதினேன் எனது பெறுபேறுகள் 2B 3C 3S கிடைச்சது A/L புதிய மாணவர்கள் உயர்தரம் என்றாலே கெத்துதானே இப்படியே காதலும் ஓடியது. அதோட வருடம் விளையாட்டு போட்டிகளும் தேசியம் வரை சென்றேன். A/L பரீட்சை வந்தது எழுதினேன் அந்த சிறிய 6 மாதத்தில் கணணி நெறியை கற்றேன் A/L பெறுபேறுகள் A 2C கிடைத்தது விளையாட்டுத் துறையில் ஆர்வம் எனக்கு விளையாட்டு விஞ்ஞான முகாதைத்துவம் பாட சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டேன். அதே போல் அம்மு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவு கிடைத்தது. இப்போது 3ம் வருடத்தில் படிக்கின்றோம். அம்மான்ட கனவுகளை நனவாக்க கர்த்தாவாக இருந்தவங்க சிவனருள் நிறுவனர் Dr.J நமசிவாயம் மஞ்சுளா, நமச்சிவாயம், Dr. ஜெயமோகன் இவ் இல்ல நிறுவனங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். மற்றும் பணிப்பாளர்கள், பணியாளர்கள், அனைவருக்கு நன்றிகள். பணிப்பாளர்களுடைய காலம் என்றால் திரு. மாணிக்க வாசகர் ஐயா மற்றும் சசி ஐயா இருவருடன் காலம் வளர்ச்சி காலம் அதே போல திரு.செல்வரஞ்சன் Sir காலம் ஓர் பொற்காலம் என்று சொல்லலாம். பொற்காலம் என்ற அனைத்து துறையிலும் வளர்ச்சி கண்டது. சிவன் அருள் இல்லம் செல்லரஞ்சன் ஐசை பற்றி சொல்லனும் என்டா தலை மன்னார் மற்றும் எருக்கலம் பிட்டி தேசிய பாடசாலைகளில் அதிபராக இருந்து இன்று ஓய்வு நிலையை பெற்று இன்று சிவன் அருள் இல்லத்தின் பணிப்பாளராக வலம் வருகின்றார். பிள்ளைகளின் மனதில் இருக்கும் இலட்சியமான மரத்திற்கு உரமாக இருக்கின்றன. அவர்கள் மனதை புரிந்து இல்லத்தையும், பிள்ளைகளையும் நல்வழியில் கொண்டு செல்கின்றார். பணிப்பாளர்களுடன் பழகிய விதம் பிள்ளைகளுடன் பழகிய விதம் எப்போதும் அது ஒரு நீங்காத நினைவுகளாக உள்ளது. அவர் இரண்டு வருடங்கள் பூர்த்தி செய்து, 3ம் வருடம் தொடங்கி செல்கின்றது. மதிப்பிற்குரிய திரு. செல்வரஞ்சன் சேர் அவர்களின் பணிகள் தொடர எனது வாழ்த்துக்களுடன் என்னைப் போல் பல துறையில் அனைத்து பிள்ளைகளையும் வெற்றியோடு முன்னெடுக்க வாழ்த்துக்கள்

'மனதில் நினைத்து கொள் உன்னை விட இங்கு யாரும் பெரியார் இல்ல" என் இலட்சியத்தை தொடரும் வரை ஓடு. பயிற்சி மற்றும் முயற்சி இரண்டும் என் விடிவைச் செய்யும் ஒளி. எனது அம்மாவின் ஆசை நிறை வேறும் வரைக்கும் எனது வேட்கை தொடரும் ....

**செல்வன் S.ஸ்ரீமுகுந்தன்**
சிவனருள் இல்லம்
(சப்ரகமுவ பல்கலைக்கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் நட்புக்கு...

எங்கோ பிறந்தோம்
எம் இல்லத்தில் இணைந்தோம்
நாம் நண்பர்கள் ஆனோம்
நாட்டில் வாழ்வைக் கழித்தோம்
சிலர் நம்மை எதிர்த்தும்
பலர் எம்மை அன்பாகவும்
பார்த்து பழகினர்.

ஆயிரம் பேர் எதிர்த்தாலும்
நம் நட்பின் பயணம்
இடைவிலகாது தொடரும்.....
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
நம் நட்பின்
இலக்கணமாய் இணைவோம்
இது தான் எம் நட்பின் வாழ்க்கை.....

சிறகடித்ததுப் பறக்கின்ற
சின்னப் பறவைகள் போல்
உறவிலே நிறைந்து
உவகை பொங்கி
கறைகளற்ற உள்ளத்துடன்
களிப்புடன் வாழ்வதே
எம் இனிய நட்பு

உண்மையான நட்பில்
சொந்தமான கனிகள்
ஒரு போதும்
செத்துப் போகாது.
சிவனருள் இல்லமென்னும்
பெருவிருட்சத்தில்
பல்வேறு இடங்களிலிருந்து வந்த
பறவைகள் நாம் ஒன்றுகூடி
மகிழும் ஆனந்த சோலை
அறிவுச் சோலை
சிவனருள் இல்லம்

**ப.டக்ஷன்**
தரம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனருள் உற்பத்திகள் தனியார் நிறுவனத்தின் வரலாறு

இலங்கையிலே 2009ம் ஆண்டு நிறைவுற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எம் தமிழின மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் முகமாக Dr. ஜெயந்திரன் நமசிவாயம் மற்றும் Dr. ஜெயமோகன் ஆகிய இரு குடும்பத்தாரின் நிதிப்பங்களிப்பில் பல நிவாரண உதவித்திட்டங்கள் என்பன மேற்கொள்ளப்பட்டுவந்தன. இவ்வாறாக நிவாரண உதவிகளிற்கு அப்பால் வடமாகாணத்தில் அதிலும் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தில் கணவனை இழந்த பெண்தலைமைக் குடும்பப் பெண்களின் ஆர்வத்தினை அறிந்து அவ்வாறான அப்பெண்களிற்கு நிரந்தரமான வேலைவாய்ப்பினை வழங்கவேண்டும் என்கின்ற நல்நோக்கத்தில் உருவாக்கம் பெற்றதே இச் "சிவனருள் உற்பத்திகள் தனியார் கம்பனி" ஆகும்.

இச்சிவனருள் கம்பனியின் ஆரம்பகால வரலாற்றினை மிகச் சுருக்கமாக நோக்கின் 2012ம் ஆண்டு மார்கழி மாதம் 15ம் திகதியன்று இக்கம்பனியானது 05 பணியாளர்களுடன் **"திருக்கேதீச்சரம் சிவனருள் தொழிற்பயிற்சி உற்பத்தி மையம்"** என்ற பெயரில் D7, உருத்திரபுரம் வீதி, பெரியபரந்தன் எனும் முகவரியில் ஆரம்பிக்கப்பட்டது. இக்கம்பனியின் பிரதான நோக்கம் யாதெனில் மேற்கூறியதனைப் போன்று வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களினதும் மற்றும் உடல் அங்கவீனமுற்ற மாற்றுத்திறனாளிகளினதும் வாழ்வாதாரத்தினை முன்னேற்றுவதேயாகும். இக் கம்பனியானது நிரந்தரமான கட்டடங்கள் இன்றியும் நீர் மற்றும் மின்சாரமின்றியும் ஓர் குறிப்பிட்ட மோட்டர் இயந்திரங்களினை டீசல் என்ஜின் உதவியுடன் சில உற்பத்திப் பொருட்களை உற்பத்திசெய்து விற்றுவந்தனர் எனலாம். அவ்வாறான உற்பத்திப் பொருட்களாக "யாழ்ப்பாணக்கறித்தூள், வறுத்த உழுந்துமா, பயற்றம்மா மற்றும் தேங்காய் எண்ணெய்" என்பனவாகும்.

இவ்வாறான ஆரம்பகால முன்னேற்றப்பாதையின் விளைவாக இக்கம்பனியானது 2013.06.04 அன்று வியாபாரப் பெயர் கட்டளைச்சட்டம் "அத் 549 கீழ் DN - 810"ம் இலக்கத்தின் கீழ் திருக்கேதீஸ்வரம் சிவனருள் தொழிற்பயிற்சி மையம் எனும் பெயரில் பதிவு செய்யப்பட்டதோடு இக்கம்பனியின் பங்குடைமையாளர்களாக திரு.DR.ப.நந்தகுமார் திரு.சி.திருஞானசம்பந்தர், திரு.சு.மோகனகுமார் மற்றும் திரு.க.தேவராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டனர். அத்துடன் இக்கம்பனியின் ஆரம்ப உற்பத்திப் பொருட்களிற்கான மூலப்பொருட்கள் களஞ்சியப்படுத்தல் என்பன ஒரே கட்டடத்தின் கீழேயே இயங்கி வந்தது. அத்துடன் இக்கம்பனியின் உற்பத்திப் பொருட்களினை விற்பனை செய்வதற்காக 10.08.2013 அன்று NPPW-3119 எனும் இலக்கத்தில் பொருட்கள் விற்பனை செய்தனர் எனலாம்.

மேலும் இக்கம்பனியில் பணியாற்றும் பணியாளர்களின் பிள்ளைகளினை பராமரிப்பதற்காக ஐந்து காந்தி இல்லம், நியூஸ்லாந்து ஆகியவர்களின் நிதி அனுசரணையுடன் "மல்லிகை" எனும் பெயரில் பராமரிப்புக் கட்டடம் அமையப் பெற்றதோடு எம் பணியாளர்களினதும் உதவியுடன் நெல் களஞ்சியப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் அரிசி உற்பத்தி என்பவற்றிற்கான கட்டடமும் மேலும் சந்தைப்படுத்தலினை அதிகரிக்கும் முகமாக 21.08.2014ம் ஆண்டு NPLN-3759ம் இலக்கத்தினையுடைய வாகனமும் 21.09.2014 அன்று NPLM-4552 எனும் இலக்கத்தினையுடைய வாகனம் என்பன கொள்முதல் செய்யப்பட்டு எம் உற்பத்தியினை விரிவுபடுத்திக் கொண்டனர் எனலாம். இவற்றுடன் பணியாளர்களின் நலன் கருதி ஆரம்ப காலந்தொட்டு இன்றுவரை இரு நேரத் தேநீர் மற்றும் மதிய உணவு போன்றன வழங்கப்பட்டுவருவதோடு அவர்களிற்கான ஓய்வு விடுதி என்பனவும் அமைத்துக் கொடுக்கப்பட்டது எனலாம். இவற்றுடன் 2015ம் ஆண்டு மற்றும் 2016ம் ஆண்டுகாலங்களில் கற்பிணித்தாய்மார்களிற்கான பொதிகள் என்பன சமூர்த்தி வங்கிகளினூடான சாவகச்சேரி, கைதடி, வரணி மற்றும் கொடிகாமம் ஆகிய பிரதேசங்களிற்கு வழங்கப்பட்டதோடு பின்தங்கிய மாவட்டங்களில் கல்விபயிலும் மாணவர்களிற்கான சத்துமா என்பனவும் இன்றுவரை வழங்கப்பட்டு வருகின்றன என்றே கூற வேண்டும். அதாவது இச்சத்துமாத்திட்டமானது வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் போன்ற மாகாணங்களிற்கு விநியோகம் செய்யப்படுகின்றது.

அத்துடன் எமது சிவனருள் கம்பனியில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து மட்டுமல்லாது ஏனைய மாவட்டத்திலிருந்து பணியாளர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவதனால் அவர்களின் நலன்கருதி 05.02.2016ம் ஆண்டு திருமதி கந்தையா தருமலிங்கம், Mr.Michel Par (Chief of Parr VEGA BIZ) ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் ஓர் அழகிய தங்குமிட விடுதி ஸ்தாபிக்கப்பட்டதெனலாம். அத்துடன் ஆரம்பகாலந் தொட்டு திருக்கேதீஸ்வரம் சிவனருள் தொழிற்பயிற்சி மையம் எனும் பெயரில் இயங்கிவந்த இக்கம்பனியானது 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிச்சட்டம் தனியார் கம்பனிக்கட்டமைப்பு சான்றுதழ் பிரிவு 5இன் பிரகாரம்

PV-114818 "சிவனருள் உற்பத்திகள் தனியார் நிறுவனம்" என 2016ம் ஆண்டு ஆடி மாதம் 04ம் திகதி பதிவு செய்யப்பட்டதோடு இந்நிறுவனத்திற்காக DR.நமசிவாயம், திரு.க.தேவராஜா மற்றும் DR.இ.கஜேந்திரா ஆகியோர் இயக்குநர் சபை உறுப்பினர்களாகச் செய்யப்பட்டனர் எனலாம்.

இவற்றோடல்லாமல் எமது கம்பனியின் வளர்ச்சிப்போக்கினைக் கருத்திற்கொண்டு 2018ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14ம் திகதியன்று Maczarie Groun Staff Maczuraie Group Foundation நிறுவனத்தின் நிதியனுசரணையுடன் எமது கம்பனிக்கான மூலப்பொருட்களிற்கானதும் மற்றும் முடிவுப் பொருட்களிற்குமானதோர் கட்டடம் அமைக்கப்பட்டதோடு 2016ம் ஆண்டு காளான் உற்பத்தியினையும் ஊக்குவிக்கும் முகமாக காளான் உற்பத்தி மையமும் அமைக்கப்பட்டு அவற்றினை உள்ளூரிலேயே விற்பனை செய்தும் வந்தனர். இவ்வாறாக எமது உற்பத்திப் பொருட்களின் விற்பனையினை விரிவுபடுத்தும் முகமாக 11.11.2015ம் ஆண்டு NPLM-0179 இக்கத்தினையுடையதும் மற்றும் 2.08.2016ம் ஆண்டு NPRE-5825 எனும் இலக்கத்தினையுடையதுமாக இரு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இவ்வாறாக வாகனக் கொள்முதல்களின் பிரகாரம் இன்று எமது உற்பத்திப்பொருட்கள் வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய மாகாணங்களில் விற்பனை செய்யப்படுகின்றதோடு மட்டுமல்லாது கனடா, இங்கிலாந்து, சுவிஸ் மற்றும் அவுஸ்ரேலியா போன்ற வெளிநாடுகளிற்கு இன்றும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இவ்வாறான பெருவளர்ச்சிக்குக் காரணம் எமது உற்பத்திகள் எவற்றிலும் செயற்கைக் கலவைகளோ, நிறமூட்டிகளோ பயன்படுத்தப்படாமையே ஆகும். இதனாலேயே எமது கம்பனியின் மகுடவாசகம் "ஆரோக்கியமான உணவு மற்றும் ஆரோக்கியமான வாழ்வு" என்பதாகக் காணப்படுகின்றது. இவற்றுடன் மேற்குறிப்பிட்ட உற்பத்திகளிற்கு அப்பால் மேலதிகமாக தனித்தூள், கட்டைத்தூள் அவித்தகோதுமை மா, நவபோசா, கடலைமா, வெள்ளை அரிசிமா, குரக்கன்மா மற்றும் ஒடியல்மா போன்ற உற்பத்திகள் இன்று விற்பனை செய்யப்படுகின்றன எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான கலப்படமற்ற உற்பத்திகளினை மேற்கொள்வதனால் 2019ம் ஆண்டு வைகாசி மாதம் 03 திகதி GSP/GSTP/SAPTA/ISFAT/PSFAT மற்றும் APTA ஆகியவற்றின் கீழ் மூலச்சான்றிதழ் வழங்குவதற்கான வர்த்தகத்துறையில் D/COM/R04560 எனும் இல்லத்தின் கீழ் எமது நிறுவனமானது ஏற்றுமதியாளர் ஆதனப் பதிவினைப் பெற்றுக் கொண்டது எனலாம். அத்துடன் எமது கம்பனி பருவகால உற்பத்திப் பொருட்களான வடகம், ஊறுகாய், ஒடியல், பனம்பாணி போன்றவற்றையும் விற்பனை செய்கின்றமையினையும் குறிப்பிடவேண்டியதோர் விடயமாகும். இவ்வாறான உற்பத்திப் பொருட்களின் விரிவாக்கத்தினால் எமது நிறுவனத்தின் ஆவணங்களினை சரியான முறையில் பேணுவதற்காக 2019ம் ஆண்டு காலப்பகுதியில் கம்பனிக்கான நிரந்தர அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளதோடு அலுவலகப் பணியாளர்களிற்கான மலசலகூட வசதியினையும் நிர்மாணித்தனர் எனலாம்.

இவை தவிர இச்சிவனருள் உற்பத்திகள் நிறுவனமானது மேலும் வேலைவாய்ப்பினை வழங்கும் முகமாக சிவனருள் தையல் நிலையத்தினை நிறுவியதோடு அவற்றினை கிளிநொச்சி மாவட்டத்தில் விற்பனை செய்தும் வருகின்றனர். அத்துடன் சிவனருள் இல்லப் பிள்ளைகளின் பாடசாலைச் சீருடைகள், பெண்பிள்ளைகளினது கலாச்சார உடைகள் போன்றவற்றினையும் தைத்துக் கொடுக்கின்றமையினையும் குறிப்பிட முடியும். மேலும் எமது பெண் பணியாளர்களினது வேலையினை இலகுபடுத்தும் வகையில் இந்திய நாட்டிலிருந்து தூள் உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்கள் மற்றும் மா உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்கள் என்பன பொருத்தப்பட்டு பணியாளர்களினுடைய வேலையினை இலகுபடுத்திக் கொடுத்ததோடு மட்டுமன்றி பாரங்களினைத் தூக்குவதற்கான Fork Lift இயந்திரமும் கொள்வனவு செய்யப்பட்டது. இவ்வாறான பலகோடி பெறுமதியான சொத்துக்களினைப் பாதுகாக்கும் வகையில் CCTV கமராக்கள் பொருத்தப்பட்டதோடு பகல் மற்றும் இரவுக் காவலாளிகள் போன்றவற்றினையும் நியமித்தனர்.

அத்துடன் எமது நிறுவனமானது உள்ளூர் உற்பத்தியாளர்களின் பொருளாவாரத்தினை மேம்படுத்தும் வகையில் கூடுதலான மூலப் பொருட்களினை உள்ளூர் விவசாயிகளிடமிருந்தே பெற்றுக் கொள்கின்றனர். இவற்றோடு எமது நிறுவனமானது மின்சாரப் பாவனையைக் குறைக்கும் விதமாக சூரிய மின்கலப்படலங்களினையும் பொருத்தியுள்ளது. இன்று எமது தனியார் கம்பனியானது ஆவணங்களினை இலகுவான முறையில் பாதுகாக்கும் வகையில் ERP என்கின்ற இலகுமுறையினை 2020ம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தி வருகின்றதோடு எமது கம்பனி கலப்படமற்ற உற்பத்தியென்பதற்குச் சான்றாக GMP, ISO, SLO போன்ற தரநிர்ணயச் சான்றிதழ்கள் என்பனவும் கிடைக்கப்பெற்றது. மேலும் ஆரம்பகாலந்தொட்டு இன்றுவரை தங்களினுடைய முழுமையான ஒத்துழைப்பினை இன்று வரை வழங்கின்ற பெண் பணியாளர்களினது விடாமுயற்சியினால் இச்சிவனருள் உற்பத்திகள் தனியார் கம்பனியானது பல விருதுகளினையும், சான்றிதழ்களினையும் பெற்றுக் கொண்டமையானது சிறந்த எடுத்துக்காட்டென்றே கூற வேண்டும்.

அவ்வாறான விருதுகளாக,

- Market Expiation of North-september2016
- 25th Annual NCE-Export Awards-2017
- Certication of Achievement-Northern Enter Pruner Awards-2018 (Best productive Enterprise)
- 26th Annual NCE Export Awards-2018
- Lak Lak Kariya Harasara Excellence Gold Awards-2019
- Department of Manpower and Employment

போன்றவற்றினைக் கூறமுடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றிதழ்களின் விபரம்

| Certificate Name | Certificate No | Date of Certification |
|---|---|---|
| GAP Certified | GMP 0755 | 2016.02.18 |
| HACCP System Certified | HSC 02804 | 2016.12.09 |
| ISO22000-2018 FSMS | FSC03201 | 2016.12.09 |
| SLS Mark for the Jaffna Curry Powder | Permit No 1789 | 2017.12.07 |
| SLS Mark for Turmeric Powder | Permit No1791 | 2017.12.07 |
| SLS Mark for the Chilli Powder | Permit No 1790 | 2017.12.07 |

**GMP** - Good Manufacturing Practies
**HACCP** - Hazard Analysis Critical Contorol point
**ISO** - 22000 - 2018 Food Safwty Management Aystem
**SLS** - Sri Lanka Standards Institute

அதுமட்டுமல்லாது இக்கம்பனியானது 1989ம் ஆண்டின் தேசிய சுற்றுச்சூழல் சட்டம் எண் 47 பிரிவு 23இன் கீழ் வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமம் என்பதனையும் பெற்றுக்கொண்டது எனலாம்.

இவ்வாறாக பல நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் இயங்கி வந்த இக்கம்பனியானது 2022 ஆண்டில் ஓர் புதிய முகாமையாளரின் நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்றது. இப்புதிய முகாமையாளரின் எதிர்காலத் திட்டங்களாக மூலப்பொருட்கள் தொடக்கம் முடிவுப் பொருட்கள் வரை இயந்திரங்களின் மூலமான உற்பத்தி செய்தல், ஏனைய மாவட்டங்களிலும் ஏற்றுமதி செய்யப்படாத நாடுகளிற்கும் எமது உற்பத்தியினைக் கொண்டுசேர்த்தல் மற்றும் மக்களின் அன்றாடத் தேவைகளினை பூர்த்திசெய்யக்கூடிய மேலும் பல உற்பத்திகளினை மேற்கொள்ளல் என்பனவாகும். ஆகவே எமது சிவனருள் உற்பத்தியின் வளர்ச்சியானது எமது சமூகநல சேவையை மேலும் மேம்படுத்தும் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் அருளும் கிழக்கிலங்கையின் சமூக மேம்பாட்டு நற்பணிகளும்

SIVAN ARUL FOUNDATION

### ஆரம்பம்



இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் வாழ்கின்ற விசேடமாக தமிழ் உறவுகள் பலதரப்பட்ட இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றமையினை சிவன் அருள் அறக்கட்டளையின் ஸ்தாபகரும் சமூக சேவை செயற்பாட்டாளருமான வைத்திய கலாநிதி ஜெ.நமசிவாயம் அவர்கள் நன்குணர்ந்து இங்குள்ள மக்களுக்கு நீடித்து நிலைத்து நிற்கும் வகையில் தொடர்ச்சியான நற்பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்ற நல்நோக்கத்தின் அடிப்படையில் "சிவன் அருள் பவுண்டேசன்" என்ற பெயரில் சமூக சேவை பணிகளில் அனுபவமுள்ளவர்களையும் மற்றும் சிவன் அருள் அறக்கட்டளை ஸ்தாபகர்களையும் உள்வாங்கி நிர்வாக ஒழுங்கில் 2016.07.01ம் திகதி இலாப நோக்கமற்ற கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு அன்று தொட்டு இன்று வரை செயற்றிட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.



முதன் முதலில் அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலக பிரிவில் அம்மன் மகளிர் இல்ல காணி வளாகத்தில் தூண் இடப்பட்டு அடித்தளம் வரை கட்டப்பட்டு நிதி பற்றாக்குறையால் பூரணப்படுத்தப்படாத கட்டிடம் சிவன் அருள் பவுண்டேசனால் பொறுப்பெடுக்கப்பட்டு பூரணத்துவப்படுத்தப்பட்டு சிவன் அருள் கணினி தொழிற்பயிற்சி கல்வி நிலையமாக உருவாக்கம் பெற்று செயற்றிட்ட பணிகள் ஆரம்பமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவன் அருள் அறப்பணி குடும்ப நல்லுள்ளங்களின் நிதி பங்களிப்பிலான கிழக்கிலங்கையின் செயற்றிட்டங்கள்

### கணனி தொழிற்பயிற்சி நிலையம்



அம்பாறை மாவட்டத்தில் ஆலையடிவேம்பு பிரதேச செயலக பிரிவில் சிவன் அருள் கணனி தொழிற்பயிற்சி நிலையம் அமைந்துள்ளது. இந்நிலையமானது மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டு கணனி தொழில்சார் பாடநெறிகள் மற்றும் தகவல் தொழினுட்ப பாடங்களையும் முன்னெடுத்து வருகின்றது. இதன்படி ஆலையடிவேம்பு, திருக்கோவில் பிரதேச செயலக பிரிவில் உள்ள மாணவர்கள், இளைஞர் யுவதிகளும் அரச அங்கீகாரம் உள்ள சான்றிதழ்களை, தொழில் வாய்ப்புக்களை பெறுவதற்கும் இந்நிலையம் பேருதவியாக அமைந்துள்ளது.

### இலவச கல்வி நிலையங்கள்

அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலக பிரிவில் கோளாவில் கிராமத்தில் சிவன் அருள் கணனி நிலையத்திற்கு அருகில் "சிவன் அருள் கல்வி நிலையம் - அக்கரைப்பற்று", மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் காஞ்சிரங்குடா கிராமத்தில் "சிவனருள் கறிற்றாஸ் கல்வி நிலையம் - காஞ்சிரங்குடா" திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலக பிரிவில் நீனாக்கோணி கிராமத்தில் " சிவன் அருள் இளந்தளிர் கல்வி நிலையம் - நீனாக்கேணி" போன்ற கல்வி நிலையங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.



தூர இடங்களுக்கு சென்று மாலை நேர கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ளமுடியாத, குடும்ப வறுமை காரணமாக கல்வி நிலையங்களுக்கு பணம் செலுத்தி கற்க முடியாத பிள்ளைகளுக்கு, பெற்றோர்களுக்கு இந்நிலையமானது அளப்பரிய பணியை ஆற்றுகின்றது.

மேற்படி நிலையங்களில் நீனாக்கேணி சிவன் அருள் இளந்தளிர் கல்வி நிலையமானது திருமலை மூதூர் பிரதேச செயலக பிரிவில் பழங்குடி கிராம பிள்ளைகளின் எதிர்கால கல்வியை கருத்திற்கொண்டு அமைக்கப்பட்டது. கல்வியின் முக்கியத்துவம் அற்று வாழ்ந்து வருகின்ற ஓர் சமூகத்திற்கு தேவையான வலுவூட்டல் பணிகளை படிப்படியாக தொடர்ச்சியாக வழங்கி சவால் நிறைந்த இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### அறநெறி நுண்கலைக் கல்வி நிலையம்



அம்பாறை மாவட்டத்தில் மதமாற்ற செயற்பாடுகளுக்கு உள்வாங்கப்படும் சவால் மிக்க எல்லைக் கிராமங்களில் அறநெறி நுண்கலைக் கல்வி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளது. இதன்படி சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் கோரக்கர் அறநெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்கலைக் கல்வி நிலையம், நாவிதன்வெளியில் நாவிதன்வெளி நுண்கலைக் கல்வி நிலையம், நிந்துவூர் பிரதேச செயலக பிரிவில் அட்டப்பளம் நுண்கலைக் கல்வி நிலையங்களும் செயற்படுத்தப்படுகின்றுது.

இந்நிலையங்களில் இந்து – சைவ வாழ்க்கை முறைகளைக் கற்கவும், அதன்படி வாழ்வதற்கும், எண்ணம், சொல் மற்றும் செயலில் துய்மையும் இருக்க வேண்டும் என்ற விடயங்களில் மாணவர்கள் வலுவூட்டப்படுவதுடன் தியான வகுப்புக்கள், பன்னிசைகள், பரதநாட்டியம் போன்றனவும் முன்னெடுக்கப்படுகின்றது.

### முன்பள்ளி மேம்பாட்டுத் திட்டம்



அம்பாறை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய சிறிவள்ளிபுரம், விநாயகவும், தாண்டியடி கிராமங்களில் மூன்று முன்பள்ளிகளும். மட்டக்களப்பு மாவட்டத்தில் காஞ்சிரங்குடா சிவன் அருள் முன்பள்ளி மற்றும் திருமலை மாவட்டம் மூதூா் பிரதேச செயலக பிரிவில் பதினொரு பழங்குடி கிராமங்களில் உள்ள முன்பள்ளிகளும் பொறுப்பெடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

